# பவளவிழா சிறப்பு மலர்

1929 - 2004




## யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



## யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

# பவளவிழாச் சிறப்பு மலர்

## 1929-2004

## SOUVENIR FOR 75TH ANNIVERSARY

## 30.07.2004

## கல்லூரிக்கீதம்

போற்றுகின்றோம் போற்றுகின்றோம்
போற்றுகின்றோம் அன்னையே
ஏற்றமான வாழ்வில் எம்மை
வாழ வைக்கும் உன்னையே

போற்றுகின்றோம்

தங்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரித் தாயே
சகலகலை உதவி எம்மை வளர்த்தெடுப்பாய் நீயே
எங்கெங்கும் புகழறிவு தந்தருளுவாயே
எங்கள் மனக்கோயிலிலே என்றுமிருப்பாயே

போற்றுகின்றோம்

செகராஜசிங்கமென்பார் சீராட்டி வளர்க்க
தேடிவரும் மாணவர்க்கு பயனளித்தாய் செழிக்க
அகிலமெல்லாம் நின்னிடத்தே கற்றவர்கள் சிறக்க
அரியதுணை செய்தாயே அன்புநலம் சுரக்க

போற்றுகின்றோம்

சுகஞானம் தமிழ் கணிதம் உயிரியல் விஞ்ஞானம்
தொழுசமயம் ஆங்கிலம் சங்கீதம் புவிஞானம்
பகரும் வரலாறுடன் கைவேலை கமவேலை
பயிலோவியம் நடனம் கலைகள் கற்பித்தாயே
பயிலோவியம் நடனம் கலைகள் கற்பித்தாயே


போற்றுகின்றோம்

கற்பகம் போல் மாணவர்க்கு கதியருள் பாற்கடலே
காலமெல்லாம் நிலைத்து நிற்கும் ஒளிவிளக்கு மலையே
சொற்புகழார் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி

ஆக்கம்: அருட்கவி சீ.விநாசித்தம்பி

# மலர்க்குழு சொரியும் நன்றி மலர்கள்

எமது கல்லூரி இன்று தனது 75வது வருட சேவையைப் பூர்த்தி செய்து பவள விழாக் காணுகிறது. அதன்போது கல்லூரி இப்பவளவிழா மலரை வெளியிடுகின்றது.



இம்மலருக்கு நல்லாசிகள் வழங்கிய பெரியோருக்கும் ஆக்கங்கள் வழங்கிய விரிவுரையாளர், மாணவர்களுக்கும் கல்லூரியின் ஆசிரியர்களுக்கும் இம்மலர் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்த கல்லூரி குடும்பத்தினருக்கும் விளம்பரங்கள் தந்துதவியோருக்கும் இதனை அச்சிட்டு வழங்கிய கரிகணன் பிறிண்டேர்ஸ் பதிப்பகத்தினருக்கும், மேலும் மலர் பூரணத்துவம் பெற உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இம்மலர்க் குழுவானது நன்றி மலர்களைச் சொரிகின்றது.

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

திரு.இ.ஆனந்தநடராசா (உபஅதிபர்)

திரு.க.ஶ்ரீநந்தகோபன்

திருமதி.ச.பாலசுந்தரம்

திரு.வ.முருகதாஸ்

திருமதி.அ.முகுந்தன்

# சமர்ப்பணம்

சண்டிலிப்பாய் மற்றும் அயற்கிராம மக்களின்


கல்வி மேம்பாட்டுக்கு வித்திட்ட பெரியார்

ஸ்தாபகர்

அமரர் திரு.ப.மு.செகராஜசிங்கம் அவர்களுக்கு

இப்பவளவிழா மலர் சமர்ப்பணம்.

# எமது ஸ்தாபகர்



அமரர்

## திரு. ப. மு. செகராஜசிங்கம்


அவர்கள்

# எங்கள் அதிபர்




**ச. சிவநேஸ்வரன்** *B. COM (HONS) Dip. IN. ED*


# நிர்வாகக்குழு



**திரு. ச. சிவநேஸ்வரன் (அதிபர்)**
B.Com.(Hons), Dip.in.Edu SLPS I



**திருமதி. ச. ஸ்ரீகாந்தன்**
**(பிரதி அதிபர்)**
Dip.in.Agr.



**திரு. இ. ஆனந்தநடராஜா**
**(உப அதிபர்)**
B.A, Dip.in.Ed.



**திரு. நா. கணேசராஜா**
**(கனிஷ்ட அதிபர்)**
SLPS 2:I



**திரு. நா. கேதீஸ்வரன்**
**(விளையாட்டுத்துறை முதல்வர்)**
B.A, Dip.in.Ed.

## ஆசிரியர் குழாம்




இருப்பவர்கள் :-

**திருமதிகள்** – வ. பத்மநாதன், ச. பாலசுந்தரம், ச. சிவானந்தன், வி. கணேசராஜா, திரு. ச. கந்தசாமி, திருமதி. ச. சிறீகாந்தன் (பிரதி அதிபர்), திரு. ச. சிவநேஸ்வரன் (அதிபர்), திரு. இ.ஆனந்தநடராசா (உப அதிபர்), திரு. த. சிவசுப்பிரமணியம், திரு. நா. கேதீஸ்வரன். (POG)

**திருமதிகள்** – சு. கனகராஜசிங்கம், பு. இராஜலிங்கம், தெ. தில்லையம்பலம், செ. சண்முகம்.

**முன் வரிசையில் நிற்பவர்கள் :-**

செல்விகள் –பா. கலாதேவி, வை. சுபத்திரா, ச. சுகதர்சினி, க. ரேவதி, திருமதி. ஹே. சாந்தகுமார், திருமதி. ச. நாகராஜா, செல்வி. ல. கந்தையா, செல்வி. ய. சிவரத்தினம், திருமதி. ந. நாகேஸ்வரன், திருமதி. சா. ஜெயராஜன், செல்வி. செ. கணேசராஜா. செல்வி. அ. அருளானந்தம், செல்வி. யோ. தெய்வேந்திரம், செல்வி. ம. மலர்விழி, செல்வி. ஜெ. ஜெயந்தா.

**கடைசி வரிசையில் நிற்பவர்கள் :-**

திரு. ம. தயாளன், திரு. க. தபேசன், திரு. சி. பாலச்சந்திரன், திரு. வ. துவாரகன், திரு. க. சிறீநந்தகோபன், திரு. இ. புவனேந்திரன், திரு. வ. முருகதாஸ், திரு. பா. குகதாசன், திரு. க. சத்தியதாசன், திரு. கு. விமலன்.

# களிப்பு மிக வாழி வாழி



திருவோங்கு சண்டிலிப் பாயிந்துக் கல்லூரிச்
சிறப்புமலர் கலைக் கற்பகச்
சிகரமாய் மாணவர்கள் ஆசிரியக் குருமணிகள்
சேர்ந்து தரும் களஞ்சியமென,

உருவோங்கும் உலகெலாம் உண்மை யறி வானந்தம்
உதவும் ஒளி விளக்கு நிகர,
ஓங்கு தமிழ் சமயம் ஆங்கிலம் விஞ்ஞானம் தொழில் நுட்பம்
உயிர் காக்கும் கல்வி, மேலாம்

தருவோங்கும் இசைக்கலைகள் நுண்கணினி கணித வகை
புவி இயல் ஓவியம்
சரித்திரம் முதலான பாடவகை தந்துதவிச்
சகமெலாம் புகழ்ந்துவக்க

கருவோங்கு மெய்ஞ்ஞானக் கதிரவன் போற் பயன்
கருதுவார்க் கினிது நல்கி,
கற்பிப்போர், பெற்றார்கள் , மாணவர்கள் யாவரும்
களிப்பு மிக வாழி வாழி

அருட்கவி . சீ. விநாசித்தம்பி
நாகேஸ்வரம்,
அளவெட்டி.
(இலங்கை).

# ஆசிச்செய்தி



பவள விழாக்காணும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் விழாச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கல்வி வளர்ச்சியிலும், பண்பாடு ஒழுக்க நெறிகளிலும் தெய்வ நம்பிக்கைகளிலும் மாணவர்களை நெறிப்படுத்தி வருகின்ற சிறப்பு இக் கல்லூரிக்கு உண்டு. பகிரங்கப் பரீட்சையில் சித்தியடையச் செய்வது மாத்திரமல்ல, பண்பாடு, ஒழுக்க நெறிகளில் மாணவர்களுக்கு உறுதியான பற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாண்டு பவள விழாக்காணும் சிறந்த கல்லூரி இது ஆகும். அதிபரின் ஆளுமையும் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனும் மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வருகிறது எனலாம். ஆனால் இன்றைய சூழ்நிலைகளில் மாணவர்களுக்கு ஒழுக்கமும், பணிவும், ஆசிரியர்களை மதித்தலும், பெற்றோர்களைப் போற்றுதலும், பெரியோர்களைக் கனம் பண்ணுதலும் முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உள்ள உறவு இன்று அகலக்கிடக்கிறது. இதனை நெருக்கமாக்கிக் கொள்ளுதல் பாடசாலை சமூகத்தின் இன்றியமையாத கடமையாகும்.

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தான் அறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேண்டும் – அது
வாழும் முறைமையடி பாப்பா

பாரதியாரின் இவ் வாக்கு பாப்பாவின் மூலம் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் உணர்த்தப்படுகின்றது. மாணவர்களை நல்வழிப்படுத்தலில் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சம பங்கு உண்டு. இன்றைக்கு நகர்ப்புறப் பாடசாலைகளிலும் பார்க்க நாட்டுப்புறப் பாடசாலைகளிலேயே கல்வியும் ஒழுக்கமும் நன்கு பேணப்படுகின்றது. எனவே பவள விழாக் காணும் மேற்படி கல்லூரியை வாழ்த்தி மென்மேலும் உயர்வடைய வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,**
**சமாதான நீதிபதி,**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.**

# ஆசிச்செய்தி

ஒரு கிராமத்தின் நாகரிகம் கலை மக்களின் வாழ்க்கை முறைகளுக்கு அத்திவாரமாக விளங்கும் பாடசாலைகளின் செயற்பாடுகளைக் கொண்டு அக்கிராமத்தின் நாகரிகத்தை அறிந்து கொள்ள முடியும்.

குழந்தைகளுக்கு எழுத்தறிவூட்டுவதில் இருந்து நாட்டின் நற்பிரஜைகளாக ஆக்கும் வரையான ஒவ்வொரு படிமுறைகளிலும் பாடசாலையின் அதிபரினதும் ஆசிரியர்களினதும் முயற்சிகளின் வெளிப்பாடுகளைக் காணலாம்.

அந்த வகையில் வலிகாமம் வலயத்திலுள்ள சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி கல்வித்துறையில் மட்டுமல்லாது கலை பண்பாட்டு விளையாட்டுத்துறைகளிலும் மாகாண தேசிய மட்டங்களில் முத்திரை பதித்து வருகின்றது.

அண்மைக்கால போர் அனர்த்தங்களினாலும் இடம் பெயர்வுகளினாலும் பல்வேறு வகைகளிலும் பாதிக்கப்பட்ட சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதிலும் அதிபர் திரு.எஸ்.சிவநேஸ்வரன் அவர்களும் அவரது ஆசிரிய குழுவினரும் எடுத்துவரும் முயற்சிகள் முன் மாதிரியானவை.

ஒரு கல்லூரியின் வரலாற்றில் 75 வருடங்கள் என்பது மிகப்பெரிய ஒரு கால வரலாறு என்பதை அக்கல்லூரியில் இருந்து வெளியேறிய மாணவர்களின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டும். அந்த 75 வருட கால அனுபவங்கள் இன்று நினைவு கூரப்படும் பொழுது எதிர்கால திட்டமிடலுக்கான தரவுகளாகவும் அவை விளங்கும்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிச் சமூகம் இன்று பவளவிழாவை கொண்டாடும் நேரத்தில் அது தொடர்பாக வெளியிடப்படும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரியின் வளர்ச்சியில் அதிபரும் இவருடன் சேர்ந்து உழைக்கும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் எடுக்கும் முயற்சிகளுக்கு எனது பாராட்டுக்கள்.

**இ. தியாகலிங்கம்,**
**செயலாளர்,**
**வடக்கு-கிழக்கு மாகாணசபை,**
**திருகோணமலை.**

# ஆசிச்செய்தி



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி நான் அனந்தமாக நினைவுகூரும் பாடசாலைகளில் ஒன்று. காரணம், இது கிராமச் சூழல் மிளிர்வது, அடுத்து அதன் அதிபர் திரு.ச.சிவநேஸ்வரன் மிகத் திறமையானவர். நான் நேசிக்கும் அதிபர்களில் ஒருவர். எனது நன்மதிப்பிற்குரியவர். இதனால் இப்பாடசாலையின் பவளவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவது எனக்கு பெரும் மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறது.

இக்கல்லூரியின் சரித்திரம் நீண்டது. பல பரிமாணங்களைக் கொண்டது. சிறிய ஆங்கிலப் பாடசாலையாக அடிகொண்டு, அயற்பாடசாலைகள் இரண்டை இணைத்து இன்று இந்துக்கல்லூரியாக வளர்ந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் போர் நடந்த 1987 – இன்றுவரை சுறுசுறுப்புடன் துரிதமாக வளர்ந்துள்ளது. அதிபர் சோ.சோமசேகரம் இவ்வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டவர் என்பது எனது நினைவு. அடுத்து பாடசாலையின் பலதுறை வளர்ச்சிக்கும் பொறுப்பானவர். தற்போதைய அதிபர் திரு.ச.சிவநேஸ்வரன், தன்னை முழுமையாக இப்பாடசாலைக்கென அர்ப்பணித்தவர். இவர் காலத்தில் இப்பாடசாலையின் சாதனைகள் பல அவற்றுள் ஒன்று என்னால் மறக்க முடியாது.

1993ம் ஆண்டிற்குப் பின்னர் வலைப்பந்தாட்டத்தில் பல பெரிய பாடசாலைகளைத் தோற்கடித்து முன்நிலைக்கு வந்துள்ளது. இச்சாதனை கிராமப்புறப் பாடசாலைகள் வளர்ந்து நகர்புறத்து பெயர்போன பாடசாலைகளுக்குச் சவாலாக இருக்க வேண்டும் என விரும்பும் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மேலும் அண்மைக்காலங்களில் இப்பாடசாலையின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் நன்கு முன்னேறுகின்றன. மாணவர் பல துறைகளிலும் முன்னிலைக்கு வருகிறார்கள். இதே போக்கில் இப்பாடசாலை வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இம்மலரை வெளியிட்ட குழுவினரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

'வாழ்க சண்டிலிப்பாய்'
'வளர்க சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி'

திரு. க. கந்தசாமி,
முன்னாள் மாகாண கல்விப்பணிப்பாளர்.

# ஆசிச்செய்தி



நீண்டதொரு கல்விப்பயணத்தினைக் கொண்ட யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி பவளவிழாக் கொண்டாடப்போகும் செய்தி கேட்டு அகமகிழ்வடைகின்றேன்.

20ம் நூற்றாண்டில் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இன்று பவளவிழாவினைக் கொண்டாட முனைந்துள்ளது. இக்கல்லூரியில் கடமையாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள் துறை போன கல்விச் சமூகத்தினர் ஆகியோரின் அயராத உழைப்புக்களால் கல்லூரியின் சிறப்புக்கள் உலகளாவிய ரீதியில் பரவி வருவதோடு கற்று வெளியேறிய பற்றுணர்வு மிக்க கல்விச் சமூகம் உருவாகி வருவதும் சிறப்பான அம்சமாகும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு அத்திவாரமிடும் இக்கல்லூரி பவளவிழாக் காணும் இந்நேரத்தில் நினைக்கும்போது மனப்பதிவிலுள்ள பலவிடயங்கள் மீண்டெழுந்து வருகின்றன.

கிராமப்புற இப் பாடசாலை ஆரம்பம் முதல் இன்று வரை பல நல்ல முகாமையாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றது. 1995இல் இப் பாடசாலை "1சி" பாடசாலையாகத் தரம் உயர்ந்ததோடு 1999இல் யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாகவும் பெயர் மாற்றத்தைப் பெற்றது.

1993 - 2002 வரை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 52 பேர் தெரிவாகியுள்ளனர். 1994ல் க.பொ.த. (சா/த)இல் 28 மாணவர்கள் க.பொ.த (உ/த) கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். 1997ல் இருந்து இன்று வரை 16 பேர் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். ஐவர் கல்வியற் கல்லூரிகளுக்கும் தெரிவாகி உள்ளனர்.

வலைப்பந்தாட்டத்தில் எவரும் அணுக முடியாத நிலையில் சகல பிரிவினரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இத் தேர்ச்சி மாகாண நிலைக்கு அப்பாலும் மாணவச் செல்வங்களை அழைத்துச் சென்றுள்ளது. இதேபோன்று தமிழ்த் தினப் போட்டிகளிலும் மாணவர்கள் மாகாண நிலையிற் சென்று சாதனை படைத்து வருகின்றனர்.

1023 மாணவர்களைக் கொண்ட இக் கல்லூரி ஆசிரிய பற்றாக்குறை இது வரை காணப்பட்ட போதிலும் சகல மட்டங்களிலும் சாதனை படைக்கத் தவறவில்லை. இக்கட்டான காலகட்டத்தில் இடம் பெயர்ந்த தென்மராட்சி வலய 498 மாணவர்களுக்கு அவர்கள் கல்வி நிறைவேற முகம் கோணாது களம்அமைத்துக் கொடுத்தது.

பௌதீக வளத்தில் பின்னடைவான இக் கல்லூரி இன்று 41 பரப்பு புதிய காணியினை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டதோடு பல புதிய கட்டடங்களையும் தன்னகத்தே கொண்டு சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. பலரையும் அதிசயப்பட வைக்கின்றது.


பல வளர்ச்சியடைந்த பெரிய பாடசாலைகள் பழைய மாணவர்களின் ஆதிக்கத்தாலும் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்க, இக் கல்லூரி பற்றுள்ள பழைய மாணவர் சமுதாயத்தை உருவாக்கி பிரதேச சமூக மேம்பாட்டு விழிப்புணர்விற்காக அர்த்த புஷ்டியுடன் அயராது உழைக்கின்றது.

1993 ற்குப் பிற்பட்ட கால இக் கல்லூரியின் துறை சார்ந்த வளர்ச்சிகள் சகலரையும் மெய் சிலிர்க்க வைக்கின்றது. ஒரு கிராமியப் பாடசாலையின் எழுச்சிக்கு ஆரவாரம் இன்றி அத்திவாரம் இட்டு அர்ப்பணிப்புடன் தொழிற்படும் கல்லூரி முதல்வரையும், ஆசிரிய திலகங்களையும் நினைத்துப் பார்க்கும் போது உளம் பூரிப்படைகின்றது. இப் புனிதப் பணியில் ஈடுபட்ட இக் கல்லூரிச் சமூகம் தாம் எதனைச் செய்தோம் என்பதனை சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டும் நோக்குடன் சஞ்சிகை வெளியிடும் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**வி. இராசையா.**<br>
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**<br>
**வடக்குக் கிழக்கு மாகாணம்,**<br>
**திருகோணமலை.**

# ஆசிச்செய்தி


உள்ளத்து, உவகையுடன்



சண்டிலிப்பாயில் ஒருபாடசாலை "ராஜா ஸ்கூல்" என அடையாளம் காணப்பட்டது. தற்செயலாக கண்ணிற்படும் நிலை. திணைக்களத்தின் உயர் முடிவில் ஓர் இளம் பட்டதாரி, அதிபராக நியமிக்கப்பட்டார். உயர் சிந்தனைகளுடன் நினைத்ததை சாதித்து முடிக்கும் பண்பாளராக அவரைச் சந்தித்தேன். சண்டிலிப்பாய் கோட்ட அதிகாரியாக நான் கடமை புரிந்த போது திரு.ச.சிவநேஸ்வரன் அவர்களின் சாதனைகளால் யாழ் மாவட்டம் அடையாளம் காணப்படும் என்று நினைக்கவில்லை. தன்னை ஒரு பெரிய நிர்வாகியாக எண்ணிக் கொள்ளாமல் அந்தச் சிறிய நிறுவனத்தை உயர்வான இடத்தில் வைத்துப் பார்க்க விரும்பித் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அறிவின் முதிர்ச்சி, ஏழை மாணவர்களுக்கான பங்களிப்பு, உயிரோடு ஊடாடும் நட்பு, தன் நிறுவன உயர்விற்காக உயர் அதிகாரிகளுடன் கொண்ட பணிவான தொடர்புகள், சமூகத்துடனான உண்மைப்பற்று இவை அனைத்தும் ராஜா ஸ்கூலை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக மாற்றியது. அதிபர் சிவநேஸ்வரனின் உயர் எண்ணங்களை நிறைவேற்றத்துடிக்கும், பிரதி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், சொல்லப்போனால் உயர் சிந்தனையாளர் ஒருங்கு கூடிய நிறுவனமாக மாறியது. வலைப்பந்தாட்டம் தொடங்கி உயர் வகுப்புக்கள் கொண்ட " 1C " கல்லூரியாக மாறியது வரை அதிபரின் ஆளுமை புலப்படுகின்றது. பல உயர் கல்லூரிகளுக்கு அழைப்புகள் கிடைத்த போதும் தன் கல்லூரியைப் பதவிகளுக்கு அப்பால் நின்று நேசிக்கும், என் மதிப்பிற்குரிய அதிபர் சிவநேஸ்வரனை உள்ளத்து உவகையுடன் வாழ்த்துகின்றேன்.

**திருமதி . றெஜினா இருதயநாதன்.**
**கல்விப்பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயம்.**

# ஆசிச்செய்தி



சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி வெளியிடவுள்ள சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.சண்டிலிப்பாய் பிரிவிலே குறுகிய காலத்திலே நன்கு வளர்ச்சியடைந்து சிறந்து விளங்குகின்றது. கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டு உட்பட பல துறைகளிலே சிறப்பாக முன்னேறி வருகின்றது. பல வசதிக் குறைவுகள் இருந்த பொழுதிலும் பெற்றோர், பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தியடைந்து வருகின்றது. இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு காரணமாக விளங்குகின்ற அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுகிறேன்.

இக் கல்லூரியின் அதிபரின் திறமையினால் பல நிதிவளங்கும் இடங்களிலிருந்து உதவிபெற்று பௌதிக வளங்களை பெருக்கிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. நான் ஏற்கனவே பணிபுரிந்த செயலகத்திற்கு மிக அண்மையில் இருப்பதால் இக்கல்லூரியின் திறமையான செயற்பாடுகளை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இக் கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடையவும் மாணவர்கள் சகல துறைகளிலும் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**திரு. நா. வேதநாயகன்,**
**மேலதிக அரச அதிபர்,**
**கிளிநொச்சி.**

# ஆசிச்செய்தி



2004 ஆம் ஆண்டில் தனது 75 ஆவது அகவைப் பூர்த்தி செய்து பவள விழாக்காணும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவினுள் அமைந்துள்ள யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எனது பகுதியில் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கி வருகின்றது.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்துக்களும் ஆங்கிலத்தை கற்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் 1929 ஆம் ஆண்டு "சண்டிலிப்பாய் ஆங்கிலப் பாடசாலையாக" ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 1998 ஆம் ஆண்டு "இந்து மகா வித்தியாலயமாக" இரண்டாம் தரத்திற்கும், 1999ஆம் ஆண்டில் " இந்துக் கல்லூரியாக" " 1சி " தரத்திற்கும் உயர்த்தப்பட்டு தனது முன்னேற்றப்பாதையில் வேகமாக முன்னேறி வருகின்றது.

"செய்கையே சிறந்த கல்வி" என்ற மகுட வாசகத்தை தனது மாணவர் சிந்தையில் பதிந்து கல்விச் செயற்பாட்டினால் எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்து வரும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் கல்விச் சமூகத்தை பாராட்டுவதுடன் எல்லாம் வல்ல இறைவன் துணையுடன் மென்மேலும் கல்விச் செயற்பாட்டில் இக்கல்லூரி உயர்வடைந்து உயர்ந்த அறிவு, செயற்திறன் மிக்க மாணவரை இளம் சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

**அ. சுப்பிரமணியசர்மா,**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**வலிகாமம் தென்மேற்கு,**
**சண்டிலிப்பாய்.**

# வாழ்த்துச்செய்தி



யாழ் மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக மிக்க வேகத்துடன் வீறுநடை போட்டு வளர்ந்து வரும் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி கடந்த பத்து ஆண்டு காலத்தில் தான் பெற்ற அரும் பெரும் சாதனைகளையும் முன்னேற்றங்களையும் ஆவணப்படுத்தவும் மாணவர் படைப்பாற்றல்களை வெளிப்படுத்தவும் நூல் வடிவில் மலர் ஒன்று வெளியிட முதன் முறையாக பாடசாலைச் சமூகம் முன்வந்தமை சகலருக்கும் மனமகிழ்ச்சியைத் தரும் செயலாகும். இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் அரிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தமையை பெரும் பேறாகக் கொண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்

ஏனைய பாடசாலைகள் பார்த்து பின்பற்றக் கூடிய ஒழுங்கமைப்புக் கொண்ட பாடசாலையாக நிர்வாகக் கட்டமைப்பு, மாணவர் ஒழுக்கம், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் , இணைபாடவிதான செயற்பாடுகள், அழகும் தூய்மையும் கொண்ட தோற்றம் என்பவற்றில் கடந்த பத்து ஆண்டுகாலமாக உன்னத நிலையில் இக் கல்லூரி விளங்கி வருவது கல்விசார் உலகம் நன்கு அறிந்த உண்மையாகும். செயல் வீரனாக, சாதனை வீரனாக துடிப்போடு செயலாற்றி வரும் அதிபர் திரு ச. சிவநேஸ்வரன் அவர்கள் கடந்த பத்து ஆண்டு காலமாக இக் கல்லூரியின் பொறுப்பை நிர்வகித்து வருவதே இக் கல்லூரி தேசிய மட்டத்தில் புகழ்பெற்று விளங்க வழி வகுத்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. எத்தகைய வசதிகள் அற்ற சூழலையும் சரியான திட்டமிடல் தளராத முயற்சி என்பவற்றின் மூலம் வளங்கொழிக்கும் சூழலாக மாற்றி அமைக்க முடியும் என்பதற்கு உதாரண புருஷனாக அதிபர் திரு.ச. சிவநேஸ்வரன் அவர்கள் விளங்கி வருகின்றார்.

வலைப்பந்து விளையாட்டு என்றால் சரியாகத் தெரியாத பின் தங்கிய ஒரு கிராமப்புற மாணவிகளை வளமாக வைத்து வடக்கு கிழக்கு மாகாணத்தின் பல நூற்றுக்கணக்கான பாடசாலைகளைப் பின் தள்ளி விட்டு 17,19 ஆகிய இரண்டு பிரிவுகளிலும் ஒரே நேரத்தில் மாகாண மட்ட சம்பியன்களாக வெற்றி வாகை சூடிய சாதனையை இலட்சிய வேட்கை கொண்ட ஒரு அதிபரின் தனிப்பட்ட சாதனை என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்கவே முடியாது

வலைப்பந்து மட்டுமன்றி உதைபந்து, கரப்பந்து, மெய்வல்லுனர் போட்டி என்பவற்றைப் பெற்று வரும் வேகமான வளர்ச்சி எத்துறையிலும் மிக விரைவில் சாதனைகள் படைப்பார்கள் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன. கடந்த பத்து ஆண்டுகளாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் 52 மாணவர்களை சித்தியடையச் செய்தமையும், வருடாவருடம் க.பொ.த. உயர்தர வகுப்பிற்கு தகுதி பெறும் மாணவர் தொகை வேகமாக அதிகரித்து வருகின்றமையும் க.பொ.த உயர் தரப் பரீட்சை எடுக்க அனுமதி கிடைத்த நான்கு ஆண்டு காலத்தில் 16 மாணவர்களை பல்கலைக்கழக அனுமதி பெற வைத்தமையும், கல்வியற் கல்லூரிக்கான அனுமதியை 5 பேர் பெற்றமையும், தமிழ், ஆங்கில, சமூகக்கல்வித் தினப் போட்டிகளில் கோட்ட,வலய, மாவட்ட, மாகாணமட்டம் வரை பெற்று வரும் வெற்றிகளும், கற்றல், கற்பித்தல் துறையில் இக் கல்லூரி அண்மைக் காலத்தில் பெற்று வரும் வேகமான வளர்ச்சிக்கு சான்றாக அமைகின்றன.

மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங் கண்டு அவர்களின் திறமைகளை வளர்த்தெடுத்து கல்வி, ஒழுக்கம், பண்பாடு ஆகிய துறைகளில் சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்கும் தெய்வீகப் பணியில் அதிபரோடு

தோள் கொடுத்து வரும் ஆசிரியர் குழாத்தை இச் சந்தர்ப்பத்தில் மறந்து விட முடியாது. ஒரு தலைவனின் வழி காட்டலுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் ஆசிரிய குழாத்தின் உண்மையான செயற்பாடே இக் கல்லூரி குறுகிய காலத்தில் பெருவளர்ச்சி பெற முக்கிய காரணியாக அமைந்தது. இவர்கள் பணி மென்மேலும் சிறக்க மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

வெற்றி வீரனாக விளங்கும் அதிபர் ச.சிவநேஸ்வரன் அவர்களின் தலைமையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட 1200 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் சகல துறை மேம்பாட்டிற்கும் வாழ்வாங்கு வாழ வழி காட்டும் கல்வியின் ஊடாக யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை இலங்கையின் தலை சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக மாற்றி அமைக்கும் கல்விச் சமூகத்தின் பணிக்கு இறைவன் அருள் ஆசியை வேண்டி, பாடசாலை வளர்ச்சிப் போக்கின் ஆவணமாக வெளிவர இருக்கும் முதலாவது மலருக்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க.தனபாலசிங்கம்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**சண்டிலிப்பாய்.**

# வாழ்த்துச்செய்தி



உயர்திரு. செகராயசிங்கம் அவர்களினால் 1929இல் ஆரம்பிக்கப்பட்ட சண்டிலிப்பாய் ஆங்கிலப்பாடசாலை இக்கிராமத்தைச் சேர்ந்த மக்களின் கல்வித்தேவைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வந்தது. சைவத்தமிழ் சூழலில் தரமான ஆங்கிலக் கல்வியை வழங்குவதே ஸ்தாபகரின் நோக்கமாகவிருந்தது. எத்தனையோ வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இப்பாடசாலையினால் பயனடைந்தனர். அரசாங்கம் இப்பாடசாலையைப் பொறுப்பேற்று, அயலிலிருந்த வேறிரு பாடசாலைகளையும் இதனுடன் இணைத்து சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் என்று பெயரிட்டது. மாணவர்தொகை அதிகரித்ததற்கேற்ப பௌதிக வளங்கள் அதிகரிக்கப்படாத காரணத்தினால் மாணவர்கள் பல வசதியீனங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும் நிலை காணப்பட்டது.

கடந்த 1988ஆம் ஆண்டில் நான் இப்பாடசாலையைப் பொறுப்பேற்ற பொழுது அன்றைய கஷ்டமான போர்ச்சூழலிலும் சில அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஈடுபட்டேன். பாடசாலையின் பாதுகாப்புக்காகச் சுற்றுமதில் அமைக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் மின்னிணைப்பு, நீர் விநியோகம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. மிகக்குறுகிய காலத்திற்குள் தளபாடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை ஆகியவை நிவர்த்தி செய்யப்பட்டன. மாணவர்கள் ஓரளவு வசதிகளுடன் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வழிசெய்யப்பட்டது. பெரும் எண்ணிக்கையான இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும் இடம் கொடுத்தோம். ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரப்பரீட்சை ஆகியவற்றில் எமது மாணவரின் பெறுபேறுகள் மேம்படத் தொடங்கின. விளையாட்டுத்துறையும் முன்னேற்றம் கண்டது. சுருங்கக்கூறின் இப்பாடசாலை துரித வளர்ச்சிப் பாதையில் மெல்ல அடியெடுத்து வைக்கத் தொடங்கியது.

நான் 1992ஆம் ஆண்டு முடிவில் இளைப்பாறியபொழுது, அன்றைய பாடசாலைச் சமூகத்தின் வேண்டுகோளை ஏற்று திரு.சிவநேஸ்வரன் அவர்கள் அதிபராக நியமனம் செய்யப்பட்டார். புதிய அதிபர் பதவியேற்றதிலிருந்து பாடசாலை வியத்தகு முன்னேற்றம் கண்டது. பாடசாலை வளாகம் நாலா பக்கங்களிலும் விஸ்தரிக்கப்பட்டது. பல அழகிய மாடிக்கட்டடங்கள், வானுற வளர்ந்த நிழல் மரங்கள், பூஞ்சோலைகள், பசும் புற்றரைகள் ஆகியவற்றுடன் வளாகம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகளிலும் விளையாட்டுத்துறைச் சாதனைகளிலும் குடாநாட்டின் பிரபல பாடசாலைகளையும் விஞ்சி நிற்கின்றது.

முதலாந்தரப்பாடசாலையாகத் தரமுயர்ந்த நிலையில் இக்கல்லூரி இன்று பவளவிழாவைக் கொண்டாடுகின்றது. பவளவிழாவின் ஓர் அம்சமாக வெளிவரும் மலருக்கு இச்செய்தியை அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்லூரி குறுகிய காலத்தில் நிகழ்த்தியுள்ள அரிய சாதனைகளுக்காக சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டுகின்றேன். பெற்றார், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் அதிபர் அவர்களுக்குத் தொடர்ந்தும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கி இப்பாடசாலையை நாட்டின் பிரபல பாடசாலைகளிலொன்றாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்பதே எனது விருப்பம்.

சோ. சோமசேகரம்,
முன்னாள் அதிபர்.

# வாழ்த்துச்செய்தி



எல்லோராலும் அன்பாக ராஜா மாஸ்டர் என்று அழைக்கப்பட்டு வந்தவர் எனது பாட்டனாராகிய பரராஜசிங்க முதலியார் செகராஜசிங்கம் அவர்கள். இவர் 1929 ஆம் ஆண்டு சண்டிலிப்பாயில் ஆரம்பித்து வைத்த இந்து ஆங்கிலப் பாடசாலை அக்காலத்தில் ராஜா பாடசாலை என்று பெயர் பெற்றிருந்தது. இப்பொழுது இப் பாடசாலை புகழ் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி என்ற பெயரில் எல்லோராலும் பாராட்டத்தக்க முறையில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இக்கல்லூரி முதன் முறையாக மலர் ஒன்றினை வெளியீடு செய்வதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்மையில் நான் அவுஸ்திரேலியாவிலிருந்து எனது சகோதரர்களுடன் இக்கல்லூரிக்கு வருகை தந்த போது அதன் வளர்ச்சியையும் பெருமைகளையும் கல்லூரி அதிபர் மூலம் அறிந்த பொழுது மனம் பூரிப்படைந்தோம். அதிபரின் அயராத உழைப்பினாலும், வழி காட்டும் திறனாலும், ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும், நலன் விரும்பிகளின் பங்களிப்பாலும், இக்கல்லூரி மாணவர்கள் கல்வி, விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். எமது கல்லூரி யாழ் மாவட்டத்தில் மட்டுமின்றி அகில இலங்கை ரீதியிலும் பல்வேறு துறைகளில் முன்னணியில் திகழ்வது மிகவும் பெருமைப்படக் கூடிய விடயமாக விளங்குகின்றன.

எமது கல்லூரி மென்மேலும் இறைவன் அருளால் பேரும் புகழும் பெற்று விளங்குவதற்கு பரராஜசிங்க முதலியார் செகராஜசிங்கம் பேரப்பிள்ளைகளாகிய நாம் எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ! வளர்க எமது கல்லூரி !

**விசுவநாதன் ராஜன்**
**சிட்னி, அவுஸ்திரேலியா**

# வாழ்த்துச்செய்தி

மேற்படி பாடசாலை ஆரம்பித்து 75வது ஆண்டு விழா கொண்டாட உள்ள வேளையில், எமது சங்கத்தினது வாழ்த்துக்களையும், ஆதரவினையும் தெரிவிப்பதில் பெருமையடைகிறோம்.

ஏறத்தாழ 20 ஆண்டுகளாகத் தொடர்ந்த யுத்த சூழலினால் எமது பாடசாலை சந்தித்த பின்னடைவுகள் பல, அது மிக மிகப் பின்தள்ளப்பட்ட நிலையிலும், கட்டிடங்கள் இடிபாடடைந்த நிலையிலும், ஆசிரியர் பற்றாக்குறையுடனும் இருந்தது. மகாவித்தியாலயமாக ஏறக்குறைய 300 மாணவர்களுடன் இருந்த பாடசாலையை இன்று 1 200 மாணவர்களுடன் கல்லூரியாக தரம் உயர்த்திய பெருமை தற்போதைய அதிபரையும், ஆசிரியர்களையும் சாரும்.

குறிப்பாக அதிபர் திரு.ச.சிவநேஸ்வரன் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியினை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அவரது விடாமுயற்சியினாலும், திறமையினாலும் எமது கல்லூரி மிகப்பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. விளையாட்டுத்துறையிலும், புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகளில் சிறந்து விளங்குவதுடன், பல்கலைக்கழகத்திற்கும் தொடர்ந்து மாணவர்களை அனுப்பி வருகின்றது. இந்த பெருமைகளுக்கெல்லாம் காரணமான அதிபரையும், உப அதிபர், பதில் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளையும், கல்லூரி அபிவிருத்தி முன்னேற்றச்சங்கத்தினையும் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம். எமது பழைய மாணவர் சங்கம் தோன்றக் காரணகர்த்தாவும் கல்லூரியின் அதிபர் தான் என்பதையும் நன்றியுடன் கூறிக்கொள்கின்றோம்.

மேலும் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு எம்மால் இயன்ற உதவிகளை செய்வோமென்று உறுதியளிக்கின்றோம்.

நன்றி

**திரு. நா. குமாரசாமி,**
**பழைய மாணவர் சங்கம்,**
**கனடா.**

# ஆசிச் செய்தி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி படிப்படியாக வளர்ந்து வந்து தற்போது யாழ் மாவட்டத்தில் ஒரு பிரசித்தி பெற்ற கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டிருப்பது எமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயமாக இருக்கிறது. இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று அயராது உழைத்த முன்னாள் அதிபர், ஆசிரியர்களுக்கும் தற்போது திறமையாக வழிநடத்தும் ஆக்கமும் ஊக்கமும் கொண்ட அதிபர், ஆசிரியர்களுக்கும் உதவியாளர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் எங்கள் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

ஏறக்குறைய ஆயிரத்து நாநூறு (1400) மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்கும் கோயிலாக மதிக்கப்படும் இக் கல்லூரி இவ் வருடம் "**பவள விழா**" க் கொண்டாடுகின்றது என்று அறிந்ததும் கனடா சண்டிலிப்பாய் சங்க அங்கத்தவர்கள் மனப்பூரிப்பும் பெருமையும் அடைகின்றார்கள். எமது சங்கத்தின் தலைவர் என்ற முறையில் எங்கள் அனைவரினதும் மகிழ்ச்சியையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதோடு மேன்மேலும் இக்கல்லூரி எமது தாயகத்திற்கு சிறந்த மனிதர்களை உருவாக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

இக்கல்லூரியின் பவளவிழா கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக நடை பெறுவதற்கு எங்கள் இதய பூர்வமான வாழ்த்துக்கள்

**ந.ஜெயநாதன்**
**தலைவர்**
**கனடா சண்டிலிப்பாய் ஐக்கிய சங்கம்**

# ஆசியுரை



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் சஞ்சிகை ஒன்று வெளிவருவதையிட்டு யான் பெரிதும் மகிழ்ச்சியடைவதுடன் எனது மனப்பூர்வமான ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக் கல்லூரியின் வளர்ச்சி, வரலாறு மிக நீண்டதொன்றாகும். 1929ஆம் ஆண்டு அமரர் திரு.ப.மு.செகராசசிங்கம் அவர்களால் இந்து ஆங்கிலப் பாடசாலையாக உருவாகி இடைக்காலத்தில் இந்து மகா வித்தியாலயமாக பெயர் மாற்றம் பெற்று தற்பொழுது இந்துக் கல்லூரியாக பரிணாம வளர்ச்சி பெற்று கல்வி அறிவுப் புகழ் மணம் பரப்பி மிளிர்கிறது. (சுமார் 73 ஆண்டு கால பொதுத் தராதரப் பத்திர உயர்தரக் கலை, வர்த்தக வகுப்புக்கள் வரை உண்டு.) சண்டிலிப்பாய் கோட்டத்தில் இக்கல்லூரியில் மட்டுமே கூடிய மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள் என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். தற்பொழுது இக்கல்லூரி கல்வித் திணைக்களத்தினால் தரம் "1C" பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இங்கிருந்து 16 மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுந்துள்ளனர். இக் கல்லூரியின் வளர்ச்சியில் அமரர் திரு .ப.மு.செகராசசிங்கம், திரு .ரி. தில்லையம்பலம், திரு எஸ். சோமசேகரம் போன்ற புகழ்பூத்த அதிபர்கள் வளர்ச்சிக்கு வித்திட்டு தன்னலமற்ற சேவை புரிந்துள்ளனர். யான் இக் கல்லூரியில் எனது உயர்தரக்கல்வியைப் பூர்த்தி செய்து 28 வருட காலம் இங்கு ஆசிரியராகவும் ,உப அதிபராகவும் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ள படியால் இப் பாடசாலையின் படிமுறையான வளர்ச்சியில் எனக்கும் தொடர்புண்டு. தற்பொழுது இக் கல்லூரியில் அபிவிருத்தி செயலராக பணிபுரிந்து வருகின்றேன்.

1993ஆம் ஆண்டில் தற்போதைய அதிபர் திரு.ச. சிவநேஸ்வரன் இக் கல்லூரியின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் இக் கல்லூரியின் பொற்காலம் ஆரம்பமாகி விட்டது எனலாம். இக்கல்லூரி சிறந்த கட்டமைப்பு, ஒழுக்கம், நிர்வாகம் என்பவற்றில் சிறந்து விளங்குவதுடன் தமிழ்மொழி, ஆங்கிலமொழி, காற்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளில் கோட்ட, வலய, மாவட்டங்களில் மாணவர்கள் தமது சாதனை முத்திரையைப் பதித்துள்ளனர். (சிறப்பாக பெண்களின் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் தொடர்ந்து பல ஆண்டு காலம் 15, 17, 19 வயதுப் பிரிவினர் சம்பியனாகத் தெரிவாகி வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கியதுடன் மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பெறத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.) விசேடமாக அதிபர் அவர்களின் அயராத முயற்சியும், பிள்ளைகளின் தொடர்பயிற்சியின் காரணமாக 1999 – 2001 வரை வடகிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாதனை புரிந்ததோடு 2002ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்குக் கிழக்கு மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 17,19 வயதுப் பிரிவினர் ஆகிய இரு பகுதியினரும் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் ஒரே கல்லூரியைச் சேர்ந்த இரு வயதுப் பிரிவினரும் வெற்றியீட்டியது யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு பெரிய சாதனைக்குரிய விடயம் ஆகும். இதன் மூலம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் தன்னை இனங்காட்டிக் கொண்டது. எமது கல்லூரித் தாய் வளமுடன் வாழ்க வளர்க என வாழ்த்துகிறேன்.

**ச. கந்தசாமி.**
**செயலர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சபை,**
**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.**

## இதழ்கள் பக்கங்கள்


| இதழ்கள் | பக்கங்கள் |
|---|---|
| 1) கல்லூரியின் வரலாறு | 01 |
| 2) ஏற்றமிகு கல்லூரியின் ஏணிப்படிகள் | 05 |
| 3) நவ பிராய்டிச உரையாடல்கள் | 10 |
| 4) திருக்கோயில்கள் | 14 |
| 5) தாய்மை | 15 |
| 6) தற்கால இசை வல்லுநர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்கள் | 16 |
| 7) விழுது எழுதும் வேரின் வெற்றிகள் | 17 |
| 8) The Importance of English | 20 |
| 9) பகவத்கீதை கூறும் யோகநெறிச் சிந்தையில் கலை வளர்ச்சியின் பாங்கு | 21 |
| 10) கனேடிய, இலங்கைக் கல்வி முறை பற்றிய ஓர் எளிமையான ஒப்பீடு | 22 |
| 11) முதியோரே எமது தேசிய சொத்துக்கள் } | |
| 12) கண்கண்ட தெய்வங்கள் } | 27 |
| 13) தொலைத் தொடர்பு சாதனங்கள் | 28 |
| 14) விந்தை மிகு விஞ்ஞானம் | 29 |
| 15) My First day at school | 30 |
| 16) பெற்றோரைப் பேணி அவர் பெருமை சொல்வோம் | 31 |
| 17) புதுமை படைக்கப் புறப்படுவாய் | 33 |
| 18) பாரதியார் வாழ்ந்த காலத்துப் பெண்களின் நிலை | 35 |
| 19) எனது தாய் } | |
| 20) எமது கல்லூரி } | 35 |
| 21) தமிழ்மொழி | 36 |
| 22) Mary Curie } | |
| 23) The Electricity } | 37 |
| 24) கல்வி } | |
| 25) கணினி } | 38 |
| 26) இசை நாடக நடிகர் திரு.செல்வராஜா அவர்களின் இசை நாடக அனுபவம். | 39 |
| 27)நெஞ்சம் மறப்பதில்லை | 40 |
| 28) 20004 ஆசிரியர் விபரம் | 41 |
| 29)யா / சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா | 43 |

# கல்லூரியின் வரலாறு

ஆழ வேரூன்றி அகலக் கிளைபரப்பி இன்று பெருவிருட்சமாய் கல்விப் பசியகற்றும் எமது யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இன்று பவளவிழாக் காண்கிறது. இந்த எழுபத்தைந்து வருடகாலத்தில் இக் கல்லூரியின் வரலாறு பற்றிச் சிந்திப்பதில் பெருமையடைகின்றோம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்து கிராமச் சிறார்களின் கல்வி முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்ட வள்ளல் திரு.ப.மு.செகராசசிங்கம் என்பார் தனது சொந்தக் காணியில் யா/சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலை 1929 இல் வித்திட்டார். அன்னாரது தன்னலம் கருதாத சேவை நோக்கினாலும் தொடர்ந்து இக் கல்லூரியை நிர்வகித்து வந்த அதிபர்களினாலும் அக் காலத்திலிருந்து இன்று வரை இக் கல்லூரி வளர்ச்சியடைந்து கிராமிய வறுமைச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பங்காற்றி வருகின்றது. இன்று பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டு நிற்கும் இக் கல்லூரியின் ஸ்தாபகர் நினைவு கல்லூரி வாழும் நாள் வரையும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயம் இல்லை. சண்டிலிப்பாய் கிராம சிறார்கள் மாத்திரம் அன்றி அயற்கிராம சிறார்களின் ஆங்கிலக் கல்விக்கு வழிவகுத்த இக் கல்லூரி இன்று இலங்கைத் தீவு முழுவதும் தனது பெயரை நிலை நாட்டி அவரது சேவையை நினைவு கூர்ந்து நிற்கிறது. 1929 தொடக்கம் 1940 வரையான காலப்பகுதியில் அதிபராக இருந்த செகராஜசிங்கம் பல வழிகளிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இவரைத் தொடர்ந்து திருவாளர்கள் தில்லையம்பலம் (1941-1954) P.C. சுப்பிரமணியம் (1955-1965) W. பிச் (1966 -1968) S. இராஜசுந்தரம் (1967 -1970) வரை அதிபர்களாகக் கடமையாற்றினார். இவர்கள் காலத்திலும் பாடசாலை குறிப்பிட்ட வளர்ச்சியைப் பெற்றது.

கல்லூரி வரலாற்றின் முக்கிய மைல்கல்லாக திருமதி ப.சிவானந்தராஜாவின் (1971 – 1978) பதவிக் காலம் அமைந்தது. இக்கால கட்டத்திலே தான் தமிழ் மொழிக் கல்வியை வழங்கி வந்த யா/சண்டிலிப்பாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, யா/சண்டிலிப்பாய் வாணி நிகேதன வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் யா/சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு யா/சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் எனப் பெயர் பெற்று தனது அளவை விசாலித்துக் கொண்டது. இந்த வகையில் திருமதி. ப.சிவானந்தராஜாவின் பணி நினைவு கூரத்தக்கது.

தொடர்ந்து திருவாளர்கள் க.வைத்தியநாதஐயர் (1979 - 1985) செ.அமுதலிங்கம் (1985- ) S.M. மூர்த்தி (1985 - 1986), பராஜசிங்கம் (1986 – 1987) ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர். இவர்கள் பணிகளும் பாராட்டத்தக்கவை.

1988 இல் அதிபராக பதவி ஏற்ற திரு.சோ.சோமசேகரம் 1992 வரை கடமையாற்றினார். இவரது பதவிக் காலத்தில் பாடசாலை மதிலமைத்தல், மின் இணைப்பு, நீர் விநியோகம் போன்ற சேவைகள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் மைதானமும் விஸ்தரிக்கப்பட்டது. இச் சேவைகளை திரு.சோ. சோமசேகரம் அவர்கள் கிராம மக்களுடன் இணைந்து வெகுசிரமங்களின் மத்தியில் நிறைவேற்றினார். இவரது பதவிக் காலத்தில் திரு.நா.கணபதிப்பிள்ளை ஆசிரியரால் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டது. இவரது பதவிக்காலம் பாடசாலை வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது என்று கூறினால் அது மிகையாகாது. இவரது சேவைக்காலம் பாராட்டுக்குரியதாகும்.

இக் கல்லூரிக்கு பல வளர்ச்சிகளையும், வெற்றிகளையும் பெற்றுத் தந்து அவற்றை இன்றும் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் தற்போதைய அதிபர் திரு.ச. சிவநேஸ்வரன் அவர்கள் 1993 இல் திரு சோமசேகரத்தைத் தொடர்ந்து அதிபராகப் பதவி ஏற்றார். இவரது பதவிகள் பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும். இவர் பாடசாலையின் பௌதீக வளத் தேவைகளை பல சிரமங்களின் மத்தியில் நிறைவேற்றி வருகின்றார். அத்துடன் கல்வி வளர்ச்சி, இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றி வருகின்றார். இவரது காலத்திலே தான் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு தரம் 1C பாடசாலையாக

தரம் உயர்த்தப்பட்டது. தொடர்ந்து 1999 இல் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றது. க.பொ.த உயர்தரம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்திற்கும், தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் மாணவர்கள் அனுமதி பெற்றுக் கொள்கின்றார்கள். இப் பாடசாலைக்கென பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன இருந்த போதும் அவை நிதிவளம் குன்றியனவாகவே காணப்பட்டன. எனவே ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் மனப்பாங்கும் சேவை நோக்கும் அதிபரின் பணிகள் வெற்றியடைய கைகொடுத்தன.

## இவர்காலத் தடப்பதிவுகள்

### கல்வி வளர்ச்சிப் படிகளில்

- 1993 இல் 5ம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தி பெற்றமை இப் பாடசாலையின் அதியுயர் பெறுபேறாக இருப்பதோடு பிரதேச மட்டத்திலும் ஒரு புத்தூக்க நிகழ்வாக அமைந்தமை
- 1994 இல் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியோரில் 28 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றமை உயர்தர வகுப்பை இக் கல்லூரியில் ஆரம்பிப்பதற்கு கால் கோளாக அமைந்தமை.
- 1995 இல் க.பொ.த (உ/த) வகுப்புக்கள் ஆரம்பித்துப் பாடசாலை 1C தரத்திற்கு உயர்ந்தமை.
- 1995 இல் 1264 மாணவர்களுடன் இயங்கிய இப் பாடசாலை இடப் பெயர்வு காரணமாக கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் இயங்கி 1996 ஏப்பிரலில் 40 மாணவர்களுடன் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கத்தொடங்கியமை.
- 1997 இல் முதன்முதலாக க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய 7 மாணவர்களும் ( 28 மாணவர்களுடன் ஆரம்பித்த இவ் வகுப்பு இடப் பெயர்வு காரணமாக 7 மாணவர்களாகக் குறைந்தது) பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதிகளைப் பெற்றதோடு செல்வன்.என்.தனுசுஜன், செல்வி பா. அஞ்சனா ஆகியோர் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்றமை கல்லூரிக்குக் கிடைத்த ஒரு வரலாற்று வெற்றியாக அமைந்தது.
- 2000ம் ஆண்டு தென்மராட்சியினர் இடப்பெயர்வின் போது இடம் பெயர்ந்த 500 வரையான மாணவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்புக்களை பல சிரமங்களின் மத்தியில் வழங்கியமை.

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

### வலைப்பந்தாட்ட வரலாற்றுப் பதிவுகள்

1993 பெப்புரவரியில் ஆரம்பிக்கப்பட்ட வலைப்பந்தாட்ட அணி மார்ச்சில் கோட்ட மட்டச் சம்பியனாகி மாவட்டமட்டத்தில் 3 ம் இடத்தைப் பெற்ற நிகழ்வானது கிராமியப் பாடசாலைகளிடையே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியமை. இக் காலகட்டத்தில் பயிற்றுனராக இருந்த செல்வி. மனோன்மணி பாராட்டுக்குரியவர்.

- 1998 இல் இரண்டாவது மாகாணமட்ட வலைப்பநதாட்டப் போட்டியில் கலந்து கொண்டு பெற்ற வெற்றியானது இன்று வரை தொடர்கிறது.
- 2002 இல் மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு 17 வயதுப்பிரிவு, 19 வயதுப்பிரிவு அணிகள் இரண்டுமே மாகாணச் சம்பியன்களாகி வடக்குக் கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு பாடசாலையுமே நிலை நாட்டாத ஒரு சாதனையை நிகழ்த்தியது.
- 2003 மீண்டும் 19 வயது பிரிவு மாகாணச் சம்பியனானது.
- இங்கிலாந்து சென்ற தாயக வலைப்பந்தாட்ட அணியில் எமது வலைப்பந்தாட்ட அணி வீராங்கனைகளான செல்வி. தி. சங்கீதா, செல்வி சோ. பிருந்தா ஆகிய இருவரும் கலந்து கொண்டமை எமக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

### உதைபந்தாட்ட வளர்ச்சியில் :-

- 1993 செப்ரெம்பரில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட உதைபந்தாட்ட அணி நவம்பரில் மாவட்ட நிலைப்போட்டியில் அரையிறுதி வரை முன்னேறி 3ம் இடத்தைப் பெற்றமை பலரது கவனத்தையும் ஈர்த்த விடயமாக அமைந்தமை இவ் வெற்றிக்கு பயிற்றுனர் திரு. இ. துஷ்யந்தன் ஆதார சுருதியாக இருந்தார்.
- 1994 இல் மாவட்டமட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றமை.
- 1999 - 16 வயதின் கீழ் பிரிவு வலயமட்டம் :- 3ம் இடம்
  18 வயதின் கீழ் பிரிவு வலயமட்டம் :- 3ம் இடம்
- 2000 இல் 12 வயது மைலோகிண்ணப் போட்டியில் மாவட்டமட்டத்தில் 3 ம் இடம் பெற்றமை.
- 2001,2002,2003 கோட்டமட்ட போட்டிகளில் தெரிவாகி வலயமட்டப் போட்டிகளில் பங்கேற்றமை.

## Net Ball Under Ninteen
## North & Eastern Provincial Level Champian 2002



**Standing:** S.Kumuthini, K.Vilasiny, T.Sankeetha, T.Sulaxsana, N.Ramany, M.Sweety.

**Seated:** Miss.Y.Subathira, P.Suganya, Mr.S.Sivaneswaran (Principal), T.Nilany, Mr.K.Vimalan, Mrs.S.Sivanathan.

## Net Ball Under Seventeen
## North Eastern Provincial Level Champions 2002



**Standing:** M.Thulasimalar, J.Gayanthiny, S.Pirintha, L.Karthika, A.Subashiny, J.Gayeetha.

**Seated:** Miss.Y.Subathira, M.Sharmila, Mr.S.Sivaneswaran (Principal), N.Kirushanthiny, Mr.K.Vimalan, Miss.P.Kalaslosiny.

**கரப்பந்தாட்ட வளர்ச்சியில் :-**

- 1999 இல் முதன்முதலாக உருவாக்கப்பட்ட கரப்பந்தாட்ட அணி கோட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றமை.
- 2000,2001, 2002 கோட்டமட்டச் சம்பியனாக 15 வயதுப் பிரிவு அணி மாகாண மட்டத்தில் அரையிறுதி வரை முன்னேறியமை.

**மெய்வல்லுநர் போட்டிகள்**

- 1999 இல் து.தர்சன் 15 வயது பிரிவில் உயரம் பாய்தல் மாகாணமட்டம் 1ம் இடம் பெற்றமை.
- 2000 இல் த.பிரதீப் 17 வயது பிரிவில் உயரம் பாய்தல் மாவட்டமட்டம் 1 ம் இடம் பெற்றமை.

**ஏனைய துறை விருத்தியில் :-**

- 1998 இல். இலங்கை விவேகானந்தர் தினக்கட்டுரைப் போட்டியில் செல்வன் ந. தனுசயன் அகில இலங்கை ரீதியில் 2ம் இடத்தைப் பெற்றமை.
- 2001 சைவ பரிபாலனசபை நடத்திய ஆறுமுகநாவலர் போட்டியில் செல்வன் த.பிரதீப் வெள்ளிப்பதக்கம் பெற்றமை.
- 2001 சைவபரிபாலன சபை நடத்திய இந்து சமய உயர்தரப்பரீட்சையில் செல்வன் ட. புயங்கன் தங்கப்பதக்கம் பெற்றமை.
- 2001 சாந்தயர் மடம் சைவசமயப் போட்டியில் யோ. பிரியசாளினி வெள்ளிப்பதக்கம் பெற்றார். மேற்படி பரீட்சையில் 2002 இலும் வெள்ளிப்பதக்கம் பெற்றார்.
- 2002 தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 5 இல் செல்வன் இ.வாகீசன் கவிதை ஆக்கற் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று அகில இலங்கைப் போட்டியில் பங்கேற்றமை.
- 2002 இல் சைவபரிபாலனசபை நடத்திய சைவ சமயப் பரீட்சைப் போட்டியில் செல்வி அ. டில்லிபவீனா வெள்ளிப்பதக்கம் பெற்றமை.
- 2003 இல் உலக இந்து மகா நாடு நடத்திய போட்டியில் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் பாடசாலை 1ம் இடம் பெற்றமை.
- 2004 இல் கூட்டுறவு திணைக்களம் நிகழ்த்திய கூட்டுறவு தின விழா பேச்சுப் போட்டியில் மாவட்டமட்டத்தில் செல்வன் இ. விஜயகுமார் முதலிடம் பெற்று மாகாண மட்டத்தில் கலந்து கொண்டமை.

இன்று இத்தகைய வளர்ச்சியை கல்வியிலும், இணைப்பாட விதான செயற்பாட்டிலும், பாடசாலைக்கல்வி நிலையிலும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி யாழ் மாவட்டத்தில் மாத்திரமல்ல அகில இலங்கை ரீதியிலும் ஓர் உன்னத நிலையடைந்திருப்பதற்கு தற்போதைய அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், விளையாட்டுத்துறை முதல்வர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் உன்னதமான அர்ப்பணிப்புடனான பங்களிப்புகள் உறுதுணையாக அமைந்தன.

## பௌதிக வளத்தேடலில்...

### காணிவளப்பெருக்கம்

ஆரம்பத்தில் 8 பரப்பு விஸ்தீரணத்தில் அமைந்த வளாகத்தில் மாணவர்கள் மிக நெருக்கடியான வகுப்பறைகளில் கற்க வேண்டிய சூழ்நிலையில் வளாக விரிவோக்கத் தேவையின் பெறுபேறாக

- 1997 இல் பாடசாலைக்குத் தென்புறத்தேயிருந்த $8^1/_2$ பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டதுடன் பாடசாலை விஸ்தீரணம் $16\ ^1/_2$ பரப்பாக உயர்ந்தமை.
- 2001 இல் கிழக்குப்புறத்திலிருந்த $8^1/_2$ பரப்புக் காணி 2,65000 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் பாடசாலை விஸ்தீரணம் 25 பரப்பாக விரிவடைந்தது.
- 2002 இல் கனடாப்பழைய மாணவர் சங்கத்தில் 3, 00000 ரூபா நிதியைக் கொண்டு 6 பரப்புக்காணி கொள்வனவுடன் பாடசாலை விஸ்தீரணம் 31 பரப்பாக உயர்ந்தது.
- 2003 இல் திரு.த. கஜரோகணன், திரு.க.சோமநாதன், திரு.க. கமலநாதன், திரு.ஆத்மநாதன் ஆகியோரால் அவர்களது பேரனார் அப்புப்பிள்ளை நினைவாக மைதான விஸ்தரிப்பிற்கு என 10 பரப்புக்காணி 787500 ரூபாவிற்கு கொள்வனவு செய்து தரப்பட்டது. இப் பணத்தைச் சேர்த்து பாடசாலை விஸ்தீரணம் 41 பரப்பாக உயர்ந்தது.

காணி வள விரிவாக்கத்தில் இவ்வூர்வாழ் பாடசாலைப் பற்றாளர்களின் விரிந்த மனப்பாங்கு எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. இந்தவகையில் திருமதி.தெ.சுந்தரலிங்கம், திரு.திருமதி. குலரத்தினம், திரு.திருமதி.குணராஜா, திரு.திருமதி.பரமேஸ்வரன், திரு.திருமதி.மகேஸ்வரன், திரு.திருமதி.செல்வராஜா, திரு.ஐயாத்துரை குடும்பம், ஆகியோர் தங்களது காணிகளை எமது கல்லூரி வளர்ச்சிக்காக நாம்

கொள்வனவு செய்வதற்கு சம்மதம் தெரிவித்தமைக்கு அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

மேற்கண்ட தடப்பதிவுகள் கடந்த தசாப்தகாலத்தில் கல்லூரியில் பதிவாகின. இத்தகைய நிலைமையை நோக்கும்போது அது கல்லூரி வரலாற்றில் ஒரு பாய்ச்சல் என்றே கூறலாம். இத்தகை விருத்திகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த அனைத்துத்துறையினரும் பாராட்டுக்குரியவர்கள்.

### கட்டட வள விருத்தியில்

1. 1998 இல் புதிய மாடிக்கட்டத்தின் கீழ்த்தளம் பன்முகப்படுத்தப்பட்ட செலவுத்திட்டத்தில் 925 000 ரூபா நிதியைக் கொண்டு அமைக்கப்பட்டமை
2. 1998 இல் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக ஆரம்பப் பிரிவு புனர் நிர்மாணம் செய்யப்பட்டமை.
3. 1999 G.T.Z நிறுவன உதவியுடன் ஆண்கள் பெண்களுக்கான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டமை.
4. 2000 இல் போரூட் நிறுவனத்தின் 125 000 ரூபா நிதியுதவியுடன் தற்காலிகக் கட்டடம் அமைக்கப்பட்டமை.
5. 2000 இல் புதிதாக விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டு வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உயர் திரு.க. கந்தசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
6. 2001 இல் 25 X 70 கீழ் மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டமை.
7. 2002 G.T.Z நிறுவன உதவியுடன் 6 வகுப்பறைகள் கொண்ட 130 X 25 மேல்மாடிக்கட்டடம் அமைக்கப் பெற்றமை.
8. 2003 இல் புதிய அதிபர் அலுவலகம், கட்புல செவிப்புல சாதன அறை, கணனி அறை என்பன அமைக்கப்பட்டமை.
9. திரு.இ.துஷ்யந்தன் அவர்களால் விருதுப் பொறிகள் வைப்பதற்கு கண்ணாடி அலுமாரி வழங்கப்பட்டது.
10. ஸ்தாபகரின் பேரனார் திரு.விஸ்வநாதன் ராஜன் அவர்களால் இரு கணனிகள் வழங்கப்பட்டன.
11. திருமதி ஜெயந்தி விநோதன் என்பவரது அன்பளிப்பாக ஒலிபெருக்கிச் சாதனங்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இ.ரவிராஜ் என்பவரால் வழங்கப்பட்டது.
12. பாடசாலைக்கு திரு.நித்தியானந்தன் அவர்களால் ஒலியெழுப்பும் மணி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
13. 2004 இல் கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் 25 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டடத்தின் கீழ்த்தளம் அமைக்கப்பட்டமை.

### புதியனவாக

- 1997 இல். உபஅதிபராக இருந்து பாடசாலை வளர்ச்சிக்குப் பங்காற்றிய திரு.ச. கந்தசாமி அவர்கள் இளைப்பாறியமை.
- 1998 இல் பிரதிஅதிபராக திருமதி ச.ஸ்ரீகாந்தனும், உபஅதிபராக திரு இ. ஆனந்தநடராசாவும் பதவியேற்று பாடசாலை வளர்ச்சிக்கு உதவி வருகின்றமை.
- 1999 இல் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றமை. நீலமும் வெள்ளையுமாக இருந்த முன்னைய பாடசாலைக் கொடியின் நிறமும், கழுத்துப் பட்டியின் நிறமும் கருஞ்சிவப்பும் (Maroon) மஞ்சளுமாக மாற்றம் பெற்றமை.
- அருட்கவி சி. வினாசித்தம்பி அவர்களால் இயற்றப் பெற்ற புதிய பாடசாலைக் கீதம் நடைமுறைக்கு வந்தமை.
- பண்டிதர் க.நாகலிங்கம் அவர்கள் எமது கல்லூரி நிகழ்வுகளின் போது வாசித்து அளிக்கப்படும் பாமாலைகளை அவ்வப்போது யாத்து வழங்கியுள்ளர். அவருக்கு எமது நன்றிகள்.

**தாய்தந்தை இழந்தோருக்கான நன்கொடை :**

புலம் பெயர்ந்து சுவிஸில் வாழும் புங்குடுதீவைச் சேர்ந்த எனது பல்கலைக்கழக நண்பனாகிய திரு. ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம் அவர்கள், தாய் தந்தையரை இழந்த வறிய மாணவரில் நிலையைச் சுட்டிக்காட்டிய போது அவர்களின் கல்விச்செயற்பாடுகளை உயர்த்தும் நோக்கில் ரூபா, 1.29300 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளமை புலம் பெயர்ந்தோரின் செயற்பாடுகளில் ஒரு முன்மாதிரியான செயற்பாடாக அமைகிறது. அவருக்கு பயன்பெறும் மாணவர் சார்பில் எனது நன்றிகள்.




<u>இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)</u> திருமதி .பு. இராஜலிங்கம், திருமதி.ச.சிவானந்தன், திரு.த.சிவசுப்பிரமணியம், திரு.நா.கணேசராஜா (கனிஸ்ட அதிபர்), திரு.நா.கேதீஸ்வரன் (POG), திரு.இ.ஆனந்தநடராசா (உப அதிபர்), திரு.ச.சிவநேஸ்வரன் (அதிபர்) திருமதி.ச.ஸ்ரீகாந்தன் (பிரதி அதிபர்), திரு.கு.விமலன், திருமதி.ந.நாகேஸ்வரன், திருமதி.கே.தர்மசோதி, திருமதி.வி..கணேசராஜா, திருமதி.தெ.தில்லையம்பலம்

<u>முன்வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)</u> திருமதி.மே.பு.அ.பொன்கலன், செல்வி.அ.லதாஜினி, திருமதி.செ.சிவநாதன், திருமதி.க.குகதாசன், திருமதி.ஹே.சாந்தகுமார், திருமதி.சு.கஜபாலன், திருமதி..ஜெ.கலாசுலோசினி, செல்வி.சி.யசோதா, திருமதி.ச.நாகராஜா, திருமதி.ச.பாலசுந்தரம், திருமதி.ம.குணராஜா, திருமதி.அ.முகுந்தன், திருமதி.தி.ஜெயபாலன், திருமதி.வ.பத்மநாதன், திருமதி.ச.சிவநேசநாதன்.

<u>கடைசி வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)</u> திருமதி.க.செந்தில்குமரன், செல்வி.த.ரேவதி, செல்வி.பா.யாமினி, திரு.பா.உமாகரன், திரு.க.ஸ்ரீநந்தகோபன், திரு.க.கா.றமணன், திரு.வ.முருகதாஸ், திரு.க.சிவசங்கர், திரு.வ.துவாரகன், திரு.செ.ஜெயச்சந்திரன், திரு.த.அருளரசன், திரு.சோ.ஜெயானந்தன், திரு.சோ.தபேசன், திருமதி.சா.ஜெயராஜன், திருமதி.ய.ஸ்ரீகுமரன், திருமதி.றொ.மா.பவானந்தன்.

# ஏற்றமிகு கல்லூரியின் ஏணிப்படிகள்

கிராமப் புறப் பாடசாலையாக விளங்கும் எமது கல்லூரி கல்வித் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் கடந்த தசாப்த காலங்களில் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளது. எமது கல்லூரியின் வளர்ச்சியானது ஓர் அசுரப் பாய்ச்சல் என்று கூறினால் அது மிகையாகாது. மாணவர்களுக்கு கல்வியிலும் உடல், உள விருத்தியிலும் பரந்துபட்ட சமவாய்ப்பு வழங்கப்படுகின்றமை புதிய கல்வி சீர்திருத்தத்தின் எண்ணக் கருவினை உறுதிப்படுத்தி நிற்கின்றது. இது வரை நாம் நிகழ்த்திவருகின்ற சாதனையானது புகழ்பூத்த கல்லூரிகளுக்கு ஒரு சவாலாகவும் பிரதேசமட்ட பாடசாலைகளுக்கும் ஓர் வழி காட்டியாகவும் அமைவது பெருமைக்குரிய விடயமாகும்.

## கல்வித்துறையில்.....

கல்விசார் வளர்ச்சியானது, கிராமிய வறிய சிறுவர்களின் கல்விப் பசியகற்றும் சேவையில் கல்லூரி பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. இந்த வகையில் 1993ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தி பெற்றமை இக்கல்லூரி வரலாற்றின் அதி உயர் பெறுபேறாக இருப்பதுடன் இப்பிரதேசத்திற்கும் ஓர் பெருமிதத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் இப் பாடசாலை மாணவர்கள் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்திபெற்று வருகின்றனர். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் இங்கு புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களில் 99% மாணவர்கள் புலமைப்பரிசிற் பணத்தைப் பெறுபவர்களாவர். இதுவரை 60 மாணவர்கள் எமது கல்லூரியிலிருந்து புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியெய்தி உள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

1994 இல் க.பொ.த (சாதாரணப்) பரீட்சையில் 28 மாணவர்கள் உயர்தர வகுப்புக்களில் கல்வியைத் தொடரும் வகையில் சித்தியெய்தினர். இத்தகைய வெற்றியானது இப்பாடசாலையிலேயே க.பொ.த(உ/த) வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு வித்திட்டது. க.பொ.த(சா/த) பரீட்சையைப் பொறுத்தவரை அவையும் வளர்ச்சிப் போக்கையே காட்டி நிற்கின்றன. ஏறத்தாழ 60% மாணவர்கள் தற்போது க.பொ.த(உ/த) வகுப்புக்களுக்கு தகுதி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வீதம் இனிவரும் காலங்களில் அதிகரிக்கும் என உறுதியாக நம்புகின்றோம்.

1995 இல் ஆரம்பித்த உயர்தர வகுப்பின் முதலாவது தேர்வு 1997 இல் நடைபெற்றது, இடப்பெயர்விற்கு முன் 28 மாணவர்களைக் கொண்ட இவ்வகுப்பானது இடப்பெயர்வின் பின் 7 ஆகச் சுருங்கியது. இப்பரீட்சைக்குத் தோற்றிய 7 பேரும் பல்கலைக்கழக அனுமதித் தகுதி பெற்றமை எமக்குக் கிடைத்த வெற்றியாகும். இத்தேர்வின் மூலம் இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெறும் வாய்ப்பு எடுத்த எடுப்பிலேயே எமக்கு பெருமிதத்தைத் தந்தது. தொடர்ந்து இது வரை நடைபெற்ற உயர்தர பரீட்சையின் மூலம் ஒவ்வொரு வருடமும் தவறாது பல்கலைக்கழகத்திற்கு எமது கல்லூரியில் இருந்து மாணவர்கள் செல்கின்றனர். இது மாத்திரம் அன்றி தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் எமது மாணவர்கள் வருடாவருடம் அனுமதி பெறுகின்றனர். இது வரை நடைபெற்ற உயர்தரப் பரீட்சைகளில் தோற்றிய மாணவர்களில் 99% மானோர் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுள்ளனர். இதுவரை பல்கலைக்கழகத்திற்கு 16 மாணவர்களும், தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கு 5 மாணவர்களும் அனுமதி பெற்றுள்ளனர்.

## விளையாட்டுத்துறையில்.....

எமது விளையாட்டுத் துறையின் வளர்ச்சியானது கல்வி சார் வளர்ச்சிக்கும் வளத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குரிய நிறுவனங்களின் பார்வை நம்மீது திரும்புவதற்கும் காரணமாய் அமைந்தது. விளையாட்டுத் துறையில் நாம் ஆற்றிவரும் சாதனைகள் ஏனைய பாடசாலைகளுக்கு சவால்விடும் வகையில் அமைந்துள்ளன.

இந்த வகையில் எமது வலைப்பந்தாட்ட அணிகள் பெற்று வரும் சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட

வேண்டியனவாகும். 1993இல் ஆரம்பித்த வலைப்பந்தாட்ட அணி மிகக் குறுகிய காலத்தில் அசுர சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. எடுத்த எடுப்பிலேயே கோட்டமட்டப் போட்டிகளில் பங்கேற்றும் வயதுப்பிரிவுகள் யாவற்றிலுமே 1ம் இடத்தைப் பெற்று தனது நிலையில் தளராது நிற்கின்றது. இது வேறெந்தப் பாடசாலையுமே நிகழ்த்தாத ஒரு சாதனையே ஆகும். மேலும் இரண்டாவது மாகாணமட்டப் போட்டி தொடக்கம் 9 வது மாகாண மட்டப் போட்டி வரை (1997 தொடக்கம் இன்று வரை) எமது பாடசாலை வலைப்பந்தாட்ட அணிகள் தொடர்ச்சியாக சம்பியன்களாக வந்தமை அகில இலங்கை ரீதியில் எந்த ஒரு பாடசாலையும் பெற்றுக் கொள்ளாத ஒரு சாதனை ஆகும். இவ் வகையில் இது வரை மாகாண மட்டப் போட்டிகளில் 4 முதலிடங்களையும், 4 இரண்டாம் இடங்களையும், ஒரு மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

உதைபந்தாட்ட அணியும் 1993 இலே தான் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வணி எடுத்த எடுப்பிலேயே மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றமை எமது பாடசாலைக்கு மட்டுமல்ல இப்பிரதேசத்திற்கே பெருமிதத்தைக் ஏற்படுத்தியது.. தொடர்ந்து உதைபந்தாட்ட அணிகள் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் குறிப்பிட்ட வெற்றிகளை ஈட்டி நிற்கின்றன. காலங் காலமாக உதைபந்தாட்டத்தில் பயின்று வந்த பாடசாலைகளுக்கு நிகராக எமது அணியும் பலமான ஒரு அடித்தளத்தில் இயங்கி வருகின்றது. உதை பந்தாட்டத்திற்கு ஒரு பொருத்தமான மைதானம் இல்லாத வேளையிலும் கூடநாம் உதைபந்தாட்டத்தில் நிலைத்து நிற்பது முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

1999 இலேயே உருவாக்கம் பெற்ற எமது கரப்பந்தாட்ட அணியானது மிகத் துரித கதியில் வளர்ச்சியடைந்து இன்று மாகாண மட்டத்திலும் அரை இறுதி வரை முன்னேறியுள்ளது. கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் வெற்றிகளை ஈட்டிவரும் கரப்பந்தாட்ட அணியின் சிறப்பம்சமாக 2003 இல் 15 வயதுப் பிரிவு அணி மாகாண மட்டப் போட்டியில் அரை இறுதிவரை முன்னேறி கரப்பந்தாட்டத்திலும் நாம் மாகாண மட்டத்தில் சாதனை நிகழ்த்துவோம் எனக் கட்டியங்கூறி நிற்கின்றது.

கல்வித் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் நாம் நிகழ்த்தி வரும் சாதனைகள் அகில இலங்கை ரீதியில் எமது பாடசாலையும் பல முன்னணிப் பாடசாலைகளுக்கு சவாலாக இருக்கின்றமை எமக்குப் பெருமிதம் அளிக்கின்றது. சுருங்கக் கூறின் ஒரு கிராமியக் கலவன் பாடசாலையாக விளங்கும் எமது கல்லூரி கல்விச் சாதனைகளோடு ஆண்கள், பெண்களுக்கான விளையாட்டுக்களிலும் சாதனை படைத்து ஏனைய பாடசாலைகளுக்கு வழிகாட்டியாகவும் எடுத்துக் காட்டுக்குரியதாகவும் விளங்குவது பெருமைக் குரியதே.

### கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியோர்....

இன்று பல்வேறு துறைகளில் புகழ் பூத்துப் புதுப் பொலிவுடன் மிளிர்ந்து கொண்டிருக்கும். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதில் கல்விமான்களும், கல்விப்பணிப்பாளரும், கட்டிட அமைப்பாளர்களும், பணவுதவி செய்த ஆர்வலர்களும் எமக்கு உதவியாகவும் வழிகாட்டியாகவும் நன்மனதோடு செயற்பட்டனர். அவர்கள் அனைவரையும் கல்லூரிச் சமூகம் நன்றியுடன் என்றும் நினைவில் கொள்ளும்.

### வந்தனத்துக்குரிய வழிகாட்டிகள்....

1. உயர்திரு. க. கந்தசாமி
   (முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்.)
2. உயர்திரு. இ. சிவானந்தன்
   (முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்.)
3. உயர்திரு. எஸ்.மகாலிங்கம்
   (முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்.)
4. உயர்திரு. வீ. இராசையா
   (வடக்குக் கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்.)
5. உயர்திரு. எஸ். சிவராஜா
   (முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
6. திருமதி றெ. இருதயநாதன்
   (வலயக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம்)
7. திரு.ப.விக்னேஸ்வரன்
   (கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்)
8. உயர்திரு த. துரைசிங்கம்
   (முன்னாள் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
9. உயர்திரு. க. தனபாலசிங்கம்
   (கோட்டக் கல்விப் பணிப்பாளர் சண்டிலிப்பாய்)

## கல்லூரி அபிவிருத்திக்கு நிதியுதவியோர்...

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன நிதிவளமற்று இருந்த வேலையில் பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்கு முற்பணமாக நிதியுதவி வழங்கியோர்.

| | |
|---|---|
| 1. திரு ச. சிவநேஸ்வரன் | அதிபர் |
| 2. திரு.ச. கந்தசாமி | முன்னாள் உபஅதிபர் |
| 3. திருமதி ச. ஸ்ரீகாந்தன் | ஆசிரியர் |
| 4. திரு இ. ஆனந்தநடராஜா | ஆசிரியர் |
| 5. திரு.த. சிவசுப்பிரமணியம் | ஆசிரியர் |
| 6. திருமதி செ. சண்முகம் | ஆசிரியர் |
| 7. திரு.செ. துரைராசா | ஆசிரியர் |
| 8. திரு. நா. கேதீஸ்வரன் | ஆசிரியர் |
| 9. திருமதி.வ. பத்மநாதன் | ஆசிரியர் |
| 10. திரு க. சிவசங்கர் | ஆசிரியர் |

**பல்வேறு வகையில் நிதியுதவியோர்...**

1. திரு செ. அரவிந்தன்
   திருமதி தி. குணாசுதன் லண்டன் } 61,000 ரூபா
2. முன்னாள் உபதிபர் திருமதி.சத்தியலீலா இராசரத்தினத்தின் மூலம் அவுஸ்திரேலியாப் பழைய மாணவர் அனுப்பியது. 61 400 ரூபா
3. கனடா பழைய மாணவர் சங்கம் – 3,40,110 ரூபா (இந் நிதி மூலம் பாடசாலைக்கு 6 பரப்புக்காணி கொள்ளவனவு செய்யப்பட்டது.)
4. திரு.க.கஜரோகணன்(லண்டன்), திரு.க.ஆத்மநாதன் (ஜேர்மனி), திரு.க.கமலநாதன் (அவுஸ்திரேலியா), திரு.திருமதி சோமநாதன் (திருநெல்வேலி) ஆகியோரால் மைதான விஸ்தரிப்புக்கென 787 500 ரூபா பெறுமதியான காணி கொள்வனவு செய்யப்பட்டு தமது பேரனார் அப்புப்பிள்ளையின் நினைவாக நன்கொடையாக வழங்கப்பட்டது.
5. திரு A. F. மரியதாஸ் அவர்களூடாக லண்டனிலுள்ள LADDER நிறுவனம் வசதி குறைந்த மாணவர்களுக்கு தவணைக்கு 3000 ரூபா வீதம் இதுவரை 15,000 ரூபாய் வழங்கியுள்ளது.
6. கனடா – சண்டிலிப்பாய் ஐக்கிய சங்கத்தினால் சுற்றுமதில் அமைப்பு வேலைகளின் ஒரு பகுதி வேலைக்கு 143 000 ரூபா வழங்கப்பட்டது.
7. திரு ஐ. தர்மகுலசிங்கம் ( சுவிஸ் – புங்குடுதீவு) வசதி குறைந்த 25 மாணவர்களுக்கு 1,29,300 ரூபாவை வழங்கியுள்ளார்.
8. திரு.ச.தயாபரன் (கனடா) கல்லூரி முகப்பு வளைவு செய்வதற்கு ரூபா 25 000 ரூபாய் வழங்கியுள்ளார்.

## கட்டட வளவிருத்தியில் கரம் கொடுத்தோர்

1. திரு க. சிவபாலன், பொறியியலாளர் கல்வித் திணைக்களம்.
2. திரு தியோஜினஸ், தொழில்நுட்ப உத்தியோகத்தர்.
3. திரு செந்தில்நடராசா, பாடசாலைக்கட்டட வேலைகள் மேற்பார்வையாளர்.
4. திரு தங்கப்பிரகாசம், பாடசாலைக்கட்டட வேலைகள் மேற்பார்வையாளர்
5. திரு.அழகரத்தினம், கட்டட அமைப்பாளர்
6. திரு நவரத்தினம், கட்டட அமைப்பாளர்.
7. திரு கம்பர், கட்டட அமைப்பாளர்
8. திரு இ. சந்திரகுமார், கட்டட மூலப்பொருள் வழங்குனர்.

**உள்ளக வீதி அமைப்பிற்கு**
**உளம் உவந்து உதவியோர்**

1. திரு இ. இராஜலிங்கம் – சண்டிலிப்பாய்
2. திரு. ஐ.இராமச்சந்திரன் – உடுவில்

} வீதி அமைப்பு ஒப்பந்தகாரர்

## 1993-2004 வரை எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த பெருந்தகைகள்

*ஓய்வு பெற்றோர்*

1. திருமதி.பு.பரராஜசிங்கம், 15 வருடங்கள் எமது கல்லூரியில் ஆசிரியராகவிருந்து 1995 இல் ஓய்வு பெற்றார்.
2. திருமதி.ச.சற்குணராஜா 1996 இல் ஓய்வு பெற்றார்.
3. திரு.த.வீரசிங்கம் அவர்கள் 1996 ஆம் அண்டு கற்பிக்கும் காலத்தில் காலமானார்.
4. திரு.ச.கந்தசாமி 26 வருடங்கள் எமது கல்லூரியில் ஆசிரியராக, கனிஷ்ட பிரிவுத் தலைவராக, பிரதி அதிபராக கடமையாற்றி 1997 இல் ஓய்வு பெற்றார்.
5. திரு.ப.சிவசூரியர் – 8 வருடங்கள் எமது கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றி 1998 இல் ஓய்வு பெற்றார்.

6. திருமதி.க.கனகராஜசிங்கம் எமது கல்லூரியில் 20 வருடங்கள் ஆசிரியராகவும், கனிஷ்ட பிரிவுத் தலைவராகவும் கடமையாற்றி 1999ல் ஓய்வு பெற்றார்.
7. திருமதி.கீ.குகனேசன் 1999ம் ஆண்டு எமது கல்லூரியில் கல்வி கற்பிக்கும் காலத்தில் காலமானார்.
8. திரு.செ.துரைராசா அவர்கள் 15 வருடங்களாக இக்கல்லூரியில் ஆசிரியராகவும், கனிஷ்ட பிரிவுத்தலைவராகவும், சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.
9. திருமதி.செ.சண்முகம் அவர்கள் எமது கல்லூரியில் 16 வருடங்கள் ஆசிரியராக, கனிஷ்ட பிரிவுத் தலைவராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.
10. திருமதி.ரா.சிவசுப்பிரமணியம் 1998ம் ஆண்டு முதல் எமது கல்லூரியில் கடமையாற்றி இவ்வருடம் 2004ல் காலமானார்.

இடமாற்றம் பெற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | செல்வி.சி.இந்துமதி | ஆசிரியர் |
| 2. | திரு.பொ.சிவநேசன் | ஆசிரியர் |
| 3. | திருமதி.ச.சிவபாலன் | ஆசிரியர் |
| 4. | திருமதி.கு.பொன்னுத்தரை | ஆசிரியர் |
| 5. | செல்வி.க.பூங்கொடி | ஆசிரியர் |
| 6. | செல்வி.வ.ஜெயதேவி | ஆசிரியர் |
| 7. | செல்வி.ந.மலர்விழி | ஆசிரியர் |
| 8. | செல்வி.பி.சிவானுஜா | ஆசிரியர் |
| 9. | செல்வி.சு.பரமநாதபிள்ளை | ஆசிரியர் |
| 10. | திருமதி.க.இராஜசிங்கம் | ஆசிரியர் |
| 11. | திரு.அ.பாலசந்திரன் | ஆசிரியர் |
| 12. | திருமதி.ஜெ.டெனிசியஸ் | ஆசிரியர் |
| 13. | திரு.சி.புவனேந்திரன் | ஆசிரியர் |
| 14. | திரு.ரே.கங்காதரன் | ஆசிரியர் |
| 15. | செல்வி.சிரேணுகா | ஆசிரியர் |
| 16. | செல்வி.அஞ்சனா | ஆசிரியர் |
| 17. | திரு.க.சத்தியதாசன் | ஆசிரியர் |
| 18. | செல்வி.ப.சுதாத்மிகா | ஆசிரியர் |

தேடிச்சோறு தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பம் மிக உழன்று - பிறர்
வாடப்பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவமெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்பு மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

மகாகவி பாரதியார்

## முன்னாள் அதிபர்



திரு. சோ. சோமசேகரம் B.A. (Hons) Dip. in Ed.

## முன்னாள் உப அதிபர்



திரு. ச. கந்தசாமி Sp. Trd.



## Net Ball Under Ninteen
## North & Eastern Provincial Level Champions 2003



**Standing:** M.Sweety, M.Thulasimalar, J.Gayanthiny, S.Sharletvathany, S.Piruntha, N.Kirushanthiny, J.Kayeetha.

**Seated:** Mrs.S.Sivanathan, Mr.N.Ketheeswaran(POG), T.Sulaxsana, Mr.S.Sivaneswaran (Principal), T.Sankeetha, Mr.K.Vimalan, Miss.S.Revathy.

## Net Ball Under Nineteen
## North & Eastern Provincial Level Runner's Up 2001



**Standing:** T.Nilany, S.Morinshameny, K.Vilasiny, S.Pavitta Subachiny, A.Anusha, S.Nimaliny, P.Suganja, V.Rathika.

**Seated:** S.Sugatharshini, S.Kumuthiny, Mr.S.Sivaneswaran (Principal), S.Sinthuja, Mr.K.Vimalan, Mrs.S.Sivananthan.

உ
சிவமயம்

10.03.2000 வெள்ளிக்கிழமையன்று யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
விஞ்ஞானகூடத்திறப்பு விழாவன்று பிரதம விருந்தினராக வருகை தந்து
சிறப்பித்தவரும் அண்மையில் சேவையிலிருந்து இளைப்பாறவிருப்பவருமாகிய
வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்கள மாகாணக் கல்விப்பணிப்பாளர்

**உயர்திரு.க.கந்தசாமி அவர்களை**

*மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் வாழ்த்தி வரவேற்றுச் சூட்டும்*

# கவிமாலை

வந்தனம் தந்தோம் ஐயா - நாங்கள்
வளமான கல்லூரி வான்போ லுயர்த்திட
வழிசமைத்து உதவிசெய்த வள்ளலே! தங்கட்கு
(வந்தனம்)

தரமிரண்டைத் தரமொன்றாய் உயர்த்தி வைத்தீர்!
தரணியில் யாம்சிறக்க தகைமை சேர்த்தீர்!
உரமான உதவுகரம் உவந்தளித்த தங்கட்கு
(வந்தனம்)

மகாவித்தி யாலயத்தை மாற்றி யமைத்து
மாகல் லூரியா யெமக் கேற்றி வைத்தீர்!
மாண்புறு சேவையை மனமகிழ்ந்து தந்ததற்கு
(வந்தனம்)

பல்லோரை மகிழவைக்கும் பாண்ட் வாத்தியம்
கல்வியைச் சிறக்க வைக்கும் ஆய்வு கூடம்
நல்முறையில் நாம் சிறக்க நயந்தளித்த தங்கட்கு
(வந்தனம்)

எல்லாச் சிறப்புகளும் எழிலான இவ்வுலகில்
எம்பணிப் பாளருக்கு என்றுமே கிடைத்திட
ஏற்றியே! போற்றியே! இன்புற்று வாழ்ந்திட
(வந்தனம்)

சுபமங்களம்

வணக்கம்

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,
சண்டிலிப்பாய்.
10.03.2000.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

கவிதை ஆக்கம்: பிரசங்கபூஷணம் சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி
(ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்விவலயம்)

# நவ பிராய்டிச உரையாடல்கள்

பேராசிரியர் சபா.ஜெயராசா

சிக் மண்ட் பிராய்ட்டினுடைய பிரதான ஆய்வுகளை மீள வலியுறுத்தியும், மாறுபட்டும் நவ பிராய்டிசவாதம் (Neo - Freudism) வரலாயிற்று. தனி மனித உளவியலை உயிரியற் கண்ணோட்டத்தில் ஆராய்வதுடன் மட்டும் நின்றுவிடாது, சமூகவியற் கண்ணோட்டத்திலும் ஆராய வேண்டும் என்ற முனைப்பு நவ பிராய்டிச வாதிகளிடத்து மேலெழுந்தது. இந்த வகையில் கறின் கோர்ணி, எறிக்புறொம், ஹறி ஸ்ராக் சுலிவ்வன், லகான் ஆகியோரின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை.

பேர்லினிலுள்ள உளப்பகுப்பு ஆய்வு நிறுவகத்திலும், சிக்காகோவிலுள்ள சமூகவியல் ஆய்வுக்கான புதிய கல்வி நிறுவனத்திலும், நியுயோர்க்கில் உள்ள உளப்பகுப்பு நிறுவகத்திலும் பணியாற்றிய கோர்ணி அம்மையார், பாரம்பரிய உளப்பகுப்பாய்வாளர்கள் வலியுறுத்திய உயிரியல் அடிப்படைகளைத் திறனாய்வுக்கு உட்படுத்தியதுடன் மனித நடத்தைகளுக்கும் உளப்பிணிக்கு முரிய சமூகக் காரணிகளை வலியுறுத்தத் தொடங்கினார்.

“உளப்பகுப்பின் புதிய வழிகள்” (New ways in psychoanalysis) “எமது உள்ளளார்ந்த உள முரண்பாடுகள்” (Our Inner conflicts) ““உளப்பிணியும் மனித வளர்ச்சியும்” (Neurosis and Human Growth) முதலிய நூல்களை எழுதிய கோர்ணி அம்மையார் சிக்மன்ட் பிராய்ட்டின் பெண்ணிய எதிர்ப்புத் தளத்தை மீளாய்வுக்கு உள்ளாக்கினார். ஐரோப்பாவிலே கிளர்ந்தெழுந்த மார்க்சிய சிந்தனைகளின் செல்வாக்குகளும் கோர்ணி அம்மையாரின் சிந்தனை வீச்சுக்கு வலுவூட்டின. சிறுபராயத்திலிருந்தே நிறைவேற்றி வைக்கப்படாத பாலியல் உணர்வுகளும், அழுத்திவைக்கப்பட்ட அடக்கல்களும், சாதாரண நிலையில் வெளிவர முடியாத நனவிலி மனக்கோலங்களும் கொண்ட மனித இயல்பு உலகம் முழுவதிலும் ஒரே நிலையிலே காணப்படுகின்றது என்று பிராய்ட் கூறுவதை கோர்ணி அம்மையார் ஏற்றுக் கொள்ளவில்லை. சமூக இருப்பும் பண்பாட்டுக் கோலங்களும் மனித உணர்வுகளிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்துதலை சிக்மன்ட் பிராய்ட் கருத்திலே கொள்ளவில்லை என்பதை கோர்ணி சுட்டிக் காட்டினார்.

சிக்மன்ட் பிராய்ட் குறிப்பிட்ட வாழ்தல் இயல்பூக்கம், ஆண்மைமிடுக்கு (Masculinity) பெண்மை நிலை (Feminity) முதலியவை வெறும் இயந்திரப்பாங்கானவை என்று கோர்ணி கருதினார் யந்திரப்பாங்கான அணுகுமுறைக்கும் இயங்கியல் அணுகுமுறைக்குமுள்ள வேறுபாட்டை மார்க்சிய சிந்தனைகளில் இருந்து கோர்ணிஅம்மையார் பெற்றுக் கொண்டார். இந்த இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைப் பின்வரும் எடுத்துக் காட்டினால் விளக்கலாம்.

அருவி என்பது தண்ணீரின் பிறிதொரு வடிவம் என்று கொள்ளுதல் இயந்திரப்பாங்கான அணுகுமுறை. தண்ணீர் அருவியாகும் பொழுது அது புதியதொரு விதிக்கும் தருக்கத்துக்கும் உள்ளாகின்ற தென்றும் அது வேறுபட்ட விளைவை உண்டாக்கு கின்ற தென்றும் கருதுதல் இயங்கியல் அணுகுமுறை.

சிக்மன்ட் பிராய்ட் பயன்படுத்திய ஆய்வு முறையும்., அவர்குறிப்பிடும் உலகம் முழுவதுக்கும் பொதுவான உளவியலும் கோர்ணியால் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மனிதருக்குள்ளே பொதிந்துள்ள பண்பாடு இயல்பு குறித்த மனிதரின் இயக்கத்திலும், நடத்தையிலும் விசை கொள்ளுதல் கோர்ணியால் வலியுறுத்தப்பட்டது.

கோர்ணியின் (Karen Horney) யின் கருத்துக்களின் (1885 - 1952) தொகுப்பைப் பின்வருமாறு கூறலாம்.

அ) அடிப்படையான பதகளிப்பில் (Basic Anxiety) இருந்தே மனித உறவுகள் குழப்பமடைகின்றன. இவ்வாறான குழப்பத்துக்கு சிக்மன்ட் பிராய்ட் குறிப்பிடுதல் போன்று பாலியல் உந்தல் காரணமல்ல.

ஆ) நெருக்குவாரம் மிக்க இந்த உலகிலே குழந்தை உளவியலடிப்படையிலே தனிமைப்பட்டும் ஆதரவிழந்து நிற்பதால் அடிப்படையான பதகளிப்பு மேலோங்குகின்றது.

இ) அடிப்படையான பதகளிப்புக்கு எதிராக மூன்று விதமான நடத்தைகள் மனிதரிடத்தே கிளர்ந்தெழுகின்றன. அவையாவன:

அ) அதனோடு இணைந்து நேராக செயற்படல்,
ஆ) எதிராகச் செயற்படல்.
இ) விடுபட்டு அந்நியமாதல்.

எதிராகச் செல்வோரிடத்து மற்றவர்களிடத்து ஆதிக்கம் செலுத்தும் அதிகார விருப்பு மேலோங்கி நிற்கும். விடுபட்டுச் செல்வோரிடத்துத் தனிமை நாட்டம், அதிக சுயாதீன விருப்பு ஆகியவை மேலோங்கிக் காணப்படும்.

ஆண்கள் குழந்தையைத் தமது உடலின் உள்ளே தாங்கி வளர்க்க முடியாத நிலையில் அவர்களுக்குப் பெண்கள் மீது ஒருவித

பொறாமை ஏற்படுகின்றது. அந்தப் பொறாமைக்கு அவா் "கருப்பைப் பொறாமை" (Womb envy) என்று பெயரிட்டாா். இந்தப் பொறாமையை ஈடுசெய்வதற்காக ஆண்கள் புத்தாக்கம் செய்வதிலும், புகழீட்டுவதிலும், எழுத்தாக்கம் செய்வதிலும் அதிக அளவிலே ஈடுபடுகின்றாா்கள் என்பது கோா்ணியின் கருத்து.

அடுத்ததாக எறிக் புறோமை நோக்கலாம்.

பிராய்ட்டிசம் மற்றும் மாா்க்சியம் ஆகியவற்றின் ஆழ்ந்த செல்வாக்குகளுக்கு உட்பட்டவா் எறிக் புறோம் (Erich From) "விடுதலையில் இருந்து தப்புதல்" (Escape From Freedom) "விடுதலை பற்றிய பயம்" (The Fear of Freedom) முதலிய நூல்கள் வாயிலாகவும். பல ஆய்வுக்கட்டுரைகள் வாயிலாகவும் புரோமின் கருத்துக்கள் வெளிவந்தன. உளப் பகுப்பையும், மாா்க்சியத்தையும் இணைத்து தனித்துவமான ஓா் ஆளுமைக் கோட்பாட்டை உருவாக்குவதற்கு அவா் முயன்றாா்.

பிராய்ட் வலியுறுத்திய உளவியலின் உயிரியல் நிா்ணயிப்புப் பண்புகளை புறோம் ஏற்றுக் கொள்ளவில்லை. உளவியலின் பிரதான பிரச்சினை அடிப்படையான இயல்பூக்கத் தேவைகளை நிறைவேற்றுதலுடன் மட்டும் தொடா்புடைய தன்று. தனி மனிதா் தமக்குரிய உலகுடன் கொள்ளும் குறித்துரைக்கத்தக்க தொடா்புகள் வழியாகவே உளவியற் பிரச்சினைகள் எழுவதாக புறோம் குறிப்பிட்டாா் மனிதருக்கும் சமூகத்துக்குமிடை யிலான தொடா்புகள் பிராய்ட் குறிப்பிடுதல் போன்று மாறா நிலையில் தரித்து நிற்கவில்லை என்றும் தொடா்ந்து மாறிய வண்ணமிருப்பதாகவும் அவா்கள் மேலும் வலியுறுத்தினாா்.

"மனித இயல்பு" மனிதராலே உருவாக்கப்படுகின்றது. இதை விளங்கிக் கொள்வதற்கு மாா்க்ஸ் குறிப்பிடுதல் போன்று வரலாற்றின் விளைவுகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பது புறோமின் துணிபு. வரலாற்றால் மனிதா் உருவாக்கப்படுதல் மட்டுமன்றி வரலாற்றையும் மனிதரே உருவாக்குகின்றனா் என்பதை அவா் மீள வலியுறுத்தினாா். வரலாற்று வளா்ச்சி மனித நடத்தைகளுக்கும் விலங்கு நடத்தைகளுக்குமிடை யேயுள்ள இடைவெளியை அதிகரிக்கச் செய்து வருகின்றது. மனிதா் கடந்த கால அனுபவங்களைக் குறியீட்டு வடிவிலே களஞ்சியப் படுத்தி எதிா் காலம் பற்றிய புலக் காட்சியை இயலுமானதாக்குகின்றனா். தமது தொழிற்பாடுகளையும் முடிவுகளையும் மனிதரால் புலக் காட்சிப்படுத்த முடிகிறது.

வரலாற்றினால் அனுகூலம் பெற்றோா் மனித வாழ்விலே தாம் தவிா்க்கப்பட முடியாத முக்கியத்துவம் பெறுகின்றனா் என்பதை நிலைநாட்ட முயல்கின்றனா். வரலாற்றிலே பிரச்சினை எதிா் கொள்ளும் பொழுது நியாயங்களை விளங்கிக் கொள்வதற்குரிய கருத்தியல் (Ideology) அவசியமாகின்றது. மனித ஆளுமை உருவாக்கத்தில் குறிப்பிட்ட சமூகத்தின் பொருண்மிய நிலவரங்கள் (Economic Conditions) பங்கு கொள்வதும் அவற்றினூடே செல்வத்தை அடைய விரும்பும் அகவயமான பொருண்மிய ஊக்கல் (Subjective econominc motives) தனி மனித ஆளுமையின் இயல்போடு தொடா்புபட்டு நிற்றலும் புறோ மால் விளக்கப்படுகின்றன.

நோய்வாய்ப்பட்ட சமூக இயல்புகளின் மத்தியில் நிலவும் சகிக்க முடியாத உணா்வுகளின் சூழலில் தனி மனிதா்கள் தாம் தாம் தப்புவதற்கு முயல்கின்றாா்கள். ஒவ்வொருவரதும் குணவியல்புகள் பல்வேறு கூட்டுப் பண்புகளால் உருவாக்கப்படுகின்றன. சமூக மயமாக்கலாலும், தன் மயமாக்கலாலும் உருவாகும் ஒருவரது குணவியல்பு சாா்பு நிலையில் ஓரளவு நிரந்தரப் பண்புடையதாகவுள்ளது. இதன் உருவாக்கத்தில் குடும்பம் முக்கியத்துவம் பெறுகின்றது. "குடும்பம் சமூகத்தின் உளநிலை முகவா்" (Psy Chic agency) என்றவாறு புறோமின் விளக்கம் விரிவடைந்து செல்கின்றது.

ஒவ்வொரு சமூகமும் தமது உறுப்பினா்களிடையே இசைவான குணவியல்புகளை உருவாக்குகின்றது. தனி மனிதரிடையே வேறுபடும் குணவியல்புகள் குறித்த சமூகத்தின் ஏற்புடைமைக்கு உட்பட்டே நிகழ்கின்றன. இந்நிலையில் மனித ஆளுமை ஆக்கத்துடன் தொடா்புடைய குணவியல்புகளைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1. ஏற்புடைமைக் குணவியல்பு.
**(The Receptive Character)**

சுயாதீனமான இயல்பும், யாதாயினும் ஒருவா் தம்பால் அக்கறை செலுத்துவாா் என்ற எதிா் பாா்ப்பும், தமது தேவைகள் புறத்தில் இருந்து நிறைவேற்றப்படும் என்ற உணா்வும், உணவு மற்றும் பானங்களில் விருப்பம் கொள்ளல் இதில் அடங்கும்.

2. சுரண்டல் நிலைக் குணவியல்பு.
**(The Exploitative Character)**

தமது விருப்புக்களை அதிகாரத்தால் அல்லது தந்திரத்தால் நிறைவேற்றுதல் முதலிய பண்புகள் இதில் உள்ளடங்கும்.

3. ஒழித்து மறைக்கும் குணவியல்பு.
**(The Hording Character)**

ஒழிப்பதாலும், மறைப்பதாலும் பாதுகாப்புத் தேட முற்படுதல், புறவுலகு தம்மைப் பாதிக்காதவாறு உறைவிடுதல் முதலிய பண்புகள் இப்பிரிவில் இடம் பெறும்.

4. அங்காடிக் குணவியல்பு:

**(The Marketing Character)**

பிறருக்கு விற்று விற்று இசைவாக்கம் செய்தல் அல்லது தன்னமை வாக்கிச் சமூக மயமாக்கலில் ஈடுபடல் முதலிய பண்புக் கூறுகள் இதில் இடம் பெறும்.

5. விளைவுதரும் குணவியல்பு:

**(The Productive Character)**

மற்றவர் மீது கள்ளங்கபடமற்ற அன்பு செலுத்தும் பண்பும், தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் இயல்பும் இதில் அடங்கும்

மனித ஆளுமைப் பெறுமானங்களை வாழ்தல் நயப்பு (Bio philly), வாழ்தல் வெறுப்பு (Necto philly) என்றவாறு இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலும் புறோமினுடைய ஆக்கங்களிலே காணப்படுகின்றன. வளர்ச்சியையும் முன்னேற்றங் களையும் விரும்புதல் வாழ்தல் நயப்பு ஆகும். அவற்றைக் காணப்பொறுக்காத குணவியல்பு வாழ்தல் வெறுப்பு ஆகும்.

சுவில்வனுடைய சிந்தனைகளை அடுத்து நோக்கலாம்.

சுவில்வன் (H.S.Sulliran) ஓர் உளப்பிணி ஆய்வாளராக கடமையாற்றினார். ''நவீன உளப்பிணி இயல் தொடர்பான எண்ணக் கருக்கள" (Concept of Modern Psychiatry) என்ற நூலில் அவருடைய நவ பிராய்டிசக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன. அனைத்து மனிதச் செயற்பாடுகளும் இரண்டு பிரிவுகளில் அடக்கப்படலாம் அவையாவன.

1. திருப்தியின் தொழிற்பாடு
2. பாதுகாப்பின் தொழிற்பாடு

உடலியல் தேவைகளை நிறைவேற்றுதலு டன் தொடர்புடையது திருப்தியின் தொழிற்பாடு. சமூக பண்பாட்டுத் தேவைகளுக்கு இசைவாக இயங்குதல் பாதுகாப்பின் தொழிற்பாடு.

உடலியல் தேவைகளை நிறைவேற்றும் பொழுது உள் உடலுறுப்புக்கள் சாந்தமடைகின்றன. குழந்தை நிலையில் வாய் நிலை இயக்கவியற் பண்பு (Oral dynamism) திருப்தியின் தொழிற்பாடு களை இயக்குகின்றது. தாயின் விருப்பு வெறுப்புக்களை இனங்காணும் ஒத்துணர்வு (Empathy) *குழந்தைப் பருவத்தில்* உருவாகிவிடுகின்றது. பதகளிப்பு என்பதிலிருந்து தம்மைப் பற்றிய பிரக்ஞை ஒருவருக்கு ஏற்படுகின்றது. இவற்றின் பின்னணியில் ஆளுமை வளர்ச்சியின் ஆறு பிரதான வெளிப்பாடுகளை சுவில்வன் குறிப்பிடுகின்றார்.

அவையாவன:

1. குழந்தை நிலை – இந்நிலையில் ஒத்துணர்வு பிரதான செல்வாக்குச் செலுத்தும்.
2. பிள்ளைமை நிலை – இந்நிலையில் குழந்தையின் விருப்பங்களுக்கும் பெற்றோரின் விருப்பங்களுக்குமிடையே முரண்பாடுகள் எழும்.
3. பிள்ளைமையின் தொடர்ச்சி நிலை – (Jwenile) இந்நிலையில் குழு இசைவு, மற்றும் போட்டி முதலிய பண்புகள் காணப்படும்.
4. கட்டிளமைக்கு முந்திய நிலை – இப் பருவத்தில் தன்மயமான போக்குகள் சமூக இயல்புகளை நோக்கி மாற்றமடையும்.
5. கட்டிளமை நிலை – இது ஆரம்பம், இடை நிலை, பின்னைய நிலை என்று பாகுபடுத்தப் படும். பாலியல் சார்ந்த நடத்தைகள் படிப்படியாக மீள வலியுறுத்தப்படும்.
6. முதிர்ச்சிப் பருவம் – மனித நடத்தைகள் முதிர்ச்சிக்குரிய இயல்புகளைப் பெறும்.

பாலியல் தளத்திலும், சமூகத் தளத்திலும் நின்று சுவில்வன், தமது கருத்துக்களை முன்மொழிந்தார். சிக்மன்ட் பிராய்ட்டை அடியொற்றி மனித வளர்ச்சிப் படிநிலைகளை முக்கியப்படுத்தவும் அவர் முயன்றார்.

பாரிஸ் நகரத்தில் பிறந்து வாழ்ந்த ஜே.எம்.ஈ.லகான் மருத்துவராக விளங்கியதுடன் உளப் பாகுப்பாய்வு, உளப்பிணி ஆய்வு ஆகிய துறைகளில் ஈடுபாடு காட்டினார். பிரான்ஸ் நாட்டில் வளர்ச்சி பெற்ற சர்றியலிசம் (Surrealism) என்ற அக நிலையதார்த்தத்தின் செல்வாக்கு அவர் மீது ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்தியது.

நனவிலி மனம் மொழி போன்ற கட்டமைப்புச் செய்யப்பட்டிருப்பதாக லாகான் விளக்கினார். ஒட்டுச் சித்திரங்கள் போன்று ஒருவித சொற் கோப்புக்கு உட்பட்டு நனவிலி உள்ளம் காணப்படுகின்றது என்பதை வலியுறுத்தினார். நனவிலி உள்ளத்தின் கலை வெளிப்பாடாக அமையும் சர்றியலிசப் புனைவுக்கு ஓர் உதாரணம் வருமாறு.

'நூலிழைகள் கோபுரப் பாரத்தைத் தாங்குகின்றன. மயிலிறகு அவளது மூளையிலிருந்து வெளிவருகின்றது. கருங்கல் ஆடைகளை அணிந்து அந்தப் பெண் தன்னை அலங்கரித்துக் *கொண்டிருந்தாள்*'.

துருவித் தூண்டிச் சீண்டுதல் உளப்பகுப்பு ஆய்வுக்கு அவசியம் என லகான் உணர்ந்தார். உளப்பகுப்பு ஆய்வைக் கணித மயப்படுத்தல் வேண்டும் என்ற கருத்தை 1975ஆம் ஆண்டில் ஜேல் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் உறுதியாக வெளியிட்டார். உளப்பகுப்பியலை மொழியியலு டனும், மானிடவியலுடனும் தொடர்புபடுத்திப் புது மெருகு வழங்கினார்.

மனித வளர்ச்சியில் கண்ணாடிப் பருவத்தின் (The mirror phase) முக்கியத்துவத்தை லகான் விளக்கலானார். குழந்தை பிறந்து ஆறு மாதம் முதல் பதினெட்டு மாதம் வரையிலான காலப் பகுதி கண்ணாடிப் பருவமாகின்றது. தனது சுயத்தைக் காணுதல் தொடர்பான உளமுனைப்புக்கள் இக்கட்டத்திலே முக்கியத்துவம் பெறுகின்றன. பேச்சு முழுமையாக வெளிப்படாத நிலையில் தன்னைப் பற்றிய சுய உணர்வின் வழியாக ஈகோவை உருவாக்கத்திற்கும் இது வழிகோலுகின்றது. உடலியக்க ஒருங்கிணைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் கண்ணாடிப் பருவத்தில் உருவாகின்றது. மனக் கோலங்களை அகவயமாகக் கட்டமைப்புச் செய்ய இப் பருவம் துணை நிற்கின்றது. குழந்தை எதிர் காலத்தில் பெற வேண்டிய ஒருங்கிணைப்பையும் (Unity) எதிர் காலத்திற்குரிய படிமத்தையும் எவ்வாறு அமைக்க வேண்டும் என்ற பொருளையும் உணர்த்தி நிற்கின்றது. மனித உருப்பின் தவிர்க்க முடியாத ஒரு தற்காலிக கட்டமைப்பாகக் கண்ணாடிப் பருவம் அமைகின்றது.

மனித இருப்பின் இடைத்தொடர்புகள் கொண்ட மூன்று ஒழுங்கமைப்புக்களை லகான் விளக்குகின்றார். அவையாவன:

1. கற்பனை ஒழுங்கமைப்பு
2. குறியீட்டு ஒழுங்கமைப்பு
3. நடப்பு நிலை ஒழுங்கமைப்பு

கற்பனை ஒழுங்கமைப்புக்கு என்பதற்கு தனித்துவமான ஒரு வரைவிலக்கணத்தை இவர் வழங்குகின்றார். கற்பனைகள் நடப்பியல் விளைவுகளைத் தரவல்லவை என்பது இவருடைய பிரதான கருத்து. கற்பனையின் ஒரு கூறு நிஜத்தைத் தடுத்து அந்நியமாதலை ஏற்படுத்திவிடுகின்றது.

குறியீட்டு ஒழுங்கமைப்பை விளக்குகையில் உளவியலுக்கும் மானிடவியலுக்கும் மொழியியலுக்கு முள்ள தொடர்புகளை லகான் வலியுறுத்துகின்றார். ஒருவர் பேசுவதற்கும், விரும்புவதற்குமுரிய தொடர்புகள் குறியீட்டு ஒழுங்கமைப்புடன் இணைகின்றன. நடப்பு நிலை ஒழுங்கமைப்பு கற்பனை மற்றும், குறியீட்டு ஒழுங்கமைப்புக்களைத் தழுவிச் செயற்படுகின்றது. நனவிலி மனம் மொழியைப் போன்று கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது. நனவிலியின் கருத்தை கனவுகளால் மட்டுமன்றி வாயிலிருந்து தவறிவிழும் சொற்களாலும் (Slips of the tongue) சொற்கட்டுமானத்திலிருந்து விடுபட்டு மேலோங்கி மொழித் தொடர்களினாலும் அறிந்து கொள்ள முடியும்.

தனது கருத்துக்களை நிறுவுவதற்கு அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான ஆய்வுகளை லகான் முன்னெடுத்தார். தனது கருத்தாடலை (Discourse) கணித மயப்படுத்தவும் முயன்றார்.

நவ பிராய் டிச சிந்தனைகள் உளப்பகுப்பின் கோட்பாட்டின் மட்டுப்பாடுகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தின. மார்க்சியம், பிராய்ட்டிசம் முதலியவற்றைத் தொடர்புபடுத்தி ஆய்வு செய்யும் முயற்சிகளும் நவ பிராய் டிச வாதிகளால் முன்னெடுக்கப்பட்டன. இந்த ஆய்வுகள், கல்வியியல், உளவியல், சமூகவியல், கலை இலக்கியத்திறனாய்வு, அழகியல் முதலாம் பல்வேறு துறைகளிலே பயன்படுத்தப்படுபவையாக அமைந்துள்ளன. ஆய்வாளர்களின் உரையாடல்களுக்குரிய கருத்தியல் வீச்சுக்களையும், அறிகைப் பிரயோகங்களையும் பிராய்ட் டிசமும் மார்க்சியமும் கொண்டுள்ளன.

## References


1) Freud,S. The interpretation of Dreams, (1950) London Allen and Unwin.
2) Freud,S. The psychopatholy of Everyday Life, (1948), Fisher and Unwin.
3) Freud,S. Totem and Taboo (1952) London. The Hogarth Press.
4) Fromm, E, The Fear of Freedom, (1960) London, Allen and Unwin.
5) Fromm,E. The Art of Living (1962) London, Allen and Unwin.
6) Horney, K., Our Inner Conflict, Self Analysis, (1958) London, Rout ledge and Kegan Paul.
7) Sullivan, H.S. Conceptions of Modern Psychiatry, (1970) London, Routledge and Kegan Paual.

# திருக்கோயில்கள்

இ. விஜயகுமார்,
(க.பொ.த. (உ/த)-2005)

உலகில் காணப்படும் மதங்கள் எல்லாவற்றிலும் சிறப்பும் பெருமையும் வாய்ந்தது இந்துமதம் ஆகும். எனவே இதனை சனாதனதர்மம் எனவும் அழைப்பர். இச் சனாதனதர்மமானது சிந்துவெளிகாலம் தொடக்கம் தற்காலம் வரை வளர்ச்சியுற்று சிறப்படைந்துள்ளது.

இவ் இந்துசமயத்திலே திருக்கோயில் என்பது இன்றியமையாத ஒரு சிறப்பு வாய்ந்தது. அருவத்திருமேனியில் உள்ள இறைவன் மக்களுக்கு அருள்புரியும் பொருட்டு உருவத்திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் இடமாகும். இத் திருக்கோயிலானது புராண இதிகாச காலம் தொட்டு இன்றுவரை வளர்ச்சி கண்டுள்ளது. இந்தியாவில் தோன்றிய இந்துமதம் இன்று மேலைத்தேய கீழைத்தேய நாடுகள் எல்லாவற்றிலும் பரந்துள்ளது. தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்துசமய திருக்கோயில்கள் பொலிவுற்றுக் காணப்படுகின்றது. சமயம் வளர்ச்சியடைவதற்கு மூலவேர்கள் திருக்கோயிலாகும்.

கலை, பண்பாடு என்பவற்றை வெளிக்காட்டும் ஒரு நிறுவனமாகவும் இத் திருக்கோயில்கள் இன்று திகழ்கின்றன. இத் திருக்கோயிலின் அம்சங்களை நோக்கும் போது கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், விமானம் போன்றவற்றை அனைத்து திருக்கோயில்களும் கொண்டிருக்கும் அளவில் பெரிய கோயில்கள் கோபுரம், வசந்தமண்டபம் மற்றும் பல வகையான அம்சங்களை தன்னுள் அடக்கித்திகழும் இத்திருக்கோயிலின் சிறப்பு யாதெனில் மக்கள் இங்கு தமது ஐம்புலன்களை அடக்கி இறைவனை ஒருமனதோடு வழிபட்டு இறை அருளை வேண்டிநிற்கும் இடமாகவும் அடியவர்களின் பக்திக்கு இறைவன் அருள் பாலிக்குமிடமாகவும் இது காணப்படுகின்றது. அடியவர்கள் இத் திருக்கோயிலே விழாக்களையும் கிரியைகளையும் நிகழ்த்தி இறைவனை வழிபாடு செய்யுமிடமாகும்.

பண்டைக் காலத்தில் திருக்கோயில்களை வழிபட்டு தமது தேவைகளை நிறைவேற்றியவர் களையும் தமது தோஷங்களை தீர்த்தவர்களையும் இதிகாசபுராணங்கள் எடுத்தியம்புகின்றன. இராமாயணத்திலே இராவணேஸ்வரன் திருக்கோணே ஸ்வரத்தை வழிபட்டு பல போர்களில் வெற்றி பெற்றான் எனவும் சக்கரவர்த்தியாக திகழ்ந்தான் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் இராமன் இராமேஸ்வரத்தையும் மாமாங்கேஸ்வரம் எனும் தலத்தையும் வழிபட்டு இராவணனைக் கொன்றதனால் பீடிக்கப்பட்ட பிரமாத்திதோஷத்தை நீக்கிக் கொண்டான் எனவும் கூறப்படுகின்றது. கி.பி யளவில் திருக்கோயில்கள் சமய நிறுவனமாகவும் சமுதாய நிறுவனமாகவும் செயற்பட்டுள்ளன.

இவ்வகையிலே நோக்கும் போது சமய நிறுவனமாக நின்று பிரசங்கங்களையும் பெரிய விழாக்களையும் கொண்டாடி சமயத்தை வளர்த்ததுடன் சமுதாயநிறுவனமாக நின்று ஏழை எளிய மக்களுக்கு உதவியளித்தல், ஆதுரர்சாலை, கலைகளை வளர்த்தல், நிதிநிறுவனம், நீதிநிறுவனம் போன்றவைகளாகச் செயற்பட்டுள்ளன.

இத் திருகோயில்களிலே சைவம், வைணவம் என்ற இரு பிரதான பிரிவுகளோடு சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற பிரிவுகளுக்கான திருக்கோயில்களும் எழுந்துள்ள வற்றை அவதானிக்க முடிகின்றது. இவை பெரும்பாலும் இந்தியாவிலேயே பொலிவுடன் திகழ்கின்றது. அவற்றை நோக்கும் போது சைவமரபிலே கோயில் எனப்படும் சிதம்பரம் மற்றும் தஞ்சைப்பெரும்கோயில், குன்றக்குடிதிருவண்ணா மலை, சிவன்கோயில், கைலாசநாதர், திருவாவடு துறை போன்றவற்றை சிறப்பாக சுட்டமுடியும். வைணவமரபிலே நோக்கும் போது கோயில் எனப்படும் ஸ்ரீரங்கம் மற்றும் திருப்பதி காஞ்சிவைகுந்தப் பெருமாள் என்பவை சிறப்பாக குறிப்பிடமுடிபவை. மேலும் சாக்த மரபிலே மதுரைமீனாட்சியம்மன் போன்ற திருக்கோயில்களும் கௌமாரமரபிலே அறுபடை வீடுகளும் சிறப்பாக எடுத்துக் கூறக்கூடியவை.

உலகில் உள்ள திருக்கோயில்கள் அனைத்திலும் மிகப் பெரியதாய் விளங்குவது கம்போடியாவில் உள்ள "ஆங்கோர்வாட்" எனும் ஆலயமாகும்.

இலங்கையிலே திருக்கோயில்களின் வரிசையிலே ஒழுங்கான ஆகமவிதிமுறைப்படி அமைந்த ஆலயம் இணுவில் காரைக்கால் சிவன் ஆலயமாகும். இது தவிர ஏனைய ஆலயங்களை நோக்கும் போது நல்லூர்க்கந்தன், செல்வசந்நிதி, மாத்தனை ஸ்ரீமுத்துமாரியம்மன், நயினைநாகபூசனி மற்றும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் முதலிய பஞ்சஈச்சரங்கள் மாமாங்கேஸ்வரப் பிள்ளையார், வல்லிபுரஆழ்வார் போன்றவற்றுடன் மேலும் பல சிறப்பாக நோக்கக் கூடியவை.

இந்த வகையிலே திருக்கோயில்கள் இந்துசமயத்தின் வளர்ச்சிக்கும் அதன்பணிக்கும் ஆணி வேராய்நின்று அதனைத் தாங்குவதுடன் அதனை பாதுகாத்து வருகின்றது என்றால் அது மிகையாகாது.

# புகழ் சேர்த்த புதல்வர்கள்



உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்கிக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்ததுடன் சைவபரிபாலனசபை பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கத்தினையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

**செல்வன். N. பிரதீப்**
*(சிறந்த உதைபந்தாட்ட வீரர்)*

கல்வியில் சிறந்து விளங்கி, மாவட்ட பேச்சுப் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், சென்ற ஆண்டில் சிறந்த சாரணர் விருது பெற்றும், இவ்வாண்டு சிரேஷ்ட மாணவ தலைவராக இருந்தும் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றார்.



**செல்வன். இ. விஜயகுமார்**



2003ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கில பாடம் உட்பட 9A, 1B சித்திகளுடன் மாணவ முதல்வராக இருந்தும் கல்லூரிக்குப் புகழ் சேர்த்தார்.

**செல்வி. சு. தாருணி**




செல்வி.தி.சங்கீதா

ஆறு ஆண்டுகள் வலைப்பந்தாட்ட அணியில் விளையாடி தேசிய மட்டம் வரை சென்று வெற்றிகள் பெற்றும், லண்டன் தேசத்து மண்ணில் விளையாடி வெற்றி கொண்ட வலைப்பந்தாட்ட அணியில் விளையாடியும், கல்வியில் சிறந்து விளங்கியும், சிரேஷ்ட மாணவத் தலைவியாகவும் இருந்து எமது கல்லூரிக்குப் புகழ் சேர்த்தார்.



செல்வன்.இ.வாகீசன்

2003ஆம் ஆண்டில் தமிழ்த்தினக் கவிதைப் போட்டியில் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றும், அதே ஆண்டில் சிரேஷ்ட மாணவ முதல்வராக இருந்தும் கல்லூரிக்குப் புகழ் சேர்த்தார்.



செல்வி.சோ.பிருந்தா

ஆறு ஆண்டுகள் வலைப்பந்தாட்ட அணியில் விளையாடி தேசிய மட்டம் வரை சென்று வெற்றிகள் பெற்றும், லண்டன் தேசத்து மண்ணில் விளையாடி வெற்றி கொண்ட வலைப்பந்தாட்ட அணியில் விளையாடியும், 2002 க.பொ.த (சா/த) பரீட்சையில் 6A, 4B சித்திகளுடன் சிரேஷ்ட மாணவத் தலைவியாகவும் இருந்து சிறப்பாகச் செயலாற்றி வருகின்றார்.


## எமது கல்லூரியின் அதி உயர் பரீட்சைப் பெறுபேறுகள் 2000

செல்வி சு. தேவகி



5ம் தர புலமைப் பரிசில்
167 புள்ளிகள்

செல்வன் கு. ஜெயப்பிரகாஷ்



க. பொ. த. சா. த. பரீட்சை
9D 1C

செல்வி வ. விஜிதா



க. பொ. த. உ. த. பரீட்சை
3A. 1B.

## எமது கல்லூரி வரலாற்றில் முதன் முதல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள்

செல்வி பா. அஞ்சனா




செல்வி ஐகுந்தலாதேவி




செல்வன் ந. தனுசுயன்



செல்வன் க. ஜெசிதன்



செல்வன் கு. ஆதித்தன்





## புத்தாயிரமாம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற 17 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியினர்



இருப்பவர்கள்: 1. செல்வி சி. சுகதர்சினி (பயிற்றுனர்) 2. திரு. நா. கேதீஸ்வரன் (P.O.G.) 3. சோ. பிரிந்தா 4. திரு. ச. சிவனேஸ்வரன் (அதிபர்) 5. ம. சர்மிளா 6. திரு. கு. விமலன் (பொறுப்பாசிரியர்) 7. செல்வி த. அஜிந்தா (பயிற்றுனர்).

நிற்பவர்கள்: 1. து. ஜெயசுவர்ணா 2. யோ. கஜேந்தினி 3. அ. காயத்திரி 4. நி. கிருஷாந்தினி 5. ம. சுவர்ணா 6. மு. துளசிமலர் 7. ஜெ. கஜிதா.

## புத்தாயிரமாம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற 15 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியினர்



இருப்பவர்கள்: 1. செல்வி த. அஜிந்தா (பயிற்றுனர்) 2. திரு. நா. கேதீஸ்வரன் (P.O.G.) 3. தி. சங்கீதா 4. திரு. ச. சிவனேஸ்வரன் (அதிபர்) 5. த. நிலானி 6. திரு. கு. விமலன் (பொறுப்பாசிரியர்) 7. செல்வி சி. சுகதர்சினி (பயிற்றுனர்).

நிற்பவர்கள்: 1. பி. சுகன்யா 2. அ. விமாலினி 3. தி. விஜிமிளா 4. கு. விலாசினி 5. ந றமணி 6. சோ. குமுதினி 7. இ. சிந்துஜா 8. மா. சுவீற்றி



## தாய்மை

சோ. கௌசிகா
தரம் 11 B

அன்பினிலே அறிவினிலே
ஆளுமை விருத்தியிலே
உம்மை வணங்குகிறோம்
உலகமே வியக்கின்றது.
எத்தனை துன்பங்கள்
எத்தனை எத்தனை கஸ்டங்கள்
எது வந்தாலும் எம்மை
ஏற்றிப் போற்றுவாயே.................ஏன்?

பத்து மாதம் சுமந்ததாலா?
பகலிரவாய்க் காத்ததாலா?
உத்தமராய் வாழவைத்ததாலா?
உவந்தருள் புரிந்ததாலா?
இரு விளக்கில் ஒரு விளக்காய்
இரு பொழுதும் காத்தவளே
தூய அன்பு செலுத்தியே - எம்மைத்
தூயவராக்குகின்றீர்
தயிர்க் கடலின் வெண்ணெய் போல
குடும்ப விளக்கில் தவழ்கின்றாய்

தந்தையிடம் தோன்றும்
சிறு பிணக்கைக்கூட
சமாதானமாக்கிடுவாய்

எம்மை வாழ்வில் ரசிக்க விடும்
என் இனிய விளக்கிற்கு
தீப விழிவை எரிய விடும்
எம் தாய்க்குலமே
உலகில் உயிர் உள்ள வரை
உலகில் காற்றுள்ள வரை
எம் வாழ்வின் வாசலில்
என்றும் உன் தாய்மை வாழ்விற்காக

ஈரம் நிறைந்த மனதுடன்
ஈடில்லாக் காதலுடன்
உன் தாய்மை....................
போற்றி....................
வாழ்த்திப்......................
பூ மழை தூவுகின்றோம்

# தற்காலத்தில் இசை வல்லுனர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்கள்

செல்வி. செ.ஜெயகௌரி,
க.பொ.த. (உ/த) 2004.

இசை என்பது எல்லோரையும் இசைவிப்பது என்று பொருள்படும். தற்காலத்தில் இசை தனக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று விளங்குகின்றது. இசையானது சிறந்த வித்துவான்கள் மூலமாகவும், கலைக்கல்லூரிகள் மூலமாகவும் பேணப்பட்டு வளர்க்கப்படுகின்றது. இத்துறையிலே ஈடுபட்டு வல்லுனர்களாகத் திகழ்பவர்களின் தொழில் வாய்ப்புக்கள் எப்படி எந்த இடத்தில் அமையலாம் என்று நோக்குமிடத்து பல்வகைப்பட்ட தொழில் வாய்ப்புக்களை நாம் கூறலாம். இவை வருமானம் தரக் கூடியவையா? என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும். பெரும்பாலும் இசைவல்லுனர்களுடைய பிரதான தொழிலாக ஆசிரியத் தொழிலே அமைகின்றது. இதன் மூலம் தமக்குத் தெரிந்தவற்றை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதும் தமது அறிவையும் முன்னேறச் செய்யலாம். ஆசிரியர் தமக்குத் தெரிந்தவற்றை ஏனையோருக்குச் சொல்லி கொடுக்கும் போது திருப்தியும், மனச்சாந்தியும் அடைகின்றனர். இத் தொழில் மூலம் சங்கீதத்தைப் பரப்பவும் முடிகின்றது.

சிறந்த ஒரு இசைக்கலைஞன் வானொலி நிலையத்திலோ அல்லது தொலைக்காட்சி நிலையத்திலோ நிலைய வித்துவானாக இருந்து தொழில் புரியலாம். இதன் மூலம் இசையறிவு மேன்மையடைகின்றது. இது தவிர ஒரு தனியான இசை நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் பல்வகைப்பட்ட தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம். இசை வல்லுனர்களிலே சாரீர வசதியற்றவர்கள் வாத்தியங்கள் வாசிப்பதைத் தொழிலாகக் கொள்ளலாம். வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், மிருதங்கம் போன்ற வாத்தியங்களில் தனிக் கச்சேரியும் செய்யலாம். அத்துடன் வாத்தியக் கோஷ்டிகளை அமைத்துப் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடத்தலாம். சாரீர வசதி உடையவர்கள் பலர் இசைக்கச்சேரிகள் செய்வதையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். இசைக்கச்சேரி செய்வதற்கு சங்கீதத்தில் நல்ல அனுபவம், பிரயாசை, ஆர்வம் என்பன இருத்தல் வேண்டும். வாத்தியம் கற்போர் வாத்தியங்களைப் பக்க வாத்தியங்களாகவும் வாசிக்கலாம். இவ்வாறு மேடைக்கச்சேரி இசைத்துறையில் தனியிடம் பெறுகின்றது. இசைப்பாடல்களை இயற்றும் வாக்கேயகாரராகவும், அவற்றிற்கு இசையமைப்பதால் இசையமைப்பாளராகவும் தொழில்புரியலாம். அத்துடன் அமைப்பாளர், வாத்தியக்கோஷ்டித் தயாரிப்பாளர், நெறியாழ்மையாளர், பின்னணிப்பாடகர் போன்ற பல தொழில்களில் கடமைபுரியலாம்

சங்கீத சாஸ்திரத்திலே வல்லுனர்களாக இருப்பவர்கள் இசைசம்பந்தமான நூல்கள் எழுதி அவற்றைப் வெளியிடலாம். செயன்முறையிலே வல்லுனர்களாக இருப்பவர்கள் இசை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து ஒலிப்பதிவு நாடாக்களை விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தைப் பெற முடிகின்றது. மேலும் கல்லூரி மாணவர்களுக்கு கருத்தரங்கு, விரிவுரைகள் என்பன நடாத்துவதோடு சமய நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள் போன்றவைகளில் பங்கு பற்றி கடமையாற்றலாம். தற்காலத்தில் மிக வேகமாக வளரும் சினிமாத்துறையில் பின்னணி பாடுதல், இசையமைத்தல், வாத்தியங்கள் வாசித்தல், தயாரித்தல் போன்ற பலவகைப்பட்ட தொழில்களில் ஈடுபடலாம். இவற்றை விட வாத்தியங்களை உற்பத்தி செய்பவராகவோ அல்லது வாத்தியங்களைத் திருத்துபவராகவோ இருக்கலாம். இவை தவிர நடனநிகழ்ச்சிகளை எடுத்துக் கொண்டால் அவற்றிலே தனி நடனம், குழுநடனம், நாட்டிய நடனம் முதலியவற்றிற்குப் பின்னணி பாடலாம். இவற்றோடு பத்திரிகைகள், வாரசஞ்சிகைகள் போன்றவற்றில் இசை சம்பந்தமான விமர்சனங்களை எழுதலாம். இவ்வாறு மேலே கூறப்பட்ட கருத்துக்கள் யாவற்றையும் உற்று நோக்கும் போது இசை வல்லுனர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புக்கள் இருப்பதை அறிய முடியும்.

"வளர்க இசைத் தமிழ்"

*1998 இல் கோட்டமட்டத்தில் 2ம் இடம் பெற்ற கரப்பந்தாட்ட அணியினர்.*




இருப்பவர்கள் :-
திரு. நா. கேதீஸ்வரன் (POG) திரு. இ. புவனேந்திரன், செல்வன். கு. ஜெயப்பிரகாஷ், திரு. ச. சிவநேஸ்வரன் (அதிபர்), செல்வன். வ. தாஜகான், திரு. த. சிவசுப்பிரமணியம், திரு. ம. தயாளன்.

நிற்பவர்கள் :-
செல்வன்கள் :– ச. கோபிநாத், ஐ. கௌசிகன், த. அரவிந்தன், டா. புஜங்கன், ந. ரஞ்சித்ராஜ்.

*1998 இல் வலயமட்டத்தில் முதலாமிடத்தையும் யாழ்மாவட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்ற 17 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியினர்.*




இருப்பவர்கள் :- திரு. நா. கேதீஸ்வரன் (POG), செல்வி. வை. சுபத்திரா, செல்வி. க. சர்மிளா, திரு. ச. சிவநேஸ்வரன் (அதிபர்), செல்வி. இ. சர்மினி, செல்வி. சி. சுகதர்சினி, திரு. இ. ஆனந்த நடராசா (உப அதிபர்)

நிற்பவர்கள் :- செல்விகள் நா. நளினி, சி. சரிதா, S. அன்னரோகினி, இ. துஷ்யந்தி, சு. மல்லிகா.

# விழுது எழுதும் வேரின் வெற்றிகள்

என். தனுசுஜன்,
பழைய மாணவன்
(க.பொ.த. உ/த - 97, கலைப்பிரிவு).

எப்போது எழுவதானாலும் நானும் மொழியும் புரிப்படைந்து கொள்ளும் ஒரு புதினம் என் கல்லூரி நாட்கள். இது வெறும் வார்த்தைகளின் வர்ணனை அல்ல. என்னுடைய வாழ்வின் பல முக்கிய நாட்களின் ஐக்கிய நாட்கள் என் கல்லூரி நாட்களே.

1995 வைகாசி 19 சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் தனது முடியில் முத்துக்களைப் பதித்துக் கொண்ட நாட்களில் அதுவும் ஒரு முக்கிய நாள். அன்று தான் க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. முதலில் கலைப்பிரிவு (Arts) வகுப்புக்கள் மட்டுமே இதற்கு முதல் தரம் 6 வரை சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்திலும் அதன் பின் க.பொ.த சாதாரண தரம் வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி கற்றேன். பின் என் உயர் கல்வியை சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கின்றேன். "என்னுடைய வளர்ச்சிக்கான தவம் எப்போதோ இயற்றப்பட்டு விட்டது" என்று இப்போது வியக்கின்றேன். அதன் வரம் தான் கல்லூரி அதிபர் திரு.ச.சிவநேஸ்வரன் அவர்களின் வருகை. அவருடைய எண்ணத்தில் பாடசாலையில் முதன் முதலாக க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்படுகிறது. சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிகாரியாக இருந்த திருமதி றெ. இருதயநாதன் அவர்கள் கலைப்பிரிவு வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார். எங்களில் அப்போது 26 மாணவர்கள். எங்கள் வகுப்பாசிரியர் திரு .நா. கேதீஸ்வரன் அவர்கள். பின்னர் இடப் பெயர்வின் பின் தயாளன், ஜெசீதன் உட்பட எழுவர் மட்டுமே கல்வி கற்கிறோம். அப்போது வகுப்பாசிரியராக திரு.இ.ஆனந்தநடராஜா அவர்கள் நியமிக்கப்பட்டார். அன்று முதல் இன்று என் மாணவப் பருவங்கள் கழிந்தது வரை அந்த நாட்கள் மொழியின் முழு எழுத்துக்களாலும் விளக்க முடியாத பசுமை நிறைந்தவை. இருந்தாலும் என்னை வளப்படுத்திய என் கல்லூரிக்குக் குறைந்த பட்சம் மொழிகளால் நன்றி சொல்லும் ஒரு நாகரிக வடிவமாக இந்த எழுத்துக்களை நம்புகின்றேன். நான் எழுதும் ஒவ்வொரு சொற்களுக்குமிடையில் பல கிளைகள் உண்டு. இது குறுக்கு வெட்டு முகம் மாத்திரமே.!

கல்லூரி எனக்குள் பல கனவுகள் வளர்த்தது. என்னைத் தட்டிக் கொடுத்து தமிழ் வளர்த்தது. இதற்கு முன் என்னை நான் தூக்கி வீசிவிட்டு துணிச்சலற்றவனாகவே இங்கு வந்தேன். ஆனால், வீசி எறிந்த என்னைத் திரும்பவும் எடுத்துத் தந்தது இந்தக் கல்லூரி. எனக்கு கல்வி தந்தவர்களை ஒப்பிட்டுச் சொல்வதற்கு இன்றளவில் வார்த்தைகள் இல்லை. அவர்களது ஒவ்வொரு வழிப்படுத்தல்களும் என் எதிர்காலம் மீது எனக்கு வெளிச்சம் வீசின. இவர்களால் என் இருப்பிடம் காப்பாற்றப்பட்டது என்ற உற்சாகமான உண்மை என் உயிரின் ஒவ்வொரு துளியிலும் உச்சரித்துக் கொண்டிருப்பது(ம்) உண்மை.

கல்வியோடு என் ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்ய ஒவ்வொரு துறை நோக்கியும் என்னை ஆற்றுப்படுத்தியிருக்கி றார்கள். பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக உயர்தர மாணவர் மன்றம் உருவாக்கப்பட்டு, இதன் முதல் தலைவராக நியமிக்கப்படுகிறேன். முதலில் "மகிழ்ந்து குலாவலும் மதிய விருந்தும்" (இத்தொடரை நானே ஏற்படுத்தினேன்) என்ற ஒன்று கூடல் நிகழ்வை யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் திரு .க தேவராஜா அவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு 1997 இல் நடாத்தினோம். இவற்றோடு இந்து மாணவர் மன்றத் தலைவராக இருந்து நான் பல செயற்பாடுகள் செய்தேன். சமய விழாக்காலங்களில் திரு.க.சத்தியதாசன் ஆசிரியர் அவர்களின் வழிப்படுத்தலில் பல தலைமைப் பண்புகளை பெற்றுக் கொண்டேன். கல்லூரியின் விளையாட்டுப் பிரிவில் சேரன் இல்லத் தலைவராகவும், மாணவர் முதல்வராகவும் இருந்தேன். இந்தத் தலைமைத்து வங்கள் எல்லாம் என்னை எனக்கு அறிமுகப்படுத்த வாய்ப்பளித்ததோடு என் வளர்ச்சிக்கு ஏணியும் வைத்தன. இதன் பின்பு தான் சிந்தித்துக் கொண்டேன், "ஒரு மாணவன் வெறுமனே புத்தகத்துக்குள் புதைந்து கிடப்பதால் மட்டும் முழுமையடைய முடியாது" என்பதை. இவைகளோடு பாண்ட் (Band Musical Group) வாத்தியக் குழுவிலும் நான் செயற்பட்டேன். வருடாவருடம் நடைபெறும் ஆசிரியருக்கு நன்றி கூறும் ஆசிரியர் தின விழாக்கள் பலவற்றை பொறுப்பேற்று நடத்தியிருக்கிறேன். மாணவப் பருவம் முடித்து கல்லூரியை விட்டுப் பிரிந்த பின்னரும் இந்த விழாவை காதலோடு செய்திருக்கிறேன். இவைகள் என் ஆளுமைப் பண்பின் வேரை ஆழ வேரோடச் செய்துள்ளன. ஆதலால் என் கல்லூரி எனக்கு என் ஆளுமை வளர்த்த ஆலயம்.

கல்வி கற்பித்த ஆசிரியர்கள் சகல துறைகளிலும் நெறிப்படுத்தியதால் நான் பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறேன். ஊனமுற்றோர் தினக் கட்டுரைப் போட்டி, யுனெஸ்கோ கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, சர்வதேச மகளிர் தினக்கட்டுரைப் போட்டி, விவேகானந்தர் தின கட்டுரைப் போட்டி, தமிழ்த் தினப் போட்டி முதலான போட்டிகளில் நான் கோட்ட வலய மட்டங்களில் இடங்களைப் பெற்றிருக்கிறேன். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற விவேகானந்தர் தின கட்டுரைப் போட்டியில் நான் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளேன். இத்தனை வெற்றிகளும் கல்லூரியால் நான் பெற்ற பெருமைகள்.

என் கல்லூரியின் பசுமையான அனுபவங் களோடு அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டிய அடுத்ததொரு சம்பவம் 1997 சித்திரையில் வெண்தாமரை இயக்கம் கொழும்பில் நடாத்திய சமாதான மாநாட்டில் கலந்து கொள்ளும் நிகழ்வு. நானும் சகமாணவி அஞ்சனாவும் உட்பட யாழ்மாவட்டத்திலிருந்து குறிப்பிட்ட சில மாணவர்கள் பங்கு கொள்ள அழைக்கப்பட்டி ருந்தோம். அப்போது அந்த மூன்று நாட்களும் இனிய அனுபவத்தை அள்ளித் தந்தன. இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வரலாற்றில் மறக்க முடியாத இந்தக் கல்விச் சுற்றுலா கல்லூரி எனக்குத் தந்த பரிசு.

என்னை நான் வியந்து பார்க்கிறேன். என்னுடைய ஆசிரியர்களுக்கு என்ன பெயர் இடுவது என்று இன்னமும் தெரியவில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது கூட குறைந்த பட்ச ஒப்பீடாகவே நான் கருதுகிறேன். திரு க. சத்தியதாசன் ஆசிரியர் அவர்கள், இவர் தான் என்னை என் மேடைப் பேச்சுக்கு ஆற்றுப்படுத்திய ஆர்வம் மிகுந்த ஆசிரியர். சமயத்தோடு தமிழை வளர்த்தவர். பின்னாளில் இவரது விவாத அமைப்பில் நானும் அங்கம் வகித்திருந்தேன். என் பேச்சுத் திறனுக்கு களம் தந்தார். இவரது போதனை முறைகளில் கசப்புகள் இருந்ததில்லை. கல்வியை போதியளவு வழங்கினார். இவரைப் பற்றி இவரது மொழியில் சொல்வதானால் "ஓடும் செம்பொன்னும் ஒன்றாக நோக்கி உழைத்தவர்". உங்களது குறிக்கோள் "மாணவர் சேவையே மகேசன் சேவை" யாய் உழைப்பதுதான், என்று நான் குறித்து வைத்துள்ளேன். வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் உங்களை நன்றியோடு நான் பார்க்கிறேன்.

திரு.நா.கேதீஸ்வரன் ஆசிரியர் - இவர் வகுப்புக்கு வந்தால் சிரிப்புக்கு வாய்ப்புத் தருவார். கல்வியை நகைச்சுவையோடு ஊட்டியவர். அதனால் பகைச்சுவை இல்லாமல் கழிந்தது கல்விக் காலம். இவரைக் கண்டால் வகுப்பறையிலுள்ள தேயும் வெண்கட்டியும் புன்னகைத்தபடியேதான் தேயும் என்று நான் அந்தக் காலங்களில் சிந்தித்திருக்கிறேன். அந்தளவுக்கு கசப்பையும் இனிமையாக்கும் கனிமையானவர். கல்லூரி வளாகத்துக் காற்றில் உங்கள் குரல் கேட்கும் போதெல்லாம் என் மனதுக்குள் மெல்லிய மழை. எனக்குத் தெரியும் நீங்கள் பெருமிதமில்லாத பெருந்தன்மையானவர் என்று. உங்கள் போதனைகளை மீளமீள நான் நினைக்கும் போது என் மனது நன்றியின் நாற்காலியாகிவிடுகிறது. உங்களது போதனைகள் நான் தூர இருந்தாலும் ஈர நெஞ்சோடு நினைத்துப் பார்க்கத் தக்கவை.

திரு. இ. ஆனந்தநடராஜா ஆசிரியர் – இவரோடு இருந்த காலங்களில் தமிழ் என்னோடு தலையணை போட்டு உறங்கியது. தமிழின் நீள அகலங்களை இவர்தான் எனக்கு நீட்டி முழக்கியவர். தமிழ் மீது எனக்கிருந்த பற்றும் திறமையும் கண்டு இவர், எனக்குள் சில நெருப்பு விதைகள் இருப்பதை அறிந்து கொண்டார். அதை வளர்த்தெடுப்பதில் இவரது வழிப்படுத்தல்கள் பளிச்சென்று என்னை விழிப்படையச் செய்தன. அதன் வளர்ச்சிதான் இந்த என் எழுத்துக்களுக்கு காரணம். இதனால் தமிழ் மீதும் உங்கள் மீதும் நாளாக நாளாகப் பாசம் அடர்த்தியானது. கல்லூரியில் உங்கள் சுறுசுறுப்பு கவனிக்கத்தக்கது. நான் எந்தத் தேனீயையும் கண்டதில்லை உங்களின் சுறுசுறுப்பில். இவரைத் தவிர நான் வேறு யாரிடமும் தமிழ் கற்றதில்லை. இன்னும் சொல்வதானால் க.பொ.த உ/த பாடங்கள் எதற்கும் நான் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றதில்லை. எனக்கு இவர்களே போதிய போதிமரமாக இருந்தார்கள். பரீட்சை நிலையம் வரை வந்து என்னை வாழ்த்திய முதல் ஆசிரியர் நீங்கள் ஒருவரே. வகுப்பறையை விட வகுப்புக்கு வெளியே தமிழ் செய்தது தான் அதிகம். உங்களோடு பேசிக்கொண்டிருக்கும் போதே தமிழ் படித்து விடலாம். கல்லூரியில் உங்கள் சிலேடைப் பேச்சு சிந்திக்க வைக்கும். அத்தனை சிறப்பு உங்கள் சிலேடைத் தமிழ். எல்லோரையும் மன்னிக்கும் மனிதப் பண்பானவர் நீங்கள். அதனால் தான் உங்களுடன் பேசுவதற்கு பலரும் விரும்புகிறார்கள். சுருங்கச் சொன்னால் "நீங்கள் பழகப் பழகப் புளிக்காத பால்" இப்படி இந்தக் காற்றைப் போற்ற கீற்றுக்கென்ன தகுதி? இருந்தாலும் உங்களை நன்றியோடு பார்ப்பதால் மொழியின் ஒவ்வொரு சொல்லும் உங்களை முன் மொழியும். நீங்கள் புகழை விரும்பாத புகழுக்குரியவர். தமிழை விட உங்கள் புகழுக்கு ஆயுள் அதிகம். என் வாழ்வின் ஒவ்வொரு திசைகளிலும் உங்களைத் திரும்பத்திரும்ப நினைக்கிறேன் திருப்தியோடு.

நான் அடைந்த அடைவுகளுக்கும், வளர்ச்சிகளுக்கும் வழிசமைத்த ஆசிரியர்கள் என் மரணப்படுக்கையிலும் மறக்கமுடியாத மதிப்புக்குரிய வர்கள். இவர்களை நெறிப்படுத்தி எங்கள் கல்லூரியின் புகழை உயர் பெறச் செய்தவர் எங்கள் அதிபர் திரு.ச.சிவநேஸ்வரன் அவர்கள். சின்னக் கட்டடங்களாகவும் கதவுகள் என்ற வசதி இல்லாததுமாக இருந்த ஒரு வித்தியாலயத்தை தன் உழைப்பாலும் திறமையாலும் கல்லூரியாக உயர்த்திய பெரும் பெருமைக்குரியவர்.

சராசரிக் கனவுகளோடு மட்டுமே வாழ்ந்து வந்த சண்டிலிப்பாய் கிராமத்துக்கு எங்கள் அதிபர் அவர்கள் ஒரு திருப்புமுனை செய்தார். ஒரு கிராமம் கிரீடம் சூடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம், அந்தக் கிராமத்தைச் சாராத ஒருவருக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், அவரல்லோ சம்பளம் நோக்கிக் கூவாத குயில்! பல சமயங்களில் அவரது நாட்காட்டியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் இருந்ததில்லை. அவற்றையெல்லாம் கல்லூரி நாட்களாகவே கழித்திருக்கின்றார். அறிவால் பண்பால் வளர்ச்சி காணாமல் பின்தள்ளப்பட்டுக் கிடக்கும் ஒருவனை, அல்லது ஒரு சமூகத்தை எவனொருவன் சரிசெய்கிறானோ, எவனொருவன் வளர்த்தெடுக்கிறானோ அவனைத்தான் காலம், தங்கத்தில் மைதொட்டு எழுதிக்கொள்ளும். இந்த என் கருத்துக்கு முற்றிலும் பொருத்தமானவர் எங்கள் அதிபர் அவர்களே. அதிபர் அவர்களின் அழகியல் பார்வைகள் கல்லூரி அன்னையின் அழகை மேலும் அலங்கரித்தன. வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம்,

கரப்பந்தாட்டம் என விளையாட்டு அணியை விறுவிறு என விண்தொடும் அளவுக்கு வளர்த்தெடுத்தார். கோட்டம், வலயம், மாவட்டம், முதல் தேசியம் வரை வலைப்பந்தாட்ட அணி பெயர் பொறிப்பித்துக் கொண்டிருக்கின்ற பெருமையாளர். உங்களால் பெயர் பெற்ற மாணவர்களுக்குத் தங்களின் பெயரையே மறந்து போகும் ஒரு மன நோய் வந்தாலும் உங்களின் பெயரை மறந்து விட மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்.

எங்கள் கல்லூரியை வளர்த்தெடுக்க வேண்டும் என்று அவரது திறமை அல்லது ஆர்வம் என்பது வெறும் அறிவு சார்ந்தது மட்டுமல்ல. அது அவரது குணம், ஒரு வித்தை விருட்சமாக்கும் வித்தை உங்களுக்கு இயல்பானது. உங்கள் வருகையால் கல்வியும், விளையாட்டுத் துறையும், பௌதீக வளங்களும் ஊரார் உங்கள் பெயரை உச்சரிக்கும் அளவிற்கு வளர்ந்தன. உங்கள் ஆற்றல் கண்டு, வரண்டு கிடக்கும் நந்தவனங்கள் சில உங்களை வா என்று அழைத்ததாம். அது உங்களுக்குப் புகழ். இதற்கு முன்னிருந்த அதிபர்கள் பிள்ளையார் சுழி போட்டார்கள் நீங்கள் ஒருவரே பிள்ளையார் சுழியோடு மட்டும் நிற்பது பிழை என்று அதற்கு கீழ் வாக்கியங்கள் எழுத ஆரம்பித்தவர். பழைய அதிபர்களின் செயற்திட்டங்களோடு நீங்களும் உரிய திட்டங்கள் வரைந்து அவற்றுக்கு செயல் உருவம் கொடுத்து வருகின்றீர்கள். உங்கள் தலைமைத்துவமும் நிர்வாகத் திறமையும் எல்லோருக்கும் ஒரு பாடமாக அமைந்து விட்டன. உங்கள் செயல்களில் எப்பொழுதும் ஒரு சூரிய புலர்வு தெரிந்தது. ஏனெனில், எப்பொழுதுமே, கல்லூரியை வெளிச்சம் நோக்கி நகர்த்திச் செல்கிறீர்கள். வகுப்பறைக்குள் மட்டுமே கிடந்த சின்ன வரலாற்றை வான்வரை வளர்த்து வருகின்றீர்கள். இத்தனை பெருமை படைத்த நீங்கள் எப்போதும் என் நெஞ்சுக்கு நிறைவானவர். உங்களைப் பற்றி வார்த்தையில் வரிந்து கட்ட என் தமிழுக்குத் தகுதி இல்லை.

க.பொ.த உ/த தேர்வின் பெறுபேறுகள் வெளியாகின. அன்று கல்லூரி விடுமுறையானாலும் எங்கள் பெறுபேற்றை எடுத்து வருகிறீர்கள். ஓடோடி வருகிறேன் பெறுபேறு அறிய. என்னைக் கண்டவுடன் ஒரு புன்னகைப் பூவைத் தூக்கி வீசிவிட்டு "A 3B நீ பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி விட்டாய்" என்று தெரிவிக்கிறீர்கள் பெறுபேற்றுத் தாளைத் தந்தபடி. அப்போது நான் அடைந்த ஆனந்தம் பரீட்சைப் பெறுபேற்றைப் பார்த்தல்ல. நீங்களடைந்த மகிழ்ச்சியைப்பார்த்தே. ஏனெனில் இது நீங்கள் செய்த தவத்தின் வரம், இந்தப்பெருமை உங்களுக்குரியது. மொத்தத்தில், நீங்கள் புகழ்பூத்துக்குலுங்கும் எங்கள் கல்லூரியின் **புதுமையான வேர்.** எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக நீங்கள் செய்தவை ஏராளம், இன்னும் செய்யவுள்ளவையும் ஏராளம். உங்கள் பெயருக்குள் ஒரு கல்லூரி எப்போதும் வாழ்ந்து கொண்டேயிருக்கும். என்னால் உங்கள் புன்னகை முகத்தை புறந்தள்ள முடியாதபடி எனக்குள் நிறைந்துள்ளீர்கள். உதிப்பதற்கு உறுதியிழந்து ஒரு சூரியனுக்கு நீங்கள் கிழக்கை வழங்கிய வள்ளல். அந்தச் சூரியனுக்கு இன்று பவளவிழா அதன் வெளிச்சத்தில் நாங்கள் நன்றி சொல்லி நனைகிறோம்.

உயர்தர பரீட்சை எடுத்த பின்னரும் கல்லூரியில் தான் நான் இருக்கிறேன். முதலில் ஆரம்பப்பிரிவினருக்கும் பின்னர் நடுத்தரப்பிரி வினருக்கும் அதன் பின்னர் உயர்தர மாணவருக்கும் கல்வி கற்பிக்கும் ஒரு பொறுப்பு எனக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சி. எனக்கு கல்வி கற்பித்தவர்களோடு ஏனைய ஆசிரியர்களும் எனக்குப்பிடித்தவர்கள். அவர்களும் என் மரியாதைக்குரியவர்கள். மொத்தத்தில் நிலவோடு பழகி சூரியனோடு சுற்றிய நாட்கள்.

பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பின் எங்களுக்கு பிரிவுபசார விழா நடாத்தினார்கள். அந்த அவையில் என்னைப் பேசும்படி கூறினார்கள். எழுந்து நிற்கிறேன். முதல் ஒரு நிமிடம் எதுவுமே பேசவில்லை, கண்ணீரைத் தவிர. ஒரு பாசமுள்ள மனைவியை விட்டுப் பிரியும் காதலுள்ள கணவனைப் போல் கலங்கினேன். இந்தக் கல்விச் சமூகம் எனக்குச் சுகமாக அமைந்து விட்டது. இந்த நாட்களில் நான் வாழ்க்கையை கொண்டாடியிருக்கின்றேன். அதனால் தான் பிரியும் வேளை மனதுக்குள் மறைக்க முடியாத வலி. இன்றும் சொல்கிறேன் "முகங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் பல்கலைக்கழகத்தைக் காட்டிலும் திறமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் என் கல்லூரியே என் காதலுக்குரியது." இன்று 'நான்' என்று சொல்லி நிற்பதற்குச் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தான் முழுக்க முழுக்க முதல் காரணம். ஒரு ஐம்பது ஆணடு இடைவெளி கழிந்து என்னைக் கேளுங்கள் என் கல்லூரிக் கால இளமையை அப்படியே அச்சுப் பிழையின்றி மொழி பெயர்ப்பேன். இனி எந்த மரணத்துக்கும் இல்லை என் கல்லூரி நினைவுகளை தின்று செரிக்கும் திறமை.

# THE IMPORTANCE OF ENGLISH

*BY. S . KOBIRAJH,*
*O/L (2004).*

The English language, no one will dispate, is an international language today. In countries like England, the U. S.A, Canada, Australia and several parts of Africa, it is the first language. In many common wealth countries like Srilanka, India and Malasiya, it is a second language. In soviet union, Japan, Germany, France, China and several other countries it is thought and learnt as a very useful foreign language and to enrich life in many ways.

The first Prime minister of India, late Mr. Jawarharlal Nehru once beautifully described English as a" window to the world " Another equally famous Indian scholar and states man, the late Rajaji declared English " Agift by the goodness of learning to India" H.G wells the famous British historian and novelist, once said that English is a language of world brother hood and international understanding. Hence, English occupies a unique place in the world.

For us in Srilanka with many races religions and regional differences, a common language like. English will serve as an ideal link.As it has done in the fast for a hundred and fifty years under British rule. Our national language, though rich and ancient do not even have some of the basic books we need to up – date our skills and knowledge. The world is advancing at sputnik – speed; knowledge is ever increasing; and thousands of books on all subjects are written in English by learned men it is an impossible task to translate even one. Percent of the best books in English into our languages as and when necessary. Cost of translating and publishing them will be very heavy. Already our students and teachers are denied the use of many good books. Those in the universities have hardly anything to read in many field calls for back – ground literature at present we have scanty of it in our national languages. A generation of pupil's who have received their Education without the knowledge of English find the them selves stranded.

The interlligentsla who wish to specialize in a chosen field are unable to do so because of their poor knowledge of English even a student who is eager and wealthy dreads to go to a university in the west for higher education because he or she does not know English hence, English any where anytime, and to any one holds the key to knowledge. More over, the changes of getting a job for one with a basic knowledge of English are certainly greater not only in our own land but in any part of the world. Employers every where prefer a worker with a knowledge of English to one with out it.

Even for the purpose of travel, trade, commerce, and diplomacy allsound knowledge of English is a must. It is not an over statement if one says that English is also a language of international culture. From whatever angle we look at English, its utility is great.

If there is a language today that is full, rich universal and helps every one in some way or other it is certainly English it is a language of the united nations; of the entire world – of all people – rich, poor, black, white, yellow and brown. It has also be come unique as a it has said as the first language spoken by man on another planet - moon there cannot be two opinions of its importance need, and use.

## 1999இல் வலயமட்டத்தில் 3ஆம் இடம் பெற்ற 16 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணியினர்




இருப்பவர்கள் : 1. திரு. கு. விமலன் (பொறுப்பாசிரியர்) 2. திரு. நா. கேதீஸ்வரன் (P. O. G.) 3. த. அரவிந்தன் 4. திரு. ச. சிவனேஸ்வரன்(அதிபர்) 5. த. சுஜீவன் 6. திரு. வ. துவாரகன் (பயிற்றுனர்) 7. திரு. வ. முருகதாஸ் (பயிற்றுனர்)

நிற்பவர்கள்: 1. ஞா. றொஜீலன் 2. இ. லோகதர்சன் 3. அ. டெனிஸ்கரன் 4. செ. சசிகரன் 5. றாஜீபன் 6. து. தர்சன் 7. ச. சண்சபின்சன் 8. இ. றெஜிந்தன் 9. நா. குணசீலன்.


## 1999இல் வலயமட்டத்தில் 3 ஆம் இடம்பெற்ற 18 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணியினர்




இருப்பவர்கள்: 1. திரு. கு. விமலன் (பொறுப்பாசிரியர்) 2. திரு. நா. கேதீஸ்வரன் (P.O.G.) 3. இ. குணபாலன் 4. திரு. ச. சிவனேஸ்வரன் (அதிபர்) 5. வி. ஜெனிற்றூபன் 6. திரு. வ. துவாரகன் (பயிற்றுனர்) 7. திரு. வ. முருகதாஸ் (பயிற்றுனர்)

நிற்பவர்கள்: 1. அ. ரணிஸ்கரன் 2. கு. விஜயன் 3. அ. ஜெனிஸ்கரன் 4. ருஷந்தன் 5. வ. தாஜகான் 6. ஐ. கௌசிகன் 7. பிரதீபன் 8. செ. சுதாகரன் 9. சு. கவிதாசன்.





# பகவத் கீதை கூறும் யோக நெறிச் சிந்தையில் கலை வளர்ச்சியின் பாங்கு

*தர்ஷினி. தேவராஜா*
*2006 கலை*

இன, மத, மொழி பேதமின்றி காலதேசம் கடந்து பழமையிற் பழமையும் புதுமையும் வாய்ந்த ஓர் உயர்ந்த நூலே "பகவத்கீதை". இக் கீதையானது மகாபாரத குருஷேத்திர யுத்தத்திலே தடுமாறி நின்றபார்த்தனுக்கு கிருஷ்ணபகவானால் அவனது கலக்கத்தை போதித்து உபதேசித்த உபதேசமே என்பதாகும். இது மகாபாரதம் முழுக்க ஒளிவீசும் நந்தா விளக்காகவும், மகாபாரதம் முழுவதையும் கடைந்தெடுத்த வெண்ணெயாகவும் காணப்படுகிறது. இதில் 18 அத்தியாயங்களைக் கொண்ட 701 சுலோகங்களை உள்ளடக்கிய கா்மயோகம், இராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் எனும் 4 வகை யோகங்களை வகுத்து அவை வளர்ச்சிக்கிரமத்தில் முறையே அரும்பு, மலர், காய், கனிக்கு ஒப்பானவை எனக் கூறப்படும் வகையில் அமைவு பெற்றுள்ளன. மொத்தத்தில் கீதை "மனிதசமூகத்தின் மூலதனம்" என்று கூறின் மிகையாகாது.

கீதை மனிதனையும் மனிதனையும் மனத்தால் இணைத்து அனைத்துலக நாடுகளையும் ஆத்மிக ஒருமைப்பாட்டால் ஐக்கியப் படுத்தப்படுத்துகின்றது. அது மட்டுமின்றி இதன் யோக நெறியானது மனிதனை அவனது மனத்தளவிலும், உடலளவிலும் பண்படுத்தி அதன் மூலம் சமூகத்தில் சிறந்த ஓர் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. அந்த வகையில் உயர் பல அம்சங்களை மானிடசமுதாயத்திற்கு இது கூறிய போதிலும் அதனுள் நுழைந்து யோக நெறியினால் பெரிதும் கவரப்பட்டு பயன் பெற்றவன் யாரென வினாவின் அது கலைகளில் நாட்டமுடைய கலைஞனே ஆவான்.

"கலை" என்பது பார்ப்போர் கண்ணையும், மனதையும் பொறுத்து வேறுபட்டு வெளித்தூண்டப் படும் ஓர் அழகுணர்வு என்று கூறுதல் பொருந்தும் "யோகம்" என்பது மனதை ஒரு நிலைப்படுத்தல் என்பதாகும். எனவே இங்கு இந்தக் கலைக்கு களம் அமைத்துக் கொடுக்கும் கலை ஞானவனின் மனமானது அறிவு, செயல், பக்திவழிகளில் ஒரு நிலைப்பட்டு இருந்தால் அங்கோர் சிறந்த கலைப்படைப் பொன்று உண்டாகி கலையின் தரம் உயர இந்த யோகம் கூறும் மன ஒருமைப்பாட்டு சிந்தனை மிகவும் உதவுகின்றது.

இந்தக் கலையானது பல்வேறுவகைகளில் ஒருகலைஞனிடமிருந்து வெளிப்படும் போது அவை சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், காவியம், எனப்பல்வேறு பெயர் பெறுகின்றன. ஓர் சிறந்தகலையும், அக்கலையை ஆளும் கலைஞனும் சமூகத்தின் பார்வையால் என்றும் கவரப்படுவர்களே சிந்தனைகளின் செயற்பாடு மிகஅவசியம்.

கீதையின் 6 ஆம் அத்தியாயமானது கலைவளர்ச்சிக்கு சிந்தனைகளை கூறுகின்றது. அதாவது "மனஉறுதி" பற்றி இது கூறுவது கலைஞனொருவன் கலைப்படைப்பொன்றை உருவாக்கும் போது இது நீண்டகாலமெடுக்குமாயின் அதனைத் தளராது செய்து முடிக்க மனஉறுதி அவசியம். அப்படி செயற்படுவானாயின் அவனது கலைப்படைப்பானது எல்லோராலும் புகழப்படும் வகையில் பூரணமடைந்து இதன்மூலம் அக்கலைப்படைப்பின் தரம் ஒரு படி உயரவே செய்யும்.

அத்தோடு அதே 6 ஆம் அத்தியாயத்தில் கடமையைச்செய் பலனை எதிர்பாராதே என்று கீதை கூறும் நற்சிந்தனையானது கலைஞனுக்கு பாரபட்சம் பார்க்காமல் நடுநிலையோடு பற்றி கடமை செய்து அதனால் கலைவளர்க்க மிகவும் உதவுகின்றது.

கர்மயோகத்தின் 2 ஆம் அத்தியாயம் கூறும் வெற்றிதோல்விகளைச் சமமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனும் கருத்து உண்மையில் கலையை வளர்க்கும் கலைஞனுக்கு மிகவும் அவசியமானது. கலையுலகம் போட்டி நிறைந்தது. எனவே அங்கு இச்சிந்தனையை மனதில் கொண்டு செயற்பட்டால் அந்தக் கலைஞனால் கலை உயர்த்தப்படும்.

மேலும் உள்ளப்பகையை வளர்க்கக்கூடாது என்றும் ஒருவன் தெளிவுடைய வாழ்க்கை வாழவேண்டும் என்னும் இந்த யோக நெறி கூறுகின்றது. அதாவது தெய்வீகமான கலையைகப்படைக்கும் கலைஞனின் மனம் அழுக்கற்று தெளிவுகூடியதாக இருத்தல் வேண்டும். அப்படி அவனிடமிருந்து படைக்கும் படைப்பானது தரமும் நேர்மையும் மிக்கதாக எல்லோராலும் விரும்பப்பட்டு அதன் மூலம் கலை வளர்ச்சியடைய வாய்ப்புண்டு.

இதுபோல "சிந்தனைசெய்" "தகுதி அறிந்து செயற்படு" போன்ற பல சிந்தனைகள் கலை வளர்ச்சிப்பாதைக்கு உறுதுணையாக அமைகின்றன. எனவே இங்கு மேற்காட்டப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய்ந்தால் கீதையின் யோக நெறிச்சிந்தனைகள் அனைத்துமே கலைவளர்ச்சியில் நாட்டமுடைய கலைஞனுக்கு அவசியம் தேவைப்படுவனவாகவே காணப்படுகின்றது. ஆகவே இப் பொருள் பொதிந்த பொக்கிசத்தை பக்குவப்படுத்திப் பேணிக்காக்க வேண்டியது ஒவ்வொரு கலைஞரினதும் கடமையாகும்.

"அன்புடன் இறைவனைச் சரண்புகுந்து
அசையாது நில் ஆறுதல் அடைவாய்"
(கீதைப்பொன் மொழி)

# கனேடிய, இலங்கைக் கல்வி முறை பற்றிய ஓர் எளிமையான ஒப்பீடு

பொ. கனகசபாபதி,
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
பழைய மாணவனும்,
மகாஜனாக்கல்லூரியின்
ஓய்வுபெற்ற அதிபரும்.

ஏப்ரல் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சில உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லலாம் என மோட்டார் வண்டி ஒன்றினில் புகுந்து சில வீடுகளுக்குச் சென்றேன். திரும்ப, வீடு வரும் வழியில் எனது ஆரம்ப ஆங்கிலப் பாடசாலை வழியாகப் போனால் என்ன என்ற எண்ணம் வந்தது. ஏறக்குறைய இருபது வருடங்களுக்குப் பின்னர் சம்பந்தப்பட்ட மூன்று பாடசாலைகளையும் பார்த்துவிட்டேன். எனவே, இப்பாடசாலைக்கு உள்ளே போக முடியாது என்றாலும் வெளியே நின்று பார்த்துவிட்டுப் போகலாம் என எண்ணி ஓட்டுனரிடம் அப்பக்கமாக வண்டியைக் கொண்டு போகச் சொன்னேன். வீதியில் நின்றபடி பாடசாலையைப் பார்த்தேன். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி என்ற பெயர்ப்பலகை என்னை வரவேற்றது. நான் கற்பனையில் கூட எண்ணியதாக இல்லாத அழகானதொரு வளாகத்தைப் பார்த்துத் திகைத்து நின்றேன். எண்ணிறைந்த பூச்செடிகள் ரம்மியமாகக் காட்சி தந்தன. பார்க்கவே பரவசமானது. இது எல்லாவற்றிற்கும் மேலாக என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்றாலுங்கூட ஒரு சிற்றூழியர் அங்கே கர்ம சிரத்தையுடன் நின்று பூக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார் என்றால் அவர்களிடம் வேலை வாங்கும் திறன் அப்பாடசாலை அதிபரிடம் நிறையவே உள்ளது. எனவே, அவர் திறமை மிக்கவராகவே இருக்க வேண்டும் என எண்ணினேன். எனது கூற்றுக்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. எனது பழைய பாடசாலைகளில் ஒன்றிற்கு முதலில் சென்றிருந்தேன். அருகே இருந்த காணிகள் எல்லாவற்றையும் வாங்கி மிகவும் விஸ்தாரமான வளாகம் உடையதாக ஆக்கியிருந்தார்கள். 'உங்களுக்கு நிறைய வளாகம் உள்ளது. நீர்ப்பாசன வசதியும் உள்ளது. எனவே விவசாயக்கல்வியில் அதிகம் அக்கறை எடுக்க வேண்டும்' என அதிபரிடம் கூறினேன். 'இங்கே உள்ள விவசாய ஆசிரியரிடம் வேலை வாங்குவது மிகவும் கஷ்டம்' என்றார் அதிபர். அதன் பின்னர் நான் பேசுவதற்கு என்னதான் உள்ளது. வேறொரு நாள் எனது மற்றைய பாடசாலைக்குச் சென்றிருந்தேன். அதிபர் அலுவலகத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அவரின் மேசைமீது பலநாள் தூசு படிந்திருந்தது. எனது விரலினால் அதைத் தொட்டு அதிபரிடம் காண்பித்து 'சிற்றூழியரைக் கொண்டு இதனைத் துப்பரவு செய்தால் என்ன? என வினவினேன். 'சிற்றூழியரைக் காண்பதே அருமை. அப்படி இருக்க அவரிடம் வேலை வாங்குவது எப்படி?' என்றார் அதிபர். நான் வாயடைத்து நின்றேன். எம்மவர்கள் திருந்த மாட்டார்களா என ஏங்கிய எனக்கு முன்னர் நான் ஆரம்பத்தில் சொன்ன காட்சி நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. எனவே, கனடிய கல்வி முறையை ஸ்ரீலங்கா கல்வி முறையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் முதலில் அங்கே அதிபரின் வேலை நேரத்தில் கணிசமான பகுதி ஆசிரியரிடமும் சிற்றூழியரிடமும் வேலை வாங்குவதில் கழிந்து விடுகிறது எனச் சொல்லலாமா?

## அதிபர்

இருநாடுகளின் கல்வி முறையை ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் பாடசாலை அதிபரின் பணியிலேயே அங்குள்ள சிக்கல் உணரக் கூடியதாக உள்ளது. முழுமையான பாடசாலை நிர்வாகம் அங்கு அதிபரின் தோள்களிலேயே. மாணவர் ஒழுங்குப் பிரச்சனையாகட்டும், பாடசாலை நடைமுறைப் பிரச்சினையாகட்டும், கல்வி சம்பந்தப்பட்டது எதுவாகட்டும், ஏன் நிதி அறிக்கையென எல்லாமே அவர் வேலைதான். இங்கு அப்படியல்ல. அங்கே அதிபர் செய்கின்ற பெரும்பான்மையான பணிகள் இங்கே பாடசாலைச் செயலாளர்கள் செய்து விடுகின்றனர். பிந்தி வருகின்ற மற்றும் பாடசாலைக்கு வராத மாணவருக்குச் சிட்டை கொடுப்பது, பாடசாலைக்கு ஆசிரியர் ஒருவர் வராவிட்டால் அவருக்காகப் பதில் ஆசிரியரை வரவழைப்பது, வேலை கொடுப்பது மற்றும் நிதி அறிக்கை போன்றவை செயலாளர் பணியாகும். அதிபரின் இன்னோர் பகுதி வேலையை சீர்மியர்கள் (Guidance Counsellers) செய்கின்றார்கள். எனவே, இங்கே அதிபர் ஒரு இணைப்பு அதிகாரியாகவே பெரும் பணியாற்றுகிறார். போதாததற்கு சில பெரிய பாடசாலைகளிலே இரண்டிற்கு மேற்பட்ட உப அதிபர்கள் கூட இருந்தனர்.

## ஆசிரியர்

ஆசிரியத் தொழில் வெறும் வேலை அல்ல. இது ஒரு தொழில் (Profession) எனக் கூறும்போது அத்தொழிலினைச் செய்பவர் அதற்குரிய தகைமைகளைப்பெற்றிருக்க வேண்டும். நான் அறிந்த வரையில் எமது நாடு ஒன்றிலேதான் ஆசிரியத் தொழில் அதற்குரிய தொழில் தகைமை பெறாதோரால் செய்யப்படுகிறது. கனடாவிலே ஆசிரியப்பணி புரிபவர்கள் எல்லோருமே பட்டதாரிகள். அத்துடன் அவர்கள் கல்வியியலில் டிப்ளோமா செய்யாவிட்டால் ஆசிரியப் பணியாற்றுதற்குரிய OTC

எமது பாடசாலை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாகப் பெயர்மாற்றம் பெற்றுத் தரமுயர்ந்த விழாவின் போது......



வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. வீ. இராசையா, அதிபர் திரு. ச. சிவநேஸ்வரன், வட, கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர், திரு. க. கந்தசாமி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர், திரு. நா. வேதநாயகன் சகிதம் விருந்தினர்கள்.

1999 இல் வடக்குக் கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற 15 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியினர்.



இருப்பவர்கள் :- திரு. கு. விமலன், செல்வி. ம. சுவிற்றி, திரு. ச. சிவநேஸ்வரன் (அதிபர்), செல்வி. தி. சங்கீதா, செல்வி. சி. சுகதர்சினி

நிற்பவர்கள் :-

செல்விகள் - சோ. பிருந்தா, இ. கஜேந்தினி, நி. கிருசாந்தினி, ம. சர்மிளா, வி. தர்மிஷா.

## 1993-1995 வரை மருதனார்மடக் கோட்டத்தில் முதலாமிடத்தையும் 1994 இல் யாழ்மாவட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்ற வலைப்பந்தாட்ட அணியினர்



இருப்பவர்கள் :-

செல்வி S. மனோன்மணி, திரு.நா.கேதீஸ்வரன், செல்வி சி. அமுதா, திரு.ச.சிவநேஸ்வரன் (அதிபர்), T. அஜிந்தா, திரு.ச.கந்தசாமி (உபஅதிபர்), செல்வி க.பூங்கொடி.

நிற்பவர்கள் :-

செல்வி S. பாமினி, செல்வி நா. பிறேமலதா, செல்வி த. நந்தினிதேவி, செல்வி. எஸ். பாமினி, செல்வி S. சுபாசினி.

## 1994 இல் யாழ்மாவட்டத்தில் மூன்றாமிடம் பெற்ற உதைபந்தாட்ட அணியினர்




திரு.நா.கேதீஸ்வரன் (P. O. G) திரு.இ.துஷ்யந்தன்,திரு. ச. சிவநேஸ்வரன்(அதிபர்), திரு. ச. கந்தசாமி (உபஅதிபர்), திரு. த. வீரசிங்கம், ஆகியோருடன் அணிவீரர்கள்.

என்னும் ஒன்ராறியோ ஆசிரிய தராதரப் பத்திரம் ஒன்ராறியோ கல்வியியல் கல்லூரியால் வழங்கப்படமாட்டாது. கல்வியியல் டிப்ளோமா பெற்றால்தான் ஒருவர் சிறந்த ஆசிரியராக அமையலாம் என்பது நான் சொல்வதற்கு அர்த்தமல்ல. வெறும் பட்டதாரிகள் ஆசிரியத்தொழில் செய்ய முன்வருகிறார்கள். அவர்கள் அதனைத் தற்காலிகத் தொழிலாகவே கருதுகிறார்கள். அத்தொழிலில் இருந்தபடியே வேறுபல அதிக வேதனம் மற்றும் கௌரவம் உடைய தொழில்களுக்கு மனுப் பண்ணியபடியே இருப்பார்கள். அதனால் ஆசிரியத் தொழிலுக்குரிய அர்ப்பணிப்பு அவர்களிடம் பொதுவாகவே இருப்பதில்லை. அங்குள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் ஆசிரிய பற்றாக்குறை இருந்தபடியே இருக்கின்றமையாலேயும் வகுப்புக்களில் உள்ள மாணவர்களின் தொகையும் அதிகமாக உள்ளமையாலும் ஆசிரியர் வேலைப்பளு அதிகமாகிறது. இங்கே அத்தகைய பிரச்சனைகள் பெரிதாக இருப்பதில்லை ஆசிரியத் தொழிலைத் தமது ஆதர்சத் தொழிலாகவே கொண்டு அதற்குரிய தொழில் தகைமைகளைப் பெற்றே ஆசிரியத் தொழிலில் ஈடுபடுகின்றமையால் வேறு வேலைகளுக்கு விண்ணப்பிக்காது தன் தொழிலில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள். பாடசாலைகளில் ஆசிரிய பற்றாக்குறையோ பெரும் தொகை மாணவர்களோ வேலைப்பழுவினை அதிகரிப்பதில்லை. இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் வரை வருடாவருடம் ஆசிரியர்கள் உபயோகிக்காத தமக்குரித்தான விடுமுறை நாட்களை உபயோகிக்காது விட்டால் இறுதியில் ஓய்வு பெறும் சமயத்தில் அந்த நாட்களின் மொத்தத் தொகையினையும் சம்பளத்துடன் விடுமுறையாகப் பெறலாம் அல்லது அதற்கான வேதனத்தைப் பெறலாம் என் விதி இருந்தது. இதனால் ஆசிரியர்கள் அவ்வளவாக விடுப்பில் செல்லாது இருப்பார்கள். அங்கோ பெரும்பாலான ஆசிரியர்கள் மிக அற்ப காரணத்திற்குக் கூட விடுப்பில் சென்று விடுகிறார்கள். மேலும் அங்கே ஒரு ஆசிரியர் விடுப்பில் சென்றாரென்றால் அவருடைய வேலையை அதிகமான பாடசாலைகளிலே ஏனைய ஆசிரியர்களே செய்கிறார்கள். இங்கோ அதற்கெனப் பதில் ஆசிரியர்களை அழைத்து விடுகிறார்கள். அங்கே பல்கலைக்கழகம் மாத்திரமல்லாது ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளும், அண்மையில் நிறுவப்பட்ட கல்வியியற் கல்லூரிகளுங்கூட ஆசிரியர்களை உருவாக்கு கின்றன. ஆனால், பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை. ஆசிரிய நியமனத்திற்கு இவை இருந்தும் பிரயோசனமில்லை. பணமல்லவா தேவை.

### கற்பித்தல்

மாணவர் மையக் கல்வி என்பது பொதுவாக எந்த நாட்டிலும் சொல்லப்படும் கல்வித் தத்துவந்தான். கற்றல் என்னும் தேடலில் ஆசிரியர் வெறுமனே தேடற் குழுவின் தலைவராகத் திகழ்கிறார். மாணவருக்குத் தலைமை ஏற்று உரிய பாதையில் இட்டுச் செல்கிறார் என்பார்கள். கேட்க நல்லாத்தான் உள்ளது! ஆனால், இதன் வெற்றியும் மற்றும் தனித்துவமும் அங்கங்கே காணப்படும் மூல வளங்களிலேயே தங்கியுள்ளது. போதிய ஆசிரியர், வசதியானநூலகம், தகவல் பெறுவதற்கான கணினிகள் எனத் தேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இங்கே கணினிக் கல்வி முதலாம் தரத்திலேயே ஆரம்பமாகி விடுவதோடல்லாமல் கணனி இல்லாத வீடுகளே இல்லை எனலாம். நூலகங்களில் வருடாவருடம் புதிய தகவல்களுடன் கூடிய புதிய நூல்கள் குவிகின்றன. எனவே ஆசிரியரின் வேலை மிக எளிதாகி விடுகிறது. அங்கோ தாய்மொழிக் கல்வி, பாடங்கள் கற்பிப்பதற்குரிய போதிய நூல்கள் இல்லை. நூலகங்களில் புதிய நூல்கள் வருகை கார்த்திகைப் பிறை கண்டமைபோல. கணனிகள் இப்போதுதான் பாடசாலைகளை எட்டிப் பார்க்கத் தொடங்கியுள்ளன. அதனைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. கணினியில் இருப்பதைப் புரிந்து கொள்ள ஆங்கில அறிவும் மாணவருக்கு இல்லை. எனவே தகவல்களைச் சேகரிப்பது அதனை மாணவருக்கு வழங்குவது ஆசிரியரின் தலையாய கடனாகிறது.

### பரீட்சைகள்

எமது தாயகத்தில் கல்வி என்றால் பரீட்சை இல்லாத கல்வி என்ன கல்வி என்பார்கள். இரண்டு முக்கிய நாடளாவிய பொதுப் பரீட்சைகள் மாணவரை வடிகட்டி எடுக்க உதவுகின்றது. கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை 11ஆம் ஆண்டிலே நடக்கிறது. அதன் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கு மாணவர் அனுமதிக்கப்படுகின்றனர். அதே போன்றே 13ஆம் ஆண்டிலே கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெறுகின்றது. இப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே மாணவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். இப்பரீட்சையை ஒரு தகுதிகாண் பரீட்சை எனக் கூறுவதிலும் பார்க்க ஒரு பிரவேசப் பரீட்சை என்றே கூற வேண்டும். ஒவ்வொரு வருடத்துப் பல்கலைக்கழகம் புகும் மாணவர் தேர்வு அவ்வருடத்திய பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே நடைபெறுகிறது. பரீட்சைகள் மூலம் மாணவரின் முழுமையான ஆற்றலைக்கண்டு கொள்ளல் சாத்தியமில்லை, அதற்கான சிறந்த வழி தொடர்ச்சியான மதிப்பீடு தான் என்ற சித்தாந்தம் ஒன்ராறியோவில் நீண்டகாலமாக நிலவி வந்தமையால் இங்கே பல்கலைக்கழகம் புகும் வரை பொதுப் பரீட்சைக்கு இடமில்லாது போய்விட்டது. அங்கு என்றால் 11ஆம் ஆண்டு பரீட்சையில் இருமுறைகளில் சித்தியுறாதோர் பாடசாலையை விட்டு நீங்கியேயாக வேண்டும். இங்கு அவர்கள் பாடசாலை இறுதி ஆண்டுவரை தொடர்ந்து கல்வி கற்கலாம். OSSD என அழைக்கப்படும் ஒன்ராரியோ இரண்டாம் நிலைப் பாடசாலை Diploma 12ஆம் ஆண்டின் முடிவிலே அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு 9, 10, 11 மற்றும் 12ஆம் ஆண்டுகளிலே 30 சிறப்புத் தேர்ச்சிகள் பெற்றிருக்க வேண்டும். அவற்றில் ஆறு 11ஆம், 12ஆம் வகுப்புக்களில் பெற்றுக்கொள்ளலாம். பல்கலைக்கழகம் புகுவதற்கு 11ஆம், 12ஆம் தரங்களில் பெற்ற ஆறு சிறப்புத் தேர்ச்சிகள் கவனத்தில் கொள்ளப்பட்ட போதிலும் OSSD இல்லாவிட்டால் பல்கலைக்கழகம் புகமுடியாது. எனவே நமது நாட்டு முறைக்கும் இங்கு நிலவும் முறைக்குமிடையே ஒரு மெலிதான ஒற்றுமை இழைபோடுவதை காண்பீர்கள். ஆனால்

இங்கே தகுதியற்ற மாணவர்கள் பொதுப் பரீட்சை முறையினால் பல்கலைக்கழகம் புக முடியாது போகின்றமையால் பல்கலைக்கழகம் புகும் பெரும்பான்மை மாணவர் சித்தியடைந்து பட்டம் பெற்று வருகின்றார்கள். இங்கோ பல்கலைக்கழகம் புகுந்தோரில் இருபது வீதத்தினர் இடையில் நழுவி விடுகின்றார்கள். அல்லது உரிய காலத்தில் முடிக்கத் தவறி விடுகின்றார்கள். அது எப்படி? ஆசிரியர்கள் மதிப்பீட்டின் அடிப்படையிலே மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்வது. எல்லா ஆசிரியர்களும் ஒரே மாதிரி மதிப்பீடுகள் செய்வார்களா என சில பெற்றோர்கள் முணுமுணுக்கவே செய்கின்றார்கள். நிலைமை என்னும் சில வருடங்களில் மாறிவிடும் என எதிர்பார்க்கின்றேன். அதற்குரிய அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. பரீட்சைகளின் முக்கியத்துவத்தை இப்போ உணர்ந்ததன் விளைவாகவே ஒன்ராரியோ மாநில அரசு சில பரீட்சைகளை முன்வைக்க முன்வந்துள்ளது. அவை 3ஆம், 6ஆம், 10ஆம் தரங்களில் நடத்தப்படுகின்றன. 3ஆம், 6ஆம் தரங்களில் நடத்தப்படுபவை EQAO Educational Quality Accountability Office எனும் கல்வித் தரத்தின் பொறுப்பேற்றல் அலுவலகப் பரீட்சை என்பர். EQAO பரீட்சையில் மாணவர்கள் ஆங்கில மொழியிலும், கணிதத்திலும், பரீட்சிக்கப்படுகின்றனர். ஆங்கில மொழியில் எழுதுதல் வாசித்தல் பரீட்சை நடைபெறுகிறது. இப்பரீட்சை மாணவர்களின் திறமைகளை எடைபோட வல்லன என்றும் கற்பிக்கப்பட்டவையை மாணவரால் புரிந்து கொள்ள முடிகிறதா என தெரிந்து கொள்வதற்கான பரீட்சையே என சொல்லப்பட்டாலும் பாடசாலை அளவிலான பெறுபேறுகள் பத்திரிகைகளிலும் வலைமனைகளிலும் பிரசுரிக்கப்படுகின்றமையால் ஏதாவது சாக்கிலே இடம்பெயர்ந்தோரின் பிள்ளைகளை பரீட்சைக்குத் தோற்றாமல் செய்யும் பாடசாலைகளும் உள்ளன. பத்தாம் தரத்தில் நடைபெறுவது எழுத்தறிவு பரீட்சை எனப்படுகின்றது. வாசிப்பு, எழுத்து ஆகிய இரு பகுதிகளையும் உள்ளடக்கிய இந்த எழுத்தறிவு பரீட்சையில் சித்தியடைந்தால் மாத்திரமே மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கோ, சமூக கல்லூரிகளுக்கோ செல்வதற்கு தகுதியுடையோர் ஆவர். பத்தாம் தரத்திலா வாசிப்புப் பரீட்சை என ஆச்சரியப்படாதீர்கள். இது விந்தையான நாடு. மாணவ மையக்கல்வி என்று தான் பெயர். ஆனால் இது ஆசிரிய மையமாகவே இன்றும் உள்ளது.

**நிர்வாகம்**

அங்கு அரசாங்கத்தின் நேரடிப் பணியாகக் கல்வியூட்டல் அமைய, இங்கு அரசாங்கம் கல்விச் சபைகள் ஊடாக கல்வி வழங்குகின்றது. ஒவ்வொரு உள்ளூராட்சி ஆட்சிமன்றத்திற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இரு கல்விச் சபைகள் உள்ளன. இவற்றில் ஒன்று அரச பாடசாலைகளை நிர்வகிப்பது. மற்றையது கத்தோலிக்க கல்விச் சபை. இதன் அங்கத்தவர்களைக் கத்தோலிக்க மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். கல்விச் சபை அங்கத்தவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுப் பார்கள். கல்விச் சபை அங்கத்தவர்கள் தாமே ஒரு தலைவரைத் தேர்ந்து சபையின் நடவடிக்கைகளை அவர் தலைமையில் மேற்கொள்கிறார்கள். இதைத்த தவிர பிரெஞ்சுமொழிக் கல்விச் சபை ஒன்றும் உள்ளது. சில வருடங்களுக்கு முன்னர் ஒவ்வொரு உள்ளூராட்சி ஆட்சிமன்றமும் சொத்துரிமை வரி என மக்களிடம் ஒரு வரியினை அறவிட்டு அதனை கல்விச் சபையிடம் ஒப்படைத்தனர். இது தவிர மாகாண அரசும் மானியம் வழங்கி வந்தது. இவ்விரண்டு நிதி உதவிகளையும் வைத்துக் கல்விச் சபை நடப்பு ஆண்டிற்கான நிதியறிக்கையினை உருவாக்கி அதற்கேற்ப பணத்தைச் செலவிட்டு வந்தது. அண்மையில் ஆட்சியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட புதிய கொன்சவேற்றிக் கட்சி பல பாரதூரமான மாற்றங்களைத் தமது ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்ததை நீங்கள் எவரும் மறந்திருக்க மாட்டீர்கள். எல்லாவற்றிலும் கை வைத்தார் மைக்கரீஸ். அவற்றில் சில நன்மை பயப்பன. பல தீமை வழங்கின. அவற்றில் சில கல்வி சம்பந்தமானவை.

1. முன்னர் சிறிதாக இருந்த கல்விச் சபைகள் இணைக்கப்பட்டு பெரிதாக்கப்பட்டன.
2. கல்விச் சபை அங்கத்தவர்களின் தொகை குறைக்கப்பட்டதுடன் அவர்களது பணி பகுதிநேர பணிகளாக்கப்பட்டது. அவர்கள் ஊதியம் பெரும் அளவிலே குறைக்கப்பட்டது.
3. சொத்துரிமை வரியினை அறவிடும் பணியை அரசே ஏற்று கல்விச்சபைக்கு மாணவர் தொகை அடிப்படையிலே மானியம் வழங்கப்பட்டது. கல்விச் சபை அத்தொகையினை வைத்து நிதியறிக்கை தயாரிக்க வேண்டும்.

**நிதி**

மாகாணம் எங்குமே உள்ள கல்விச் சபைகளுக்கு ஒரே சூத்திரத்தின் அடிப்படையிலேயே கல்வி அமைச்சு மானியத்தை வழங்க பாடசாலைகளின் தேவைகளோ அவை அமைந்த இடங்களுக்கு ஏற்ப மாறுபட்டமையால் பிரச்சனைகள் ஏற்படவே செய்கின்றன. உதாரணமாக ரொறன்ரோ கல்விச் சபையின் பாடசாலைகளிலே புலம்பெயர்ந்தோரின் பிள்ளைகள் அதிகமானமையால் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதற்கு கணிசமான அளவு பணம் செலவிடப்படுகின்றது. இதன் காரணமாக பல கல்விச் சபைகள் நிதிப்பற்றாக்குறைக்கு ஆளாகி மாணவருக்கு வழங்கக் கூடிய பல வசதிகளை நிறுத்தவோ குறைக்கவோ வேண்டிய தேவை ஏற்பட்டது. சென்ற வருடம் ரொறன்டோ கல்விச் சபையும், ஒற்றாவா கல்விச் சபையும் வரவுசெலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்த முடியாமையால் கல்வி மந்திரி கல்விச் சபையை செயலிழக்கப்பண்ணி அச்சபைகளை நிர்வகிப்பதற்கு விசேட மேலாளர்களை நியமித்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். நிதி பற்றாக்குறையினால் ஆங்கிலம் இரண்டாவது மொழியாக கற்பித்தல் விசேட கல்வி, கல்விக்குப் புறம்பான பாடசாலை நிகழ்ச்சிகள் என பல முனைகளில் வெட்டுக்கள் ஏற்பட்டமையால் புலம்பெயர்ந்தோரின் பிள்ளைகளின் கல்வி பெரிதும்

பாதிக்கப்பட்டது. இந் நாட்டின் கூட்டாட்சி நடைபெறுகின்ற போதிலும் மத்திய அரசிற்கும் கல்விப் போதனைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. பாரம்பரியக் கல்வி கற்பித்தலைச் சட்டவடிவு கொடுத்தது மைய அரசே. அதற்குரிய நிதியுதவியையும் மைய அரசு பொறுப்பேற்கின்றது. கல்விக் கொள்கையினையும் பாட விதானங்களையும் மாகாண அரசே ஆக்கித் தருகிறது. கல்விச் சபைகள் பாடசாலை நிர்வாகம், கல்வியூட்டல் ஆகிய நிர்வாகப் பணியினை ஏற்று நடாத்துகின்றன. ஒவ்வொரு கல்விச் சபையும் கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் அவருடன் சேர்ந்து செயற்படும் மேலாளர்களையும் நிர்வாகத்திற்கென வைத்திருக்கும்.

எமது நாட்டினைப் பொறுத்தமட்டிலே நிதி ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டத்தின் போது ஒதுக்கப்பட்டு விடுகிறது. ஒதுக்கப்பட்ட நிதி பாடசாலைகளின் ஆசிரியர்களின் வேதனத்துக்கும் அடிப்படைத் தேவைகளுக்கும் மாத்திரமே போதுமானது. 1947ஆம் ஆண்டில் அமரர் C.W.W. கன்னங்கரா இலவசக் கல்வி என்ற சித்தாந்தத்தைப் புகுத்தியதன் காரணமாகவே பல ஏழைகள் எளியோர் ஆங்கிலக்கல்வி கற்க முடிந்தது. அதுவரை ஆங்கிலக் கல்வி ஏழைகளுக்கு எட்டாக் கல்வியாக இருந்தது. பின்னர் அத் திட்டம் பல்கலைக்கழகம் வரை சென்றதோடு அல்லாமல் இலவச பாடநூல்கள், உடை என வேறு துறைகளிலும் வியாபித்தது. எனினும், ஒவ்வொரு பாடசாலையும் வசதிக் கட்டணம் என மாணவர்களிடம் ஒரு தொகையினை அறவிடுகிறது. இப்பணம் விளையாட்டுத்துறை, ஆசிரிய பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காகப் பாடசாலை நிர்வாகத்தால் நியமிக்கப்படும் வசதிக்கட்டண ஆசிரியர்கள், தவணைப்பரீட்சை, பாடசாலை விழாக்கள் போன்ற அன்றாட பாடசாலைத் தேவைகளை ஈடுசெய்ய உதவுகிறது. கல்விக் கொள்கை வகுத்தல், பாடவிதானம் ஆக்கல், பாடசாலைகளின் அன்றாட இயக்கம், ஏன் பொதுப் பரீட்சை என எல்லாமே கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்றது. நாம் மாணவர்களாக இருந்த காலத்திலே முழு இலங்கைக்கும் ஒரேயொரு கல்விப் பணிப்பாளரே இருந்தார். பின்னர் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒருவர் நியமிக்கப்பட்டார். இப்போ ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவர் எனப் பலர் உள்ளனர். அங்கே இப்பொழுது மூலைக்கு மூலை அனைத்துலகப் பாடசாலைகளும் (International Schools) பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் பயிற்சி வழங்கும் வகுப்புக்களை நடாத்தும் திட்டமும் அங்கீகரிக்கப்பட்டமையால் கன்னங்கராவின் இலவசக் கல்வி என்ற நிலை மாறி மீண்டும் வசதியுடையோருக்கு ஆங்கிலக் கல்வியும் வசதியற்றோருக்குத் தாய்மொழிக்கல்வியும் என்ற நிலை வந்துவிடுமோ என அஞ்சுகிறேன்.

### பாடசாலை முறைகள்

ஏறக்குறைய எல்லா நாடுகளிலுமே இப்போது 12 வருடப் பாடசாலைக் கல்வியும் அதனைத் தொடர்ந்து 3ஆம் படிநிலைக்கல்வியும் என்ற முறைமை கையாளப்பட்டு வருகின்றது. சென்ற வருடம் வரை ஒன்ராறியோ மாநிலம் மாத்திரமே வித்தியாசமான முறையிலே பாடசாலைக் கல்வியை 13 வருடமாக வைத்திருந்தது. அதனைச் சீர்செய்ததன் விளைவாகச் சென்ற ஆண்டும் இவ்வாண்டும் பல்கலைக்கழகம் புகுவோர் தொகை இரண்டு மடங்கானது (double chhort) பாடசாலைகள் அங்கே மகாவித்தியாலங்களாகவும், மத்திய மகா வித்தியாலயங்களாகவும் இருக்கின்றன. ஆனால் இங்கே உள்ளது போன்ற மிகத் தெளிவான மூன்று பிரிவுகளாகப் பாடசாலைகள் அமைந்திருக்கவில்லை. ஆரம்ப பாடசாலைகள் பொதுவாகப் பாலர் வகுப்புத் தொடக்கம் 5ஆம் அல்லது 6ஆம் தரம் வரையும், நடுநிலைப் பாடசாலைகள் 6ஆம் ஆண்டு தொடக்கம் 8ஆம் அல்லது 9ஆம் தரம் வரைக்கும் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் 9ஆம் அல்லது 10ஆம் தரம் தொடக்கம் 12ஆம் தரம் வரைக்கும் வகுப்புக்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்கள் உள்ளன என்பதையும் கூறவேண்டும். அங்கே மகாஜன போன்ற பல பாடசாலைகளிலே பாலர் பிரிவு தொடக்கம் 12ஆம் தரம் வரை வகுப்புக்கள் உள்ளன. இதனால் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசுவாசமான பழைய மாணவர்கள் உருவாகும் வகுப்புக்கள் உள்ளன. இந்நாட்டிலே மாணவன் ஒருவன் தனது 12 வருட கல்வியாண்டுகளை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடசாலைகளில் கழித்து விடுகின்றமையால் ஆசிரியர்கள் மேலோ பாடசாலைகள் மேலோ அதிகம் லயிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதில்லை. உடல் ஊனமுள்ளோருக்கென இங்குபோல் அங்கும் பாடசாலைகள் உள்ளன. மிகக் குறைந்த எண்ணிக்கையிலும் குறைந்த வசதிகளையும் உடையனவாயுமே அவை உள்ளன. ஆனால் கற்றல் குறைபாடு (learning Disability) உள்ளோருக்கான பாடசாலைகள் அங்கு இல்லை என்றே எண்ணுகிறேன். கல்வி கற்கும் எல்லா மாணவர்களும் பல்கலைக்கழகம் புகும் திறன் உடையோராய் அமைய முடியாது. பல்கலைக்கழகம் புக முடியாதோர் தமது திறனுக்கேற்ப வெவ்வேறு துறைகளில் கல்வி கற்று அத்துறைகளில் கல்விமான்களாக முடியும் அல்லது ஏதாயினும் தொழில் கற்று வாழ்வை நடத்தலாம். எனவே, அதற்கு அனுசரணையாக ஒவ்வொரு கல்விச்சபையும் அத்தகைய பாடசாலைகளைக் கொண்டுள்ளன. கற்றல் குறைபாடு உள்ள மாணவர்களை உளவியல் அறிஞர்களின் உதவியுடன் ஆரம்பத்திலேயே இனம் கண்டு அவர்களுக்கான விசேட பாடசாலைகளில் கற்க வைக்கின்றார்கள்.

### பாடவிதானம்

கல்விக் கொள்கை அரசாங்கத்தால் வகுக்கப்படுகின்றது. காலத்துக்குக் காலம் அரசுகள் மாறுகின்ற பொழுது புதிய மாற்றங்கள் சில ஏற்படுவதுண்டு. இந்நாட்டிலேகூட 1994ஆம் ஆண்டிலே அப்போதைய பொப் றேயின் அரசு கல்வி ஆணைக்குழு ஒன்றினை அமைக்க பல சிபார்சுகளை கூறியது. தமக்கு உகந்தவற்றை மாத்திரம் பொப் றேயின் அரசும் அதற்குப் பின்வந்த மைக் ஹரிஸ்

அவர்களின் அரசும் நடைமுறைப்படுத்தின. சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவது பற்றிச் சிந்திக்க முன்னர் பொதுவாகவே பொதுவாகவே அரசுகள் மாணவர் நலனை உத்தேசிப்பதிலும் பார்க்க அவற்றினை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படவுள்ள பொருளாதாரத் தாக்கம் பற்றியே சிந்திக்கிறேன்.

ஸ்ரீலங்காவிலே கல்விக் கொள்கை பல முறைகள் அரசியல் ஆக்கப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் ஒரு ஆணைக்குழுவினை நியமிக்கும். அந்த ஆணைக்குழு சில வளர்ச்சியுற்ற நாடுகளின் கல்விக் கொள்கையை இங்கேயும் அங்கேயுமாகப் பொறுக்கி, சில சிபார்சுகளைச் செய்யும். அரசு அவற்றில் தனக்கு வசதியானவற்றை அமுல் செய்யும். சிபார்சு செய்பவர்கள் நாட்டின் வசதிகள் பற்றியோ நடைமுறை சாத்தியம் பற்றியோ சிந்திப்பதில்லை. மைக் ஹரிஸ் அரசு 1999ஆம் ஆண்டு மிகவும் முக்கியமான ஒரு செயல் திட்டத்தை மாணவர் பாட விதானத்தில் புகுத்தியது. அதன்படிக்கு இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்கள் தமது நான்கு வருடக் கல்லூரி வாழ்வை முடிக்கு முன்னர் கட்டாயமாக 40 மணித்தியாலங்கள் சமூகசேவை செய்திருக்க வேண்டும். அவ்விதம் செயற்படாத மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கோ சமூகக் கல்லூரிகளுக்கோ செல்வதற்கு அருகதை அற்றவர்களாகக் கணிக்கப்படுவார்கள். மாணவர்களுடைய குடியியல் பொறுப்புணர்வினை வளர்க்க உதவும் இச் செயற்பாடு பாராட்டிற்குரியதே. 1970ஆம் ஆண்டிலே அப்போது நம் தாயகத்திலே ஆட்சியிலிருந்த அரச உயர் தேசியச் சான்றிதழ்ப் பரீட்சை எனப் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்குப் பெயரிட்டு அதற்கு முக்கியதேவையாக செயற்றிட்டம் ஒன்றையும் கட்டாயமாக்கியது. இச் செயற்றிட்டம் மாணவரின் குடியியல் பொறுப்புணர்வினை வளர்க்கப் பெரிதும் உதவியிருக்கும் என்பது உண்மையே. ஆனால் ஆட்சிக்கு வந்த மாற்று அரசு அதனைத் தூக்கிக் கிடப்பில் போட்டு விட்டது. எமது கல்வி முறையில் உள்ள குறைபாடு மிக ஆரம்பத்திலிருந்தே பொறியியற் துறை, மருத்துவத்துறை, கலைத்துறை எனப் பாடநெறிகளைப் பிரித்து விடுவது அண்மைக் காலங்களிலே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் இக்குறைபாடு தொடர்ந்தும் இருந்து கொண்டே செல்கிறதனைக் காண முடிகிறது. அங்கே பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குக் கற்கின்ற மாணவர் தமது பாட நெறிகளைத் தெரிகின்ற பொழுது அவர்கள் ஒரு இருபது பாடங்களுக்கு உள்ளேயே தமது தெரிவுகளைச் செய்து கொள்ள முடியும். ரொறன்ரோவிலுள்ள மாணவர்கள் தெரிவு செய்ய ஏறக்குறைய 150 பாடங்கள் வரை உள்ளன. வசதியான நாடு என்பதால் வாய்ப்புக்கள் பெருக புதிய புதிய துறைகள் தோன்றுகின்றன. அதற்கான தொழில் வாய்ப்புக்கான பாடநெறிகளை ஆக்கி மாணவர்களைத் தயார்படுத்துகின்றனர். 11ஆம், 12ஆம் வகுப்புக்களுக்கான பாட நெறிகள் மாணவர்களின் எதிர்கால இலக்குகளுக்கமைய வகுக்கப்பட்டுள்ளன. ஐந்து வகையான பாட நெறிகள் உள்ளன.

1. மாணவர்களை வேலைத் தலத்திற்கு ஆயத்தம் செய்யும் பாட நெறிகள்
2. சமூகக் கல்லூரிகளுக்கு ஆயத்தம் செய்யும் பாட நெறிகள்
3. பல்கலைக்கழகம் / சமூகக் கல்லூரிகளுக்கு ஆயத்தம் செய்யும் பாட நெறிகள்
4. பல்கலைக்கழகத்திற்கு ஆயத்தம் செய்யும் பாட நெறிகள்
5. பொதுப்பாட நெறிகள்

இது ஒரு சிறந்த முறை. மாணவனின் வருங்கால இலக்கிற்கு ஏற்பக் கல்வி வழங்குவதால் அவன் அத்துறையில் சிறப்பான தேர்ச்சி பெற முடிகிறது.

*வழிகாட்டல்கள்*

இங்கு பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்கிறார்கள். எனவே பிள்ளைகளுடன் கழிக்கின்ற நேரம் மிகக் குறைவு. அந்தச் சமயத்திலே பிள்ளைகளுடைய பாடசாலை அனுபவங்களை, கற்கை நெறித் தேவைகள், தொழில் தேர்வுகள், பாடசாலை பிரச்சினைகள் என்பன பற்றி எல்லாம் பிள்ளைகளுடன் பெற்றோர் பேசித் தீர்வு காண்பதற்கு அவர்களுக்குப் போதிய அவகாசம் கிடைப்பதில்லை. ஆனால், இவை எல்லாவற்றையும் ஈடுசெய்வதற்குப் பாடசாலையில் ஆசிரிய வழிகாட்டிகள் உள்ளனர். அவர்கள் மாணவருடைய பாடத்தேர்வு, நேரசூசி, ஆக்கல் போன்ற ஏனைய உதவிகளுடன் மிக முக்கியமான இன்னொன்றையும் செய்கிறார்கள். மாணவருக்குத் தேவையான உணர்வுபூர்வ ஆதரவினை வழங்குவது அவர்களின் பிரதான தொழிலாகின்றது. மாணவர்களை அரவணைத்துக் கொள்ளும் திறனுடையவர்கள் இதற்கென விசேட பயிற்சி பெற்றுள்ளனர்.

எமது நாட்டில் இந்தத் தேவைகள் இதே பரிமாணத்தில் இல்லை என்ற போதிலும் அத்தகையோர் இருப்பது சிறந்த கல்வி வழங்கலுக்கு அனுசரணையானதே. அங்கே பல வருடங்களாக இம் முயற்சி நடைபெறுகின்றது. ஆசிரியர்களும் சிறிது பயிற்றப்பட்டு, சான்றிதழ்களும் பெற்று வைத்துள்ளனர். முதலில் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டால் தான் ஏனையவை நடைபெறும்.

போர்க்காலம் முடிவுற்றது என நம்புவோம். எமது தமிழீழம் தனது கல்வித் தரத்தில் முன்னைய நிலைக்கு வரவேண்டும். இங்கே உள்ள பாடசாலைகளைப் போல எமது பாடசாலைகள் யாவும் புதுப்பொலிவுடன் திகழவேண்டும். இங்கே உள்ள பழைய மாணவர் சங்கங்கள், ஊர் அபிவிருத்தி மன்றங்கள் யாவும் அதற்கு உதவ வேண்டும்.

**நன்றி**

**சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றம் கனடா**

# கணபதி களஞ்சியம்

பத்திரிகை
விநியோகஸ்தர்

அழகு சாதனப் பொருட்கள் , பாடசாலை உபகரணங்கள்,
சயிக்கிள் உதிரிப் பாகங்கள் அத்தியாவசியப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட
வேண்டிய ஸ்தாபனம்







உரிமையாளர் :அ.கணேஸ்வரன்.



பலாலி வீதி,
கோண்டாவில்,

கிளை 2
சிவசக்தி களஞ்சியம்
கோண்டாவில் சந்தி.

நவநாகரிக ஆடவர், நங்கையர்க்கேற்ற
சகலவிதமான
ஆடைத்தெரிவுகளுக்கும் நீங்கள்
நாட வேண்டிய ஸ்தாபனம்

# ரஞ்சனாஸ் புடைவையகம்





இல.4 A , மத்திய சந்தை,
சுன்னாகம்.


சைக்கிள் மற்றும் சைக்கிள்
உதிரிப்பாகங்களை மலிவாக பெற்றுக்
கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

*கட்டிடப் பொருட்கள்
விற்பனையாளர்.*



# கஜமுகன்

# ஹாட்வெயர்






**T.P: 021 - 2222833**

**147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.**


பெஷன்
ஹவுஸ்
Fashion House
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள
யாழ் நகரில் புகழ் பெற்ற ஸ்தாபனம்.
உங்கள் திருப்தியே எங்கள் வளர்ச்சி
T.P: 021 - 2222197
No.203,
K.K.S.Road,
Jaffna.
சாந்தி அச்சகம்
நாச்சிமார் கோவிலடி
இல.203 (65),
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2222821


PAPER HOUSE
சகல விதமான பாடசாலை
உபகரணங்களையும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்
300, Hospital Road,
Jaffna.


ரங்கனா
தளபாட நிலையம்
நம்பிக்கையான நவீனமான நல்ல ரகமான
உறுதியான தளபாடங்களுக்கு
நாடவேண்டிய இடம்.
நவீன கருவிகள் கொண்டு செய்யப்படும்
மர,உருக்குத் தளபாடங்கள்.
3 வருட உத்தரவாதம்
உங்கள் தளபாடத் தேவைகளை
மலிவாகவும் தரமாகவும்
உத்தரவாதத்துடனும்
வழங்குவதே எமது திருப்தியாகும்.
தளபாட விற்பனையில் 40 வருட அனுபவசாலிகள்
53, Kasthuriar Road,
Jaffna.
T.P: 021 - 222 3453,
0777 - 724966

# முதியோரே எமது தேசிய சொத்துக்கள்

இ. தர்சினி
தரம் 9 B

பல்லாண்டு காலமாய்ப் பாடுபட்டுத் தேடிய சொத்துக்கள் யாவும் நமது தேசத்தில் மண்ணோடு மண்ணாய் மறைந்த மத்தியில் வாழ்கின்றோம். இச் செய்தி யாவரும் அறிந்த உண்மை. இப்படியான ஒரு சூழ்நிலையில் எமது தேசத்தின் எஞ்சியிருக்கும் அழியாத சொத்துக்கள் யாது? என்று ஆராய்வோம். பொன்னும், பொருளும், கட்டிடங்களும், மாடமாளிகைகளும், வளமான வயல்நிலங்களும், கலைக்கூடங்களும், கல்விச்சாலைகளும் மண்மேடுகளாய்க் காட்சி தரும் இவ் வேளையில் எமது தேசிய சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம்முடையது. அழிந்து போனவை அனைத்தும் அழிந்து போனவையே. என ஏங்கி விட்டொழியாது மீண்டும் பெற்றுக் கொள்ளும் வழியைக் கையாள வேண்டும். "அரியவற்றிலெல்லாம் அரிதாம் பெரியோரைப் பேணி தமக்கென கொளல்" என்னும் வள்ளுவப் பெருமானின் திருக்குறற்கிணங்க நாம் முதியோரைப் பாதுகாக்க வேண்டும். எமது பண்பாடு, எமது கலாச்சாரம், எமது பாரம்பரியம் எல்லாம் அழித்தொழிக்கப்பட்டாலும் மீண்டும் அவற்றைப் பெற வேண்டும் என்றால் மேற்கூறியவற்றின் பொக்கிஷமான எமது முதியோரைப் பேணிப் பாதுகாத்து அவர்களுடைய புத்திமதிகளை மனமாகக் கேட்டு மதித்து அதன் படி ஒழுகி நடக்க வேண்டும். முதியோர் வாரமாக யூன் முதலாம் வாரம் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை மனப்பூர்வமாக நாம் கொண்டாட வேண்டும். முதியோருக்கு முழுமதிப்பும் கொடுத்து அவர்களே எமது தேசத்தின் நடமாடும் பாரம்பரிய தேசிய சொத்துக்கள் என்பதை மனதிற் கொண்டு பாதுகாத்து நயம் பெற வேண்டும்.

எதிரி எம்மையழிக்க நினைத்து எமது சொத்துக்களை அழித்ததில் நாம் படும் கவலையிலும் பார்க்க எமது கலாச்சாரம், எமது பாரம்பரியம் அனைத்தையும் திட்டமிட்டு அழிக்கின்ற இவ் வேளையில் நாம் அதைப் பாதுகாக்க வேண்டும். எம்மவரில் பலர் எமது முது பெரும் சொத்தான முதியோரைப் பாதுகாக்க முனையாது ஏனோ தானோ என்று அழியவிடுகின்றோம். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாளிலும் பொழுதிலும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றப்பட்டு வரும் நாம் நம் முதியோர் வழியில் கேட்டு எமது இனத்தின் பண்பு, கலாச்சாரங்களைப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் உலகில் நீதி, நியாயம், அன்பு, பாசம் என்று மற்றவரிலும் பார்க்க நாம் வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் மாறிவிடும். முற்றாய் நாம் எமது பாரம்பரியத்தையழிக்க விடாது பார்க்க வேண்டும் என்றால் தேசியச் சொத்தான எமது முதியோரைப் பாதுகாத்து அவர்கள் மூலம் பழம் பெரும் பண்பாட்டான குடிகளாய் மாறுவோம். இதுவே எமது மனதில் நாம் கொண்ட தாரக மந்திரம். வெற்றி பெறுவோம் இது உறுதி.

# கண்கண்ட தெய்வங்கள்

வி. அனுஷா
தரம் - 7 " C "

*பகலுக்குத் தேவை வெளிச்சம்*
*என் பண்புக்குத் தேவை*
*பெற்றோரின் ஒளிக்கல்*
*இணையில்லா இறைவனின் கண்கள்*
*என் வீட்டில் அரவணைக்கும்*
*இருளின் கைகள்*
*அருகதை சொன்ன பெற்றோர்*
*ஆற்றலை வழங்கிய இணையில்லா ஒளிகள்*
*எடுப்பில்லா வாழ்வது வாழ்ந்து*
*என் இனத்துக்குச் செய் நீ*
*பாரிய சேவை என்ற என் பெற்றோர்*
*புகழது உலகுக்கு வேண்டும்*
*நாம் புனிதமாய்ப் பேணுவோம் புனிதரைத் தினமும்*

## தொலைத் தொடர்பு சாதனங்கள்

*தெ. தர்சன்*
*தரம் 10*

நவீன உலகில் தொடர்பாடல் சாதனங்கள் குரல், செய்தி, காட்சி என்பவற்றைக் காவிச் சென்று வழங்குவதாகவுள்ளது. செய்திகள், தகவல்கள், படங்கள் போன்றவற்றை ஒரு சில வினாடிகளில் உலகின் ஒரு பகுதியில் இருந்து மறு பகுதிக்கு அனுப்பி வருகிறது.

செய்திப்பத்திரிகைகள், விளம்பரங்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றுடன் தொலைபன்னி (Telegraph), தொலைபேசி (Telephone), றேடார் (Radar), ரெலெக்ஸ் (Telex), பாக்ஸ் (Fax), என்பன தொலைத்தொடர்புச் சாதனங்களாக விளங்குகின்றன.

1844 இல் சாமுவேல் மோர்ஸ் என்பவர் தொலைபன்னி ஒன்றினை அமைத்துத் தந்தித் தொடர்பை முதன்முதலில் ஏற்படுத்தினார். 1876 இல் கி.ரெஹாம் பெல் என்பவர் மனிதனது குரல் ஓசை மூலம் கொண்டு செல்லும் தொலைபேசியைக் கண்டு பிடித்தார். 1895 இல் மார்க்கோனி ரேடியோ அலைகள் மூலம் செய்திகளை அனுப்பும் முறையைக் அறிமுகப்படுத்தினார்.

றேடார் என்பது ரேடியோ அலைகளைத் துணைக்கொண்டு கண்ணுக்கெட்டாத பொருட்களைப் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகும். விண்ணில் மிக உயரத்தில் பறக்கின்ற விமானங்களை ஒலியின் வேகத்தில் செல்லும் சைகைகள் விமானத்தைத் தொட்டு ரேடார் நிலையத்தில் எதிரொலிக்கின்றன. விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்தை (ரேடார்) கட்டுப்படுத்துகின்றது.

தகவல் தொடர்புச் சாதனங்கள் இன்று இலங்கை போன்ற சிறிய நாடுகளில் கூட பெரிய அளவில் முன்னேறியுள்ளது. கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் மத்திய தொலைத்தொடர்பு நிலையம் நிறுவப்பட்டு மூலைமுடுக்கு எல்லாம் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. (Handphone) கைத்தொலைபேசி இன்று பல மக்களிடமும் காணப்படு கின்றது. கம்பிகள் மூலமாகவும் நிலத்துக்கடியில் பல மையக் கேபிள்கள் மூலமாகவும் இவ் வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இணைஅச்சுக் கேபிள்கள் மூலம் நகரங்களுக்கிடையிலான தொலைவுத் தொலைபேசியால் ஒரே சமயத்தில் பல எண்ணிக்கையில் தொலைபேசித் தொடர்புகள் கொள்ளமுடிகிறது.

தொலைவுத் தொலைபேசிகள் மின்தட்டு அச்சுக்களுடன் இணைக்கப்பட்டு ரெலெக்ஸ் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. படங்களும் அளிக்கப்பட்டு ஒரு பத்திரிகையின் முழுப்பக்கம் முழுமையாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு Fax இயந்திரங்கள் மூலம் அனுப்பப்படுகிறது.

நவீன விஞ்ஞான உலகில் செய்மதிகளின் பயன்பாடு தகவல் தொடர்பின் புதிய யுகத்தை உருவாக்கியுள்ளது. உலகில் பல பாகங்களிலுமுள்ள நிலையங்களை மைக்ரோ அலை வரிசைகள் மூலம் செய்மதிகள் பிணைக்கின்றன. பூமிக்கு சுமார் 36000 கிலோமீற்றர் தூரத்தில் வான் வெளியில் மூன்று செய்மதிகள் ஒரு சீரமைப்பில் நிறுத்தினால் அவை மூலம் உலகின் எந்தப் பக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும்.

முதன்முதலில் ஐக்கிய அமெரிக்கா ரெல்ஸ்ரா என்னும் செய்மதியை விண்வெளிக்கு அனுப்பி சர்வதேச தொலைபேசி பரிமாற்றத்தினால் சாதனை நிலை நாட்டியது. செய்மதி புவியைச் சுற்றும் வேகம் புவி தன்னைத் தானே சுற்றும் வேகத்திற்கு சமனாகும். இதனால் செய்மதி ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கியுள்ளது. இந்தியா "இன்சாட்" என்ற 3 செய்மதிகள் மூலம் தனது பரந்த உப கண்டத்தின் தகவல் தொடர்பை நிறுவியுள்ளது.

பக்ஸ் எனப்படும் எலக்ரோனிக் தபால் சேவை இன்று இலங்கை உட்பட பல நாடுகளிலும் செய்திப்பரிமாற்றம் ஆகிவிட்டது. இத் தபாற் சேவைக்கு கணனி, தொலைபேசி, மொடேன் இயந்திரம் மூலம் இச் சேவை இலகுபடுத்தப் பட்டுள்ளது.

இலங்கையில் தபாற் சேவை சிறப்பாகி இயங்கி வருகின்றது. 500 இற்கு மேற்பட்ட பெரிய தபாற்கந்தோர்களும் 3200 ற்கும் உபதபாற் கந்தோர்களும் உண்டு. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் லங்காதீப்சிறுமின, டெயிலிநியூஸ், ஒப்சேவ, சன்டேரைம்ஸ், வீரகேசரி, தினகரன், உதயன், ஈழநாதம், ஈழநாடு போன்ற தினசரிப்பத்திரிகைகளும் நெயிட்டர், பீரிஜ, லங்காபுவத் முதலான செய்தித் தாபனங்களும் இயங்கி வருகின்றன.

இலங்கை வானொலியுடன் தனியார் வானொலி பலவும் இயங்கி வருகின்றன. இலங்கையில் ரூபவாகினி, T.N.L, E.T.V, I.T.N போன்ற தொலைக்காட்சி நிலையங்களும் உண்டு. தொடர்புச்சாதனங்களின் வளர்ச்சியினால் இன்று உலகம் சுருங்கி விட்டது. உலக உறவுகளை இணைத்துக் கொள்ளவும், அரசியல் உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், நேரம் மீதப்படுத்தப்படு கின்றது. காலதாமதமடையாமல் உரிய தகவல்களை உடனுக்குடன் உரிய நேரத்தில் பெறக்கூடியதாக உள்ளது. ஏராளமான நன்மைகள் இருந்த போதும் சில தீமைகளும் உண்டு. அதிக பணம் வீண்விரயப்படுகின்றது. கலாச்சாரம், சீரழிவு ஏற்படுகின்றது. நடைமுறைச் சமுதாயப் பிரச்சினைகள் ஏற்படுகின்றது என்று கூறிய போதும் விஞ்ஞான உலகில் தொலைத்தொடர்புச் சாதன வளர்ச்சி பல்கிப் பெருகி வருவதை நாம் எவரும் மறக்கக் கூடாது.

# விந்தை மிகு விஞ்ஞானம்

மு. மதீபன்
தரம் 8

"செத்தாற் பிழைக்க அறியான்" என்ற வார்த்தைகள் இன்று மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டன. மனிதன் சிந்தனைக்கு விருந்தாக பல்துறையில் விஞ்ஞானம் வளர்ந்து நிற்கின்றது . அணுவைப்பிளந்து சக்தியைப் பெறலாம் என்ற மாமேதை ஐன்ஸ்டீன் தொடக்கம் பல்வேறு சிந்தனைச் சிற்பிகள் இந்த மண்ணுலகை வாழ வைத்திருக்கின்றார்கள். நீர் மேல் நடக்கலாம், வான்மேல் பறக்கலாம் என்ற தாயுமானவரின் மெஞ்ஞானம், விஞ்ஞானத்தின் விளைபொருளாய் அமைந்ததை இன்று அனுபவிக்கின்றோம். அணுவின் தாண்டவம் என்ற கருத்தை உற்று நோக்கும் போது சர்வமும் விஞ்ஞானமும் செழிப்புற்று வளம் பெறுவதைக் காண முடிகின்றது.

வியாபித்த வியனுலகில் விஞ்ஞானத்தின் விரல்கள் படாத இடமில்லை. வாழ்வியலோடு இரண்டறக் கலந்த நிலையில் அதன் விளைவு பல்கிப் பயன் தருவதைக் காணமுடிகின்றது. சர்வமும் இயந்திர மயம் என்னுமளவிற்கு பிரமன் படைப்பாகிய மனித இயந்திரம் பயன் பெறுவதைக் காணும் போது வியப்பாகத்தான் இருக்கின்றது. பாடசாலையில் ஆய்வுகூடம், தொழில்வள நிலையங்களில் ஆய்வு கூடம் இவை நமக்குப் புதியவை அல்ல. இவற்றை எல்லாம் மிஞ்சி அண்ட வெளியில் ஆய்வு கூடங்கள் மனித வள மேம்பாட்டிற்கு அவை தொழிற்படுகின்றன.அத்துடன் வல்லரசுகள், பரிபாலனமும் இங்கு நிலை நிறுத்தப் பாடுபடுகின்றதென்றால் அதற்கு விஞ்ஞானத்தின் வளர்ச்சியே காரணமாகும்.

பூமிப் பந்தை நில் என்றால் நிற்க வைக்கும் ஆற்றலைக்கூட வளரும் விஞ்ஞானம் செய்து விடுமோ என்று சிந்தித்தால் பிழையாகாது போலும் விண் கற்கள் மனித கலத்தை அழிக்க வருகின்ற போதெல்லாம் கணிப்பின் தன்மையால் அவற்றிலிருந்து விலகியிருக்கும் வாய்ப்பையும் விஞ்ஞானம் வழங்கியிருக்கின்றது. வாழாவிருக்கும் பூமியில் வாடி வதங்குபவர்கள் நாம், வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் பசுமைப்புரட்சி செய்வது பாரதபூமியில் இது போன்று மேற்குலக நாடுகளில் விஞ்ஞானிகளின் அயராத முயற்சியில் முகிழ்க்கும் கண்டு பிடிப்புக்கள் படை, குடி, கூழ், அமைச்சு என்னும் அரண்களை விஞ்சி பெரும் பாதுகாப்பும் நலமும் செய்கின்றன.

"சந்திர மண்டலத்தின் இயல்பைக் கண்டு தெளிவோம்" என்ற பாரதியின் எண்ணம் நிரூபிக்கப்பட்டது. தசாப்தங்கள் பலவாகிற்று இன்று செவ்வாய், வெள்ளி, சனி போன்ற கிரகங்களுக்கே சென்று நடத்தியும் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பூமியில் மட்டும் தான் மனித குலம் இல்லை அண்ட வெளியில் வேறு கோள்களிலும் இருக்கலாம் என்ற உண்மையைத் தேடி உழைக்க உதவுவது விஞ்ஞானமே. பாதுகாப்பு நிலையில் விஞ்ஞானம் பூரண உதவிகளைச் செய்கின்றது. எதிரியை நொடிப்பொழுதில் அழிக்க உதவுகின்றது. இவை எல்லாம் அணு யுகத்தில் திசை திருப்பிய வளர்ச்சிகள்.

மனித வாழ்விற்கும் வளத்திற்கு விஞ்ஞானம் உதவுகின்றது. ஆறொண்ணா வலியையும் நோவையும் தந்து நிற்கும் அறுவைச்சிகிச்சைகளை கத்தி இன்றி, இரத்தமின்றி லேசர் முறையால் தீர்த்து வைக்கின்றது. மனிதக் கூட்டிலி ஐம்பூதங்களின் ஆட்சி நடக்கிறது. ஐம்புல வேடர்கள் ஆட்டிப் படைக்கிறார்கள் அவற்றிற்கு ஆதரவளிப்பது போல் ஒலி, ஒளியின் காந்த நிலைச் சக்திகள் பல்வேறு வகையில் பயன்பட விஞ்ஞானமே உதவுகின்றது.

வளர்ந்து விட்ட விஞ்ஞானம் உபகரணங்களால் மாதக் கணக்கில் முடங்கிக் கிடக்கும் மனிதனை மணிக்கணக்கில் நிவர்த்தியாக்கும் நிலை விஞ்ஞானத்தால் விளைந்தமையே, உதாரணத்திற்கு கண்பு - சத்திர சிகிச்சை வெகு துல்லியமாகவும் வெற்றிகரமாகவும் செய்யப்படுகின்றது. இது போல கல்லடைசல் நோய் ஒலி அலைகளால் நிவர்த்தி செய்யப்படுகின்றது. தொட்டுப் பார்க்க முடியாது உடல் அக உறுப்புகளில் ஊசிமருந்து ஏற்றுதல், சிகிச்சை அளித்தல் என்பன விஞ்ஞானத்தின் உதவியோடு சுலபமாகச் செய்யப்படுகின்றது. மருத்துவம், தொழில்சார் முறை, வாழ்வியல் போன்ற பல்வேறு துறைகள் இன்று விஞ்ஞான வளர்ச்சியில் சங்கமமாகி சந்தோஷமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றன.

இதயமாற்று, விழிமாற்று, சிறுநீரகமாற்று போன்ற மாற்று அறுவைச்சிகிச்சைகள் விஞ்ஞான வளர்ச்சியின் விந்தைகளே. விபத்தில் துண்டிக்கப்படும் உறுப்புக்களைப் பொருத்துதல் போன்ற வியக்கத்தக்க மருத்துவ முன்னேற்றங்கள் கண்டு தூக்கும் காலமிது. எண்ணும் எழுத்தும் கண்ணென்றான் வள்ளுவன் அந்த வகைக்கு எண்ணின் பக்கம் கண்ணைத் திருப்பினால் கணனிப்பொறி வாழ்வியலில் சுமையைச் சுருக்கிப் பல்வேறு மட்டங்களில் புதுமை செய்கிறது. பத்துச் சிறிய எண்களின் ஆட்சியே உலகில் செங்கோலோச்சுகிறது. எண் கோலங்களின் அழகு ரம்மியமான இன்பத்தைத் தரும் அவற்றை நுகர விளைந்தால் பிறிதொரு கட்டுரையாய்ப் பல்கிப் பெருகும் என்ற அச்சத்தால் அதனை நிறுத்துவோம்.

எண் என்பது விஞ்ஞான விந்தையின் உயிர்நாடி ஆகும். $E = \frac{1}{2} mc^2$ என்ற சமன்பாட்டை மாமேதை ஐன்ஸ்ரீன் கண்டுபிடிக்க கணிதக் கருதுணை நின்றது. இதுவே அண்ட வெளிப்பயணத்திற்கு வழிகோலியது. கோள்களோடு பயணம் என்ற காலம் அண்மித்துக் கொண்டு வருகின்றது. வானிலே நடக்கிறார்கள், ஆய்வு செய்கிறார்கள் பூமியில் நான்கு அடி உயரம் பாயக் கூடியவன் சந்திரனில் 24 அடி பாயும் திறனைப் பெறுகின்றான். இது ஈர்ப்பின் விளைவு

தொடர்பாடல் விருத்தி உலகை ஒரு கையடக்கமாக்கியுள்ளது. ஈமெயில், இன்ரநெற் போன்றவற்றின் வருகை தொடர்பினை மேலும் செறிவு படுத்தியிருக்கின்றது. இவ்வாறு விஞ்ஞானத்தின் விந்தை கல்வி, போக்குவரத்து, தொடர்பாடல், மனித வளம் போன்ற துறைகளையும் மருத்துவம், வேளாண்மை போன்ற பல்வேறு துறைப்பயன் பாட்டையும் எமக்கு அளித்திருக்கின்றது. நமது முன்னோர் கண்ட மெஞ்ஞானத்தின் விளக்கமும் விடுவிப்புமாக விஞ்ஞானம் பரந்து செறிந்து பயன் பல நல்கின்றது.

விஞ்ஞான எழுத்தாளரும் விஞ்ஞானியுமான ஆர்தர்.ஸி கிளார்க் விஞ்ஞான விந்தைகளைச் சுவைபடக் கூறியுள்ளார். விஞ்ஞானத்தையும், மனித வாழ்வையும் பிரிக்க முடியாத அளவிற்கு வாழ்வியல் முன்னேற்றங்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. மனித வலு பிரயோகிக்கப்படாது இயந்திர மயமான வாழ்வியலுக்கு மனிதன் போய்க் கொண்டிருக்கின்றான். உணவை வில்லையாக்கி வருங்காலங்களில் உயிர் வாழும் நிலை துய்க்கப்படும். ஆடையின்றி வாடையில் நலிந்த மனிதன் சிந்தனை விருத்தியால் விஞ்ஞான விந்தைகளைத் தனதாக்கிக் கொண்டு இமயம் போல் வளர்ந்து நிற்கின்றான். இதயம் களி கொள்கின்றது. எல்லையில் வண்ணம் வளர்க்க விஞ்ஞானம் வளர்க தொல்லைகள் தளர்க!

# My first day at school

*A.Ragentha.*
*"7 B"*

